சிந்தாமணி

ரூ 2/50

CHINTAMANI THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

இல. 723 1983 அக்டோபர் 16 ஞாயிற்றுக்கிழமை

★ ★ சிந்தாமணி

சர்வ கட்சி மாநாடு புதன்கிழமை

தமிழர் விடுதலை கூட்டணிக்கு இதுவரை அழைப்பு இல்லை

ஐந்து கட்சிகள் பங்கு பற்றலாம்

கொழும்பு, அக். 16

தமிழர் பிரச்சினை, வடபகுதி விவகாரம் ஆகியவை தொடர்பான சர்வ கட்சி மாநாடு எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் ஜனாதிபதியின் புதிய செயலகத்தில் நடைபெறும், சர்வகட்சி மாநாட்டுக்கு 5 கட்சிகள் அழைக்கப்பட்டிருக்கின்றன, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இதுவரை அழைப்பு அனுப்பப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன (எம்.ஈ.பி.) ஆகியவையே சர்வகட்சி மாநாட்டுக்கு இதுவரை அழைக்கப்பட்ட கட்சிகளாகும்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவசரகால சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத் தடையை நீக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்பே கம்யூனிஸ்ட் கட்சிக்கான அழைப்பு அதன் பொதுச் செயலாளர் திரு. கே. பி. சில்வாவுக்கு அனுப்பப்பட்டது.

புதன்கிழமை நடை[illegible] சர்வகட்சி மாநாட்டில் [illegible] க. சார்பில் அதன் பொது[illegible]லாளர் ஹார்சா அபேவர்த்தனவும், தலைவர் திரு. என். ஜி. பி. பண்டிதரத்னவும், மற்றும் இரு [illegible] உறுப்பினர்களும் பங்குபற்றுவார்கள்.

ஏனைய நான்கு கட்சிகளில் செய்தி அச்சுக்குப் போகும்வரை ஸ்ரீ.ல.சு. கட்சியே அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளது. அக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்று ஸ்ரீ.ல.சு.க. சார்பில் மாநாட்டில் கலந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்றிரவு யூகோஸ்லாவியா பயணமாக இருந்தார்.

மற்றைய மூன்று கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, எம்.ஈ.பி. ஆகியவை மாநாட்டில் கலந்துகொள்வதா அல்லது இல்லையா என்பது குறித்து நேற்று (சனி) மாலை முடிவு செய்ய இருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு இதுவரை அழைப்பு அனுப்பப்படவில்லை. (த)

கூட்டணிக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதா?

ஜனாதிபதியிடம் விளக்கம் கேட்டு லங்கா சமசமாஜக் கட்சி கடிதம்

கொழும்பு, அக். 16

எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற இருக்கும் சர்வகட்சி மாநாட்டுக்கு எந்தெந்தக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது? குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்

(2ஆம் பக்கம் பார்க்க)

பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் திருத்தம்

கொழும்பு, அக். 16

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலீஸாருக்கும், ஆயுதப் படையினருக்கும் சாதாரண சட்டதிட்டங்களில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்.

இதற்காக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்ட வரைவு ஒன்றை அரசு விரைவில் கொண்டு வர இருக்கிறது.

இலங்கை சட்ட கமிஷனின் சிபார்சை அடுத்தே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கடமை நேரத்தின் போது நடைபெற்ற குற்றச் செயல் தொடர்பாக ஆயுதப் படைவீரர் ஒருவர் கைது செய்யப்படுவாராகில் அவரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கத் தேவையில்லை. அதற்கு புதிய சட்ட விதி வசதியளிக்கும். பதிலாக அவ்வாறான ஒருவர் இராணுவ முகாம் ஒன்றிலேயே தடுத்து வைக்கப்படுவார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும் இதன்மூலம் நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்

(2ஆம் பக்கம் பார்க்க)

இந்திய வம்சாவளியினர் பிரச்சினை தமிழ் ஈழம் மூலம் தீரமாட்டாது

சென்னையில் தொண்டமான்

சென்னை, அக். 15

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்சினை தமிழ் ஈழம் பெறுவதால் மட்டும் தீர்ந்து விடாது. இந்திய வம்சாவளியினர் யாழ்ப்பாணம் சென்று வாழத் தயாரில்லை. அவர்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவே விரும்புகிறார்கள்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தித் துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் சென்னையில் நிருபர்களுக்குப் பேட்டி அளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம், இலங்கைக்கு இந்திய இராணுவம், பார்த்தசாரதி விஜயம் ஆகியவை தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு திரு. தொண்டமான் பதில் அளித்தார்.

யாழ். மக்களின் தமிழ் ஈழக் கோரிக்கையை ஆதரிக்கிறீர்களா? என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் அளிக்கையில், அதுபற்றி தாம் கருத்துத் தெரிவிக்க

(2 ஆம் பக்கம் பார்க்க)

வில்லாகப் புருவத்தை வளைத்து – கூர் விழியம்பை வீச்சாகத் தொடுத்து – இரு குன்றுள கனிகளைப் பறவை – கொத்திக் குடையாமல் காக்கின்றாள் அரிவை.

முகத்துவாரம்

காளி கோயில் புனரமைப்பு

ஜனாதிபதி நிதியிலிருந்து பணம்

கொழும்பு, அக். 16

அண்மையில் நடைபெற்ற இனக்கலவரத்தின் போது சேதமடைந்த கொழும்பு முகத்துவாரம் காளி கோயிலை புனரமைக்க ஜனாதிபதி நிதியில் இருந்து உதவி வழங்கப்படும்.

முகத்துவாரம் காளி கோயிலை புனரமைக்க வேண்டிய அவசியம் குறித்து பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை ஜனாதிபதியிடம் விளக்கி இருந்தார்.

இதனை அடுத்தே ஜனாதிபதி நிதியில் இருந்து நிதி ஒதுக்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

அமைச்சர் திரு. இராசதுரை அண்மையில் காளி கோவிலுக்கு விஜயம் செய்து சேதத்தை நேரில் பார்வையிட்டிருந்தார். (த-மு)

மன்னாருக்கு அரசரத்தினம்

கொழும்பு, அக். 16

தலைமன்னார் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியாக திரு. எம். அரசரத்தினம் நியமிக்கப்பட்டார்.

திரு. அரசரத்தினம் இப்பொழுது அங்குராவத் தோட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வருகிறார்.

இதேவேளையில் ஏறாவூர் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் திரு. [illegible] நியமிக்கப்பட்டுள்ளார். ஏறாவூர் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் திரு. இலங்கசிறி [illegible] பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (த-மு)

வீடு சோதனை

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதனது கடிதத்துடன் கைது செய்யப்பட்ட வல்லுவன் இராஜலிங்கத்தின் பண்டத்தரிப்பு வீடு வெள்ளியன்று பலத்த சோதனைக்கு உள்ளானது. (த-12

அகதிகளுக்கான அன்பளிப்புப் பொருள்கள் முறையாகவே விநியோகம்

சீர்கேடு இல்லை என்கிறார் பிரட்மன்

கொழும்பு, அக். 16

சமீபத்திய கலவரம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகம் செய்வதற்குப் பல்வேறு நாடுகளும் வழங்கிய பல தரப்பட்ட அன்பளிப்புப் பொருள்களும் முறையாகவே விநியோகம் செய்யப்பட்டன.

இந்த அன்பளிப்புப் பொருள்களின் விநியோகத்தில் சீர்கேடு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் மறுத்தார்.

அன்பளிப்புப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்ட முறை குறித்து அவர் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இதுபற்றி வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர்

(2ஆம் பக்கம் பார்க்க)

● யாழ்ப்பாணக் கல்லூரியில்

ரேனியோ [illegible] மெஷின், இரசாய[illegible] பொருள்கள் கொள்[illegible]

— சிந்தாமணி நிருபர்: கே. அர[illegible]

யா[illegible]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் [illegible] ஒன்றும், இராசாயனப் பொருள்களும் கொள்ளை [illegible]

கல்லூரி காவலாளியைக் கட்டி வைத்து வி[illegible] கொள்ளையை நடத்தினர்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற இச் சம்பவ[illegible] கேசன்துறைப் பொலீஸார் விசாரணை நடத்தி வ[illegible]

இதற்கிடையில் அளவெட்டியில் இரு சை[illegible] யடிக்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணக் கல்லூரியில் கொள்ளைய[illegible] சைக்கிள்களைக் கொள்ளையடித்து அதில் வட்டுக்[illegible] ருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்[illegible]

தம்பிலுவில் வங்கி கொள்ளை முயற்சி

உழவு இயந்திரம் வந்ததால் தோல்வி

— சிந்தாமணி நிருபர்: இரா. செல்வராஜா —

கொழும்பு, அக். 16

தம்பிலுவில் இலங்கை வங்கி கிளையில் வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி எதிர்பாராத விதமாக வந்த உழவு இயந்திரத்தினால் தோல்வி அடைந்தது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:—

எட்டு இளைஞர்கள் துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வங்கிக்கு வந்தார்கள். அவர்கள் கட்டைக் காற்சட்டை அணிந்து, முக மூடியுடன் காணப்பட்டார்கள்.

அப்பொழுது வங்கியில் இரண்டு காவலர்கள் கடமையில் இருந்தனர். வந்தவர்களில் இருவர் துப்பாக்கி முனையில் காவலர்கள் இருவரை மடக்கிப் பிடித்தனர். மிகுதி ஆறுபேரும் ஓட்டைப் பிரித்துக் கொண்டு வங்கியின் உள்ளே இறங்கினர்.

அவர்கள் முதலில் இரும்பு அலுமாரியை உடைத்தனர். தேடுதல் நடத்தினர். பணமோ, நகையோ அல்லது ஆயுதங்களோ இருக்கவில்லை. அடுத்த அலுமாரியை உடைக்க முயற்சித்தனர். அப்பொழுது எங்கிருந்தோ உழவு இயந்திரம் ஒன்று அந்த வழியாக வந்தது.

ஏதோ ஆபத்து வரப் போகிறது என்று எண்ணிய காவலுக்கு இருந்த இரண்டு துப்பாக்கி இளைஞர்களும் விசில் ஒன்றை எடுத்து ஊதினர். பின்பு அனைவரும் தப்பி ஓடினர்.

மோதர[illegible] தலைமையிலான பொலீஸ் கோஷ்டி விசாரணையில் ஈடுபட்டு வருகிறது. (த-மு)

உடல் உபாதை[illegible] அற்ற மரணம்

கைதிகள் அப்பீல் வெற்றி

வாஷிங்டன், அக். 15

கைதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப் பயன்படுத்தப்படும் நச்சு மருந்துகள் உடல் உபாதையைக் கொடுக்காதவையாக இருக்கவேண்டும்.

இப்படி ஒரு தீர்ப்பை அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கியது.

மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் கைதிகளினால் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதே நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியது.

டெக்ஸாஸ், ஒக்லகோமா மாநிலங்களைச் சேர்ந்த கைதிகளே இதற்கான மேன்முறையீட்டைச் செய்திருந்தார்கள்.

நீதிமன்றம் இரண்டுக்கு ஒன்றாகப் பிரிந்து இத் தீர்ப்பை வழங்கியது.

அமெரிக்காவில் உள்ள 50 மாநிலங்களில் 11 மாநிலங்களில் மரண தண்டனை நச்சு ஊசிகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

நான்கு மாநிலங்கள் மரண தண்டனைக் கைதிகளின் விருப்பத்துக்கு ஏற்றவாறு தண்டனையை நிறைவேற்றுகின்றன. (த-ன)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

சிந்தாமணி
சிறுவிளம்பரங்கள்

"விலாசங்கள்"

தமிழில் தொடர்பு கொள்ளக் கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு பேனா நண்பர்களின் விலாசங்களை, தபாலில் பெற விரும்புவோர் 4/50க்கான முத்திரை அனுப்புக! "PENPALS CLUB" 189, Central Road, Colombo-12.

வி.இ:- 096191

ஆலிம் தேவை

கற்பிட்டி இல்லவதுறை ஜும்ஆப் பள்ளிக்கு தற்கால முறைப்படி கொதுபா, ஐந்து நேர இமாமத்து, குர்ஆன் மதரசா நடாத்த ஓர் அனுபவமிக்க ஆலிம் தேவைப்படுகிறது. தகைமைக்கேற்ப சம்பளமும், இரு வேளை உணவும் வழங்கப்படும். நல்ல ஊர் வருவாயுமுண்டு. விண்ணப்பிக்கவும்: நம்பிக்கையாளர் இல. 5, குறுக்கு வீதி, இல்லவதுறை, கற்பிட்டி.

விளையாட்டுச் சாமான்கள்

இறக்குமதி செய்த அழகான பொம்மைகள், பிளாஸ்டிக் திராட்சை பழக் கொத்துக்கள் பட்டரி கார்கள், இங்லிஷ் பின்னல் லூம், பின்னல் ஊசிகள், பேபி கொட்சிட் முதலியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். ஸ்டேன்லீஸ், 192, மெயின் வீதி, கொழும்பு - 11.

வி. இ:- 242377

விற்பனைக்கு

கல்குடா கடற்கரைக்கு சமீபத்தில் சகல வசதிகளுமுள்ள இரண்டு ஏக்கரிலான உல்லாச விடுதி விற்பனைக்கு உள்ளது, பிரச்சினையற்ற உறுதிப் பூமி, விற்பனை விலை இரண்டரை இலட்சம் ரூபா சிந்த மேல்.
Samuel Edenland, Kalkudah

வி. இ: 047695

வீடு விற்பனை

68/40 ஆம் இலக்க வீடு ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13, [illegible] தோச்சித்தலையில் உடன் விற் [illegible]க்கு உள்ளது. மின்சார தண் [illegible] வசதியுடன் கூடியது. அதே [illegible]ரிக்கு நேரில் வரவும்.

வி. இ. 050214

பூமரலாஜி

[illegible] அபிமானிகளின் [illegible] எமது சேவையைத் [illegible] தத்தமது பிறந்த [illegible]யரையும், வாழ்க் [illegible]ன்ன பல அம் [illegible]திர்ஷ்டமாக்கிக் [illegible]கரமாக வாழ [illegible]கு எழுதலாம். [illegible] 86, Horana [illegible] Panadura

[illegible] இ. 044448

ாத்

[illegible] அருளிலும் [illegible]ம், நோய், [illegible]ங்கள் பிரச் [illegible]தீர்த்து வைப் [illegible]ாம் 5, முன் [illegible]ழுதங்கள், வாச [illegible]நீடிகவே பீடி பெக் [illegible]ரு வீதி, மருத

வி. இ:- 050137

மண்களுக்கு

பெண்களின் மாதவிடாய் எவ்வளவு தாமதமானாலும் உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்தேகங்கள் பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம் தினசரி திறந்திருக்கும். இராஸ் கிளினிக் மாதன் கடவல.

வி. இ:- 242376

கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ, தனது உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாத மெலிந்த, தளர்ந்து போன பெண்களுக்கு அழகான பருமனை மார்பகங்களையும் தோற்றத்தையும் பெற விரும்பினால், சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க. முகவரி: வீனஸ் அத்தநாயக்க, 55, மிருந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ:- 096244

ஆங்கில நூல்

தமிழின் உதவியுடன் இலகு வழியில் ஆங்கிலஞ் பயின்று உரையாடவும் - எழுதவும் உதவும் நூலாக 'EASY ENGLISH' விலை: 12/50 வி. பி. பியிலும் பெறலாம். இலக்கண ரீதியாக பயிலும் இச் சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.
S. Hariharan, 63/11, Paramananda Vihara Mawatha, Colombo 13.

வி. இ. 096190

பேனா நண்பர்

பேனாமூலமாக உலகம் சுற்றுங்கள், உலகச் சவாரி செய்யுங்கள், பெறுமதியான பரிசுகளுடன் அறிவையும், நட்பையும் வளர்த்துக் கொள்ள 2000 நண்பர், நண்பிகளுடன் தொடர்பு கொள்ளுங்கள். ரன்துவ, த. பெ. 1128, கொழும்பு - 1.

வி. இ: 051167.

முதலீடும் லாபமும்

எந்த இனத்தை, சமயத்தைச் சேர்ந்தவராலும் நீடித்த பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அதிக லாபம் உழைக்கும் வர்த்தகராகக் கூடிய சந்தர்ப்பத்தை எமது நிறுவனத்தின் மூலம் அடைந்து கொள்ளலாம். நீங்கள் எங்கு வசித்தாலும் உங்கள் முதலீடும் இலாபமும் பாதுகாக்கப்படும். இயக்குனர்: த. பெ. 1128, கொழும்பு - 1.

வி. இ: 051167

மலையாள மாந்திரீகம்

ஆரம்பக் கல்வி முதல் பட்ட... சட்டப்படிப்பு மாணவர்களின் ஞாபக சக்தி - திறமைச் சித்தி போன்ற அனைத்தும் கைகூட கல்வி ஞானக் கவசம், மற்றும் ஆண், பெண், வசியம், வியாபார விருத்தி யந்திரம் இவைகளுக்கு 130/- மட்டுமே. இலவச தொடர்புகளில்லை. மணியோடருடன் தொடர்பு கொள்க. நேரிலெனில்... வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வருக. சோதிட தத்துவஞானி, பி. கே. சாமி, 33, தினச்சந்தை - நுவரெலியா.

வி. இ:- 242375

ஆடவர்களுக்கு!

ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்து கொள்ள விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி:- பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர், (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிருந்து மாவத்தை, கொழும்பு - 12.

வி. இ:- 096244

ஜோதிட கணிப்பு

* பிறந்த - ருதுக் குறிப்பு - 25/- * பிறந்த ஜாதகக் குறிப்பு - 55/- (புத்தக வடிவில்) * திருமணப் பொருத்தம் - 30/- * தற்போதைய பலன் அறிய - 15/- * என் ஞானக் குறிப்பேடு - 55/- (நடந்த 4 - நடப்பது 5 வருடம்) இலவச கடிதத் தொடர்போ - வி. பி. பி. ஆடரோ கவனிக்கப்படமாட்டாது. மணியோடருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோதிட தத்துவஞானி P. K. சாமி 33, தினச்சந்தை - நுவரெலியா.

வி. இ:- 242375

யந்திரம் மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத சொல்லியும் பலன் கிடைக்காத மனக்கஷ்டங்களா, காதலர்களுடைய பாசம் மாறாமல் இருக்க வேண்டுமா; கணவன் மனைவியிடையே உள்ள சச்சரவு வெறுப்பு சந்தேகம் தீர வேண்டுமா, குடும்பத்தில் அன்பும் சமாதானமும் நிலைக்க வேண்டுமா, தேவையானவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா, இவை யாவற்றிற்கும் நிவாரணமளிக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா. விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க முகவரி: பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம 'தர்மகர்த்தா') 55, மிருந்து மாவத்தை, கொழும்பு - 12. தொலைபேசி- 33955.

வி. இ:- 096244

சேதமுற்ற கட்டட உரிமையாளர் மீது வழக்கு

மாநகர சபை மேயர் எச்சரிக்கை

கொழும்பு, அக். 16

கொழும்பு நகரத்தில் பொது மக்களின் உயிருக்குக் குந்தகமாக இருக்கும் சேதமுற்ற கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

— இப்படி ஒரு எச்சரிக்கையை கொழும்பு மாநகர முதல்வர் திரு. சிறிசேன கூரே விடுத்தார்.

சேதமுற்ற கட்டடங்கள் பலவற்றின் உரிமையாளர்களுக்கு கொழும்பு மாநகரசபை எச்சரிக்கையை அனுப்பி வைத்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

இவ்வாறான கட்டடங்களில் பெரும்பாலானவை சமீபத்திய இனக் கலவரத்தின் போதே சேதமுற்றவை என்றும் அவர் கூறினார்.

இந்தக் கட்டடங்கள் ரீப்பியாவின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்ட போதிலும் கட்டடங்களின் உரிமையாளர்களே தொடர்ந்து அவற்றுக்குப் பொறுப்பாக இருந்து வருகின்றனர்.

சமீபத்தில் இவ்வாறான கட்டடங்கள் சில இடிந்து நொறுங்கியதில் குறைந்த பட்சம் 6 பேர் மாண்டார்கள். பலர் காயமுற்றார்கள்.

சேதமுற்ற கட்டடங்கள் உள்ள பகுதிகளில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

(த-ண)

சிறையிலிருந்து தப்பிய நபர் மீண்டும் கைது

சிறுமியின் காதணியை அறுத்தாராம்

யாழ்ப்பாணம், அக். 15

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து தப்பிய சந்தேக நபர் ஒருவர் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள இமையாணன் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டார்.

சிறுமி ஒருவரின் காதணியை அறுத்துக் கொண்டு ஓடிய பின்னரே பொதுமக்களின் உதவியுடன் இவர் கைது செய்யப்பட்டார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

சோதிலிங்கம் சிவமணி, அண்மையில் நிகழ்ந்த மட்டக்களப்பு சிறை உடைப்புச் சம்பவத்தின் போது தப்பிச் சென்றவர். அவர் இதுவரை கைது செய்யப்படாது இருந்தார்.

சம்பவதினம் பாடசாலைச் சிறுமி ஒருவரின் காதணியை அறுத்துக் கொண்டு இவர் ஓடினாராம். பின்பு உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள சமரவாகு என்ற இடத்தில் இவர் [illegible]து அருந்திக் கொண்டிருந்த சமயம் பொது மக்கள் இவரைப் பிடித்து வல்வெட்டித்துறை பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைதான நபர் தொடர்பான விசாரணையை வல்வெட்டித்துறைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

(த-120)

ஐ. தொ. கா. செயற்குழு இன்று கூடுகிறது

கொழும்பு, அக். 16

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் செயற் குழுக் கூட்டம் இன்று அதன் தலைமையகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்குத் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் தலைமை வகிப்பார்.

அண்மையில் நடைபெற்ற வன்செயல்களின் போது பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் இன்றைய நிலை குறித்தும் கூட்டத்தில் ஆராயப்படும்.

இதேவேளை பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளியினர் பிரச்சினைக்கு தீர்வுகாண காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஸீஸ் இந்தியத் தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடனும் கடிதம் மூலம் அவர் தொடர்பு கொண்டுள்ளார்.

தோட்டக் கமிட்டித் தலைவர்களை நேரில் சந்திப்பதற்காக ஜனாப் அஸீஸ், பொதுச் செயலாளர் திரு. வி. பி. கணேசன் நிதிச் செயலாளர் திரு. ஆர். ஏ. சாமிமுத்து ஆகியோர் அடுத்த வாரம் மலையகப் பகுதிக்கு [illegible]ஜயம் செய்ய உள்ளனர்.

(த-11)

சுவீப் முடிவுகள்

கொழும்பு, அக். 16— நேற்று முன்தினம் கொழும்பில் இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:—

முதலாம் பரிசு

16 K 0758

ரூ. 2 லட்சம்

இரண்டாம் பரிசு

02 Q 0704

ரூ. 75 ஆயிரம்

மூன்றாம் பரிசு

02 N 0431

ரூ. 25 ஆயிரம்

தலா 900 ரூபா பெறும் 100 ஆறுதல் பரிசுகள்:-

12 A 0564 16 A 0386
17 A 0484 20 A 0262
20 A 0570 20 A 0972
01 B 0090 06 B 0836
12 B 0379
07 C 0345 09 C 0849
15 C 0552 20 C 0102
08 D 0790
03 E 0424 03 E 0472
08 E 0444 18 E 0508
19 E 0789
01 F 0167 01 F 0183
03 F 0028 07 F 0196
07 F 0253 11 F 0312
11 F 0834 13 F 0538
15 F 0635 20 F 0612
15 F 0635 20 F 0612
04 G 0984 0[illegible] G 0581
06 G 0151 [illegible] G 0158
17 G 05[illegible]
08 H 0673 17 H 0877
07 J 0818 12 J 0265
16 J 0312
01 K 0884 06 K 0595
10 K 0134 11 K 0107
13 K 0738 19 K 0484
20 K 0113
18 L 0723
09 M 0077 11 M 0830
19 M 0550 2[illegible] M 0304
01 M 0084
14 N 0539 18 N 0966
20 N 0384
14 O 0301
03 P 0943 04 P 0822
13 P 0297 17 P 0920
20 P 0823
01 Q 0633 16 Q 0622
16 Q 0794
03 R 0284 04 R 0813
09 R 0339 12 R 0374
14 R 0075
09 S 0868 13 S 0278
15 S 0824
02 T 0723 07 T 0074
15 T 0225
03 U 0789 09 U 0806
03 V 0188 15 V 0222
20 V 0787
09 W 0821 09 W 0886
11 W 0881 15 W 0708
15 W 0934 17 W 0351
18 W 0247
02 X 0172 14 X 0018
16 X 0222
03 Y 0221 04 Y 0206
05 Y 0561 09 Y 0765
10 Y 0654 11 Y 0659
13 Y 0818
01 Z 0780 06 Z 0841
11 Z 0458

கூட்டணி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறதா?

மேற்கண்டவாறு கேட்டு லங்கா சமசமாஜக் கட்சி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியிருக்கிறது.

எதிர்வரும் புதன்கிழமை நடைபெற உள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளும்படி லங்கா சமசமாஜக் கட்சிக்கும் ஜனாதிபதியின் செயலகத்தில் இருந்து அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது.

இதற்குப் பதில் அளிக்கும் விதத்தில் எழுதிய கடிதத்திலேயே தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறதா என்று லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பேர்னாட் சொய்ஸா கேட்டுள்ளார்.

தமிழர் பிரச்சினை தொடர்பாக ஆராயத்தான் சர்வகட்சி மாநாடு கூட்டப்படுகிறதா என்றும் தனது கடிதத்தில் லங்கா சமசமாஜக் கட்சி கேட்டுள்ளது.

மாநாட்டின் நோக்கம் அது தான் என்றால் அது பயனுள்ளதாகவும், முக்கியமானதாகவும் இருக்கும் என்றும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட இரண்டு விடயங்களுக்கும் 19 ஆம் திகதிக்கு முன் பதில் அனுப்பும்படி லங்கா சமசமாஜக் கட்சி கோரியிருக்கிறது.

(த)

அகதிகளுக்கான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஏர்னஸ்ட் கொரியாவுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கு கிடைக்க வேண்டிய உணவுப் பொருள்களும் மற்றும் பொருள்களும் வேறு நபர்கள் கைவசம் சென்றதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார்.

அகதிகளுக்கென கிடைத்த சகல பொருள்களும் முறையாகக் கணக்கிடப்பட்டன. முறையாகப் பெறப்பட்டு முறையாகவே அவை பகிர்ந்தளிக்கப்பட்டன. இதில் சீர்கேடு எதுவும் நடக்கவில்லை.

உணவு விநியோகத்தைப் பொறுத்தவரை வெளிநாட்டு அன்பளிப்புக்களுடன் இலங்கை அரசும் அதன் சொந்த நிதியிலிருந்து கணிசமான நிதியுதவி செய்துள்ளது என்று அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிவாரண உதவியாக கிடைத்த கூடாரங்கள் ஆயுதப் படையினருக்கு தற்காலிகமாகவே விநியோகிக்கப்பட்டன. 75 கூடாரங்களே அவ்வாறு கொடுக்கப்பட்டன. அகதிகள் முகாம்களில் காவல் செய்த ஆயுதப்படையினரின் பாவனைக்கென்றே குறிப்பாக இக் கூடாரங்கள் வழங்கப்பட்டன.

இதுவே இராணுவத்தினருக்கு கூடாரம் வழங்கிய உண்மை நிலையாகும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசு வழங்கிய பல்வேறு உதவிகளின் விவரம் குறித்தும், அவை விநியோகம் செய்யப்பட்ட முறைகள் குறித்தும் இந்திய தூதுவர் திரு. எஸ். ஜே. எஸ். சட்டாஜுக்கும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்போது கொழும்பில் 6 முகாம்களும் மற்றைய இடங்களில் 33 முகாம்களும் இருப்பதாகக் கூறியுள்ள திரு. பிரட்மன் வீரக்கோன், அக்டோபர் 4 ஆம் திகதி வரை இந்த முகாம்களில் 23,760 அகதிகள் இருந்தனர் என்று அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சகல உணவு, உதவிகளும் முகாம்களில் இருந்தவர்களுக்கு [illegible]படுத்தப்பட்டதாகவும் அரிசி, [illegible] போன்றவை நாடு முழுவதும் [illegible]களுக்கு விசேஷ பங்கீடு [illegible] கீழ் வழங்கப்பட்டன என்றும் மேலும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-7)

டெலிவிஷன்

ரூபவாஹினி

6.02 "பிய சடஹன்"
6.30 போய் பொக்ஸ் — சிறுவர் நிகழ்ச்சி
7.00 செய்திகள் — தமிழ்
7.15 "நெத்சர"
7.45 கைனஸ் புக் ஒவ் ரெக்கோட்ஸ்
8.15 செய்திகள் — சிங்களம்
8.30 "அடுலித கீ ஹண்ட"
9.00 காதம்பரி
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.50 "வேல்ர்ட் ஸ்புட் டே"

ஐ. டி. என்

6.31 பிளே பொக்ஸ்
7.00 த ஸிங் க்னோட் ஷோ
7.30 த கோஸ்ட் அன்ட் — மிஸிஸ் முயர்
8.00 த சோ இட் கோஸ் கொன்சர்ட்
8.30 பிரைட் அன்ட் பிரஜுடிஸ்
9.30 செய்திகள் — ஆங்கிலம்
9.45 மெஜீசியன்

வடபகுதி கிராமோதய சபை உறுப்பினர் விவரம் சேகரிப்பு

கோப்பாய், அக். 15

வடபகுதி கிராமோதய சபைகளின் உறுப்பினர்கள் தொடர்பான விவரங்கள், விசேஷ சேவை அலுவலர்கள் மூலம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக திரட்டப்பட்டு வருகின்றன.

கிராமோதய சபைகள் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் சாதாரணமாக செயற்பட்டு வந்த வடபகுதி கிராமோதய, பிரதேச சபைகள் செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு பின்னர் உத்தியோக பூர்வமான மாதாந்தக் கூட்டம் எதையும் நடத்தவில்லை.

இதனைத் தொடர்ந்தே கிராமோதய சபைகளில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் விவரங்கள் அவர்கள் பதவி வகிக்கும் போது ஸ்தாபனங்களின் விபரங்கள், அதன் தன்மை என்பன கிராமோதய சபையின் செயலாளர்கள் (விசேஷ சேவை அலுவலர்கள்) மூலம் திரட்டப்பட்டு வருகின்றன.

(த-142)

தமிழ் ஈழம் மூல...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பவில்லை என்று சொன்னார்.

தோட்டப் பகுதி மக்கள் தமிழ் ஈழம் கோரவில்லை. ஆகவே தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நடத்தப்படும் எந்த ஒரு பேச்சு வார்த்தையும் இந்திய வம்சாவளி மக்களின் நலன் சம்பந்தப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்றும் திரு. தொண்டமான் கூறினார்.

தோட்டப் பகுதி மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ விரும்புவதால், தோட்டப் பகுதி மக்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இதற்காக பிரதேச இராணுவம் ஒன்றை ஏற்படுத்தலாம் என்றும் திரு. தொண்டமான் கூறினார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் பற்றி அவரிடம் கேட்கப்பட்ட [illegible] அமெரிக்க அமைச்சர் [illegible] நோக்கம் பற்றி [illegible] எதுவும் அறிந்திருக்கவில்லை என்று கூறினார்.

ஆனால் அமெரிக்க உதவி தமிழருக்கு எதிரானது என்றால் அதனை நாம் வரவேற்கப் போவதில்லை என்றார் அவர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணும் முயற்சியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சிறப்புப் பிரதிநிதி திரு. பார்த்தசாரதி ஈடுபட்டு வருகிறார். உடனடியாக அவர் இலங்கை வருவதற்கு வாய்ப்பு இல்லாவிட்டால் காமன்வெல்த் மாநாட்டிலாவது இலங்கைத் தலைவர்களை அவர் சந்திக்க முடியும் என்றும் திரு. தொண்டமான் கூறினார்.

இந்திய இராணுவத் தலையீடு பற்றி திரு. தொண்டமான் கருத்துத் தெரிவிக்கையில் இது இலங்கைத் தமிழர் பிரச்சினையை எந்த வகையிலும் தீர்க்க மாட்டாது என்றார்.

கலவரங்களை அடுத்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் குடியேறிய இந்திய வம்சாவளியினரை குடியெழுப்புவது தொடர்பான ஒரு யோசனை அமைச்சரவையில் தெரிவிக்கப்பட்டது என்று, எதிர்ப்பின் காரணமாக அது கைவிடப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

இந்திய வானொலி மேற்கண்ட விவரங்களை தெரிவித்தது.

(த)

பயங்கரவாத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட மாட்டா, நீதிமன்றம் தனது சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஆயினும் எந்த ஒரு கட்டத்திலும் பாதுகாப்புப் படை வீரர் ஒருவரை நிமாண்டில் வைப்பதற்கான அதிகாரம் நீதிபதிகளுக்கு வழங்கப்பட மாட்டாது. சாதாரண சட்டத்திற்கு மேலாக புதிய சட்ட விதிகள் அமைவதே இதற்குக் காரணமாகும்.

சாதாரண சட்டத்தின்படி ஒருவர் குற்றச் செயல் தொடர்பாகக் கைது செய்யப்படுவாராயின் [illegible]ம் பிணையிலோ அல்லது வேறு [illegible]வகையிலோ விடுதலை செய்யப்படும்வரை நிமாண்டில் வைக்கப்படுவார்.

நீதிமன்ற விசாரணையின் போதும், விசாரணைக்கு உள்ளாகி இருக்கும் பாதுகாப்புப் படை வீரர்களின் சார்பில் அரசு சட்டத்தரணிகளை நியமிக்கும். இதற்கான சகல செலவுகளையும் அரசே பொறுப்பேற்கும்.

இதற்கான சட்ட விதிகளும், பயங்கரவாத திருத்தத்திற்கான ஏனைய சட்ட திருத்தங்களும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கின்றன என்று தெரியவருகிறது.

அதே வேளையில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளின் போது கொல்லப்படுவோர்கள் மீதான மாஜிஸ்திரேட் விசாரணைகளும் புதிய சட்ட விதிகளின்படி இடைநிறுத்தி வைக்கப்படும்.

உத்தேச புதிய நடைமுறையின்படி மாஜிஸ்திரேட்டுக்குப் பதிலாக சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் அறிக்கை ஒன்றைத் தயாரித்து சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பார்.

சட்டமா அதிபரே தொடர்ந்தும் விசாரணையை மேற்கொள்ள வேண்டுமா என்பது பற்றி தீர்மானிப்பார்.

(த-ண)

வான் வாழ்வில் நான்காம் ஆண்டு நிறைவு

திருமதி
சி. காமாட்சியம்மாள்
(தங்க மாளிகை, தலவாக்கொல்லை)
தோற்றம்:- 6-9-35
மறைவு:- 16-10-79.

அன்பால் எம்மோடிணைந்து வாழ்ந்து எம்மை விட்டு பிரிந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியில் கொண்ட எங்கள் பாசத் தெய்வமே! அன்பு, பண்பு, பாசமாய், எல்லோருக்கும் நல்லவராய், இருந்து திடீரென எம்மை விட்டு மறைந்த எங்கள் அன்பு அன்னையே! நீங்கள் எங்களை விட்டு பிரிந்த போதிலும், உங்கள் நினைவு எங்கள் இதயத்தை விட்டு என்றும் அகலாது, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை அனுதினமும் இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும், அன்பு கணவர்:- எஸ். எம். சித்து.
அருமைச் செல்வங்கள்:- எஸ். செல்வராஜா (சண்முகராஜாஸ் திலபதி ஏஜண்ட் மன் ராசி பஜார்
எம். எஸ். பாலசுப்பிரமணியம், எம். எஸ். விஸ்வநாதன், எஸ். சண்முகராஜா,
இராஜமணி சீதா, மகேஸ்வரி, மருமகள்:- எஸ். சந்திரிகா,
மருமகன்மார், சகோதரங்கள் பேரப்பிள்ளைகள்: உமா, கலா, பிரியா,
சிவசந்திரன் மற்றும் உறவினர்களும்.

தங்கமாளிகை/கிரீன்லேண்ட்ஸ்,
தலவாக்கொல்லை.
சண்முகராஜாஸ், மன்ராசி கடை வீதி.

பசி பட்டினி நீங்க திடசங்கற்பம்

உலக உணவு தினத்தில் இதுவே அனைத்து நாடுகளின் கோஷம்

மனித இனத்திற்கு இன்றைய தினம் (அக்டோபர் 16 ஆம் திகதி) மிக முக்கிய நாளாகும் பசி, பட்டினி, வறுமை போன்றவற்றிலிருந்து விடுபட மனித சமூகம் திடசங்கற்பம் பூண்ட தினமாகும்.

உணவு விவசாய நிறுவனம் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமாக 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் திகதி பிரகடனப் படுத்தப்பட்டது. அன்றைய தினம் அதன் பின் உலக உணவுத் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

உலக உணவு தினம் மக்களையும் உணவையும் பற்றியதாகும். இத்தினத்தில் உலக மக்கள் அனைவரும் உணவுற்பத்திக்காக உழைத்த விவசாயிகள் மீனவர்கள், வனவியற்றுறையினர்கள் ஆகியோருக்கு நன்றி கூற வேண்டியவர்களாவர்.

ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய உணவைப்பற்றி சிந்திக்க இத்தினம் சந்தர்ப்பத்தைத் தருகிறது. எல்லோருக்கும் சமமான உணவு கிடைக்க வேண்டுமாயின் உயர்ந்த உற்பத்தி, சீரான விநியோகம், உற்பத்திப் பொருள்களுக்கு நிதான விலை ஆகியன அவசியம்.

வறுமையின் கொடுமை வாட்டியதால் இக்கோலம். (ண)

கடந்த வருடங்களில் இத்தினத்தில் உணவுப் பிரச்சினை, போசனை, உணவுப் பாதுகாப்பு, உணவு தயாரித்தல், உற்பத்திப் பொருளைப் பங்கிடுதல் போன்ற விடயங்களில் கருத்தரங்குகள் நடைபெற்றன.

உணவுற்பத்தியுடன் தொடர் [illegible] திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல நாடுகளில் முத்திரைகள் கவரொட்டிகள் புத்தகங்கள், நாணயங்கள் ஆகியன வெளியிடப்பட்டன. கனி மரங்களும் மற்றும் பயன் தரும் மரங்களும் நடப்பட்டன.

உணவு, விவசாயம் மீன்வளர்ப்பு, வனவியல் போன்ற பல வேறு விடயங்களுடன் தொடர்புடைய கண் காட்சிகள், பொருட்காட்சிகளும் பேச்சு, கவிதை, சித்திர, கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

மக்கள் சிறந்த மாதிரிப் பண்ணைகள் ஆராய்ச்சிப் பண்ணைகள், அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றை பார்வையிட்டனர். கிராமிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. வானொலி, தொலைக்காட்சியில் பல விசேட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சர்வதேசக் கருத்தரங்குகள் நடைபெற்றன. ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகள் நடைபெற்றன.

உணவு விவசாய நிறுவனம் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் முதன்மை வகிக்கும் சர்வதேச நிறுவனமாகும். இது விவசாயம் மீன்பிடி வலவியத்துறை என்பவற்றை அபிவிருத்தி செய்து வருகிறது.

உலகயுத்தம் முடிவடைந்ததும் பூகோளத்தின் ஒரு பகுதியில் உணவு மிகையாக உற்பத்தி செய்யப்பட்டும், மற்றொரு பகுதியில் பயிர் அழிவும் உற்பத்திக் குறைவு காரணமாகவும் வறுமை பட்டினி என்பனவும் காணப்பட்டன.

பொருளாதார வளம் குறைந்த மக்கள் பட்டினியால் வாடுவது அல்லது இறக்கும் நிலையும் காணப்பட்டது. எனவே உணவுப் பொருள்களை சர்வதேச ரீதியில் உற்பத்தி செய்தல், பங்கிடுதல், விநியோகித்தல் போன்ற சேவைகளைச் செய்ய வேண்டிய அவசர நிலைமை ஏற்பட்டிருந்தது.

இத்தகைய சேவைகளை நிறைவேற்றுவதற்காக 1945 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் திகதி 44 நாடுகளைச் சேர்ந்த அரசாங்கத் தலைவர்களும் பிரதிநிதிகளும் கனடா நாட்டின் கியூபெக் நகரில் ஒன்றுகூடி உணவு விவசாய ஸ்தாபனத்தை அங்குரார்ப்பணம் செய்தனர்.

ஆரம்பத்தில் இதன் தலைமை அலுவலகம் வாஷிங்டன் நகரிலும் பின்பு 1951 ஆம் ஆண்டு முதல் இத்தாலியின் தலைநகரான ரோம் நகரிலும் இருந்து இயங்கி வருகிறது.

தற்பொழுது இலங்கை உட்பட 152 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. இந்த நாடுகள் கீழ் வரும் மூன்று கொள்கைகளையும் நிறைவேற்றப் பாடுபடும்.

1. தமது நாட்டு மக்களின் உணவுத் தரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல்.
2. உணவு உற்பத்தியை விருத்தி செய்தலும், எல்லா உணவுப் பொருள்களையும் சிறந்த முறையில் விநியோகித்தலும்.
3. கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

இந்த நிறுவனத்தின் செயலாளர் நாயகமாக லெபனன் தேசத்தைச் சேர்ந்த திரு. எடாவுட் சவ்மா அவர்கள் 1975 இல் இருந்து கடமை புரிந்து வருகிறார்.

நாலாயிரத்துக்கும் அதிகமான தொழிற் பயிற்சி பெற்ற நிபுணர்கள் இந்த ஸ்தாபனத்தில் சேவை புரிகின்றனர்.

இவர்கள், விவசாயம், மீன்பிடி, வனவியற்றுறை ஆகியவற்றில் ஆராய்ச்சி வேலைகளையும், உற்பத்தி, பாதுகாத்தல், சேமித்தல் விநியோகித்தல் போன்ற துறைகளில் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் பயிற்சியையும் வழங்குகின்றனர். தேவையான நாடுகளுக்கு நிதியும் வழங்கப்படுகிறது.

பயிர் அல்லது விலங்குகளுக்கு அழியும் அபாயம் அல்லது அழிவு ஏற்படும் போது மிகத் துரிதமாக செயல்பட்டு கட்டுப்படுத்துதல் முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நிவாரண வேலைகளையும் மேற்கொள்ளுதல் போன்ற உதவிகளையும் செய்வர்.

அங்கத்தவ நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு, சம்பந்தப்பட்ட நாட்டு அரசாங்கம் விவசாயத் துறையில் கல்வி, பயிற்சி வழங்கப்பட வேண்டும் என கோரும் போது அத்தகைய உதவிகளைச் செய்து வருகின்றது. சூழல் பாதிப்படையாது சிறந்த பாதுகாப்பு முறைகளை போதிப்பதுடன் செயல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்த நிறுவனம் சிறந்த தகவல் நிலையமாகவும் வெளியீட்டகமாகவும் செயலாற்றுகிறது. விவசாயம், மீன்பிடி, வனவியற் துறைகளில் உலக நாடுகளில் இருந்து பெறப்பட்ட புள்ளி விபரங்களையும் ஆராய்ச்சி விபரங்களையும் தொகுத்து வெளியிடுகிறது. அத்துடன் பல நூல்கள், சஞ்சிகைகளையும் வெளியிடுகிறது. இவை மாணவர்கள் ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் போன்றோருக்கு மிகவும் பயன்படும்.

உலக நாடுகளில் உணவு நிலைப் பற்றி காலத்திற்குக் காலம் எதிர்வு கூறுவதால் பஞ்சம் ஏற்படாது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறது. அத்துடன் வரட்சி, உற்பத்திக் குறைவு, பயிர் அழிவு ஆகியவற்றிற்கு நிவாரண வேலைகளை வழங்குகின்றது. (ம)

— க, செல்வக்குமாரன் —

பொதிகை உறை புலவன்

பிரபல எழுத்தாளரும், [illegible]ம், இலக்கிய விமர்சகருமான [illegible] சோ. பத்மநாதன் சிந்தாமணி [illegible] நேயர்களுக்கு நன்கு அறி[illegible]மானவர்.

அவருடைய பல கட்டுரைகளும், கவிதைகளும், விமர்சனங்களும், கருத்துக்களும் சிந்தாமணியில் அவ்வப்போது பிரசுரமாகியுள்ளன.

எழுத்துத் துறையில் மட்டுமன்றி நாடகத் துறையிலும், மேடைப் பேச்சிலும் அவர் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டவர் ஆவார்.

எந்த ஒரு விஷயத்தைப்பற்றி அவர் எழுதினாலும் பேசினாலும் அதில் ஒருவித அழுத்தமும், தாக்கமும், அதே வேளையில், எளிமையும், தெளிவும், சிந்தனையைத் தூண்டும் கருவும் இருக்கும்.

திரு. பத்மநாதன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று, அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றும் தகைமையையும் பெற்றவர். பின்னர் பல்கலைக் கழகப் பட்டதாரியானார்.

தமிழிலும், சமயத்திலும் பாண்டித்தியம் பெற்றவரான பத்மநாதன் ஆங்கிலத்திலும் மகா வல்லவர். பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்கு அவர் எடுத்துக் கொண்ட முக்கிய பாடம் ஆங்கிலம்தான்.

ஆங்கில மொழியைக் கற்பிப்பதிலும், ஆங்கில இலக்கியங்களை ரசனை சொட்ட மாணவர் மனதில் பதிப்பதிலும் அவர் சமர்த்தர்.

இந்தத் திறமைகள் காரணமாக அவரை நல்லதொரு பதவி நாடி வந்தது. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

அப்படி நியமனம் பெற்று ஒரு வருடம் கூட ஆகிவிடாது: அவர் திறமை வெளியுலகத்துக்கும் தெரிந்து விட்டது!

சோ. பத்மநாதன்

பிரிட்டிஷ் கவுன்சில் என்று சொல்லப்படும் அமைப்பின் புலமைப் பரிசில் ஒன்று அவருக்குக் கிடைத்தது. அந்த "ஸ்கொலர் ஷிப்" பின் பிரகாரம் அவர் இங்கிலாந்தில் உள்ள லீட்ஸ் பல்கலைக்கழகத்தில், ஆங்கில மொழித் துறையில் தமது பட்டப் பின்படிப்பை மேற்கொள்ளப் போகிறார்.

இதற்காக பத்மநாதன் 27.9.1983 இல் இங்கிலாந்துக்குப் பயணமாகி விட்டார்.

பாரதி நூற்றாண்டுக் கவிதைப் போட்டி, இலங்கை வானொலி நாடகப் போட்டி, விவேகானந்த சபை உயர் தகைமைப் பரீட்சை ஆகியவற்றில் முதல் பரிசு பெற்றவரான பத்மநாதன் "அகில இலங்கை கம்பன் கழகத்தின் நான்கு தூண்களில் ஒரு தூண் ஆவார்" என்று வித்துவான் சி. ஆறுமுகத்தினால் விதந்து கூறப்பட்டவராவார்.

கோண்டாவிலில் பத்மநாதன் வசிக்கும் இல்லத்துக்கு அவர் சூட்டியிருக்கும் பெயர் "பொதிகை" என்பதாகும்.

"பொதிகை" என்றால் பெட்டகம் என்று பொருள்படும்.

இங்கு அது தமிழ் பொதிந்த பெட்டகத்தைக் குறிக்கும்.

அகத்தியன் வாழ்ந்த பொதிகை மலை என்றும் பொருள் உண்டு. பொதிகைக்கு [illegible] புலவன் ஒருவன் வாழும் இந்தத் [illegible] பொதிகை என்பது தகுந்த பெயர்தான்.

அதிக காலம் [illegible] பத்மநாதன் இங்கிலாந்திலிருந்து [illegible] திரும்பி வருவார் என்று எதிர்பார்ப்போம்.

— "தியாகி" —

இஸ்ரவேலிய நிதி மந்திரி ராஜினாமா

ஜெருஸலம், அக். 16

இஸ்ரவேலிய நிதி அமைச்சர் யொறம் அறிடோர் நேற்று முன்தினமிரவு தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

சர்ச்சைக்குரியவராக இருந்து வந்த அவரது ராஜினாமாவை புதிய பிரதமர் ஷாமீர் ஏற்றுக் கொண்டார்.

இஸ்ரவேலின் பொருளாதாரத்தை அமெரிக்க டாலருடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற யோசனை ஒன்றை அவர் தெரிவித்திருந்தார்.

இதனால் அமைச்சரவையில் பெரும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. இந்த யோசனை இஸ்ரேல் அமெரிக்காவையே நம்பி இருக்க வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்து விடும் என்றும் —

இது ஒரு அபாயகரமான பரிசோதனை என்றும் எதிர்ப்புக் கிளம்பியது. (ஸ)

அரசாங்க ஊழியர் கணக்கெடுப்பு

இன அடிப்படையில் தகவல் சேகரிப்பு

கொழும்பு, அக். 16

அரசாங்கத்தின் கீழ் கடமையாற்றும் ஊழியர்கள் தொகை பற்றிய கணக்கெடுப்பு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஊழியர்கள் பற்றிய விவரங்களை, சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இன அடிப்படையில் சேகரிக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான சுற்று நிருபங்கள் சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க)

கட்டார் செல்ல: விஸா கட்டுப்பாடு

டோஹா, அக். 15

வெளிநாட்டினருக்கு விஸா வழங்குவது தொடர்பாக கடுமையான ஒரு கொள்கையை கட்டார் அரசு கடைப்பிடிக்கும். அபிவிருத்தி வேலைகளின் வேகம் குறைந்திருப்பதால், வெளிநாடுகளிலிருந்து ஆட்களைத் தெரிவு செய்வது இனி மேல் அவசியமற்றதென கட்டார் அரசாங்கம் கருதுகிறது.

தொழில் பெறுவதற்கான விண்ணப்பங்களில் 95 சத வீதமானவை, புதிய முடிவின் பிரகாரம் நிராகரிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாரில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், அத்திட்டங்களில் ஈடுபடும் கம்பனிகளின் விவரங்கள் ஆகியவை குறித்து ஆராய்ந்த பின்னரே இனிமேல் விஸா வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படும் என கட்டார் உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (ற-7)

பட்டதாரி மாணவருக்கு இவ்வருடமும் புலமைப் பரிசில்

இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் ஏற்பாடு

கொழும்பு, அக். 16

இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் இவ்வருடமும் பட்டதாரி மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கும்.

1983 ஆம், 84 ஆம் கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் ஏழை மாணவர்களுக்கு மேற்படி புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

கடந்த வருடத்தைப் போன்றே, இத் திட்டத்தை இவ்வருடம் செயல்படுத்துவதற்கு பிரஸ்தாப இயக்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று அதன் தலைமை அலுவலகத்தில் இயக்கத்தின் தேசியத் தலைவர் அல்ஹாஜ் எம். ஐ. எம். நளீமின் தலைமையில் நடைபெற்றது.

பிரஸ்தாப புலமைப் பரிசிலைப் பெற விரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பங்களை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் தலைமை அலுவலகத்துக்கு நவம்பர் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் [illegible]சிலுக்கான நிதி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கடந்த வருடம் 45 மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறி உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் இயக்கத்தின் தேசிய தலைவர் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியுள்ளார்.

(ஐ-16)

சட்டபூர்வ திருமண வைபவம்

கொழும்பு, அக். 16

திருமணம் செய்யாதவர்களுக்குச் சட்டபூர்வமாகத் திருமணம் செய்து வைக்கும் வை[illegible]ம் ஒன்று பொர[illegible] நேற்று நடைபெற்றது.

கொழும்பு மாநகர சபையின் சுற்றாடல் சுகாதாரம், சன சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பொரளை கம்பல் மைதானத்தில் உள்ள நகர சபை மாவட்ட அலுவலகத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

(த-7)

காலிவாசியின் பணம் யாழ். நகரில் அபேஸ்

யாழ்ப்பாணம், அக். 16

கலிது வியாபாரி ஒருவரிடம் இருந்த பணம், இரு இளைஞர்களால் அபகரிக்கப்பட்டது.

காலியைச் சேர்ந்த இவர் பஸ் நிலையத்தில், இரவு நேரத்தில் நின்றபொழுது, இரு இளைஞர்கள் கத்தியைக் காட்டி பணத்தைப் பறித்துச் சென்றனராம்.

தன்னிடம் 65,290 ரூபா இருந்ததாகவும், அதனையே பறி கொடுத்து விட்டதாகவும் அவர் பொலீஸில் புகார் செய்தார். (க-120)

பிறந்த நாள் வாழ்த்துக்கள்

செல்வன்
அமீருல் பவ்ஸான்

வறக்காப்பொலை, ஹொரகொல்ல "நூர்மன்ஸிலில்" அமீருல் ஹம்ஸா – நோறுபரீதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அமீருல் பவ்ஸான் தனது முதலாவது பிறந்த தினத்தை நேற்று (1983.10.15) தனது இல்லத்தில் குதூகலமாக கொண்டாடினார்.

பவ்ஸானை டடா, மமி, அப்பா, வாப்பம்மா, மாமிமார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாமார், சாச்சிமார், பாச்சா, பகீறா, நாஜி மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹுவின் அருளால், கல்வியில் நிலவாய் – குணத்தில் சிகரமாய் – அறிவில் ஒளியாய் செல்வச் செழிப்புடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

வி. இ:- 050666

வானொலி வகுப்புகள்
(1983)

இரு பாலரும் சேர்க்கப்படுவர். நேரில்/தபால் மூலம் கற்கலாம் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், மற்றும் பரிசோதனைகளுக்கான பாகங்கள் இலவசம். எமது கல்லூரியில் கற்றோர்க்கும், கற்போருக்கும் டி. வி. பயிற்சி பாடங்கள் இலவசமாக வழங்கப்படும். சொந்த முகவரி இடப்பட்ட 9"X4" அளவிலான உறையை அனுப்பி விபரங்களை பெறலாம்.

அதிபர்,
டெக்னிகல் ட்ரேனிங் சென்டர்.
[illegible] 2ஆம் மாடி,
ஷெல்கொட் மாவத்தை,
கொழும்பு - 11.

கண்டியில்.....
சினிமா ரசிகப் பெருமக்களே!
உங்களின் தேவை
எங்களின் சேவை என
அன்புடன் அழைக்கின்றது.

சமீம்
வீடியோ பேங்
(மக்கள் வங்கி எதிரில்)
38, தலதா வீதி, கண்டி.

எங்கள் வீடியோ பேங்கில் சேர உங்கள் வைப்புத் தொகை ரூபா 350/- மாத்திரமே! அங்கத்தினராய் சேர்ந்த பின் தாங்கள் பார்த்து மகிழ எடுத்துச் செல்லும் வீடியோ படம் ஒன்றுக்கான ஒரு நாள் வாடகை ரூபா 15/- மாத்திரமே!

குறிப்பு:- தங்கள் கைவசமுள்ள தரமான வீடியோ படங்களுக்கு எமது வீடியோ பேங் விலை தரக் காத்திருக்கின்றது.

இன்றே முந்துங்கள்.
தொலைபேசி:- 22389.

இன்றைய திரைகளில்

கெப்பிட்டல்
(கொழும்பு)
2.00, 6.00, 9.30

லிடோ
(யாழ்நகர்)
2.00 6.00

விஜயா
(மட்டுநகர்)
2.30, 6.00 9.30

[illegible]
([illegible])
2.30, 6.30 9.30

பாக்கியராஜ், சத்தியகலா, கராட்டிமணி, அனிதா நடித்த

விடியும் வரை காத்திரு
(கலர்)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஹரன்
([illegible])
10.30, 2.00, 6.00

ஈரோஸ்
(பாமன்கடை)
2.30, 6.00, 9.30

சென்றல்
(மாத்தளை
10.30, 2.30, 6.00 9.00

சிவாஜிகணேசன் சரிதா நடித்த

துணை
(கலர்)

ராணி
(யாழ்நகர்)
10.30, 2.00, 6.00

சரஸ்வதி
(திருமலை)
2.00 6.00

கொன்கோட்
(தெஹிவளை)
10.30, 2.00, 6.00, 9.00

சிகிரி
(பண்டாரவளை)
2.30, 6.00 9.30

நியூ இம்பீரியல்
(பலாங்கொடை)
10.30, 2.00, 6.00 9.30

கமலஹாசன் அம்பிகா நடித்த

சகலகலா வல்லவன்
(கலர்)

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
கடைசி வாரம்
2.30, 6.00, 9.30

ராஜா
(யாழ்நகர்)
10.30, 2.00, 6.00

லக்ஷ்மி
(திருமலை)
2. 6. 9.30

அந்த 7 நாட்கள்
(கலர்)

பர்மா நகரில் வெடித்த குண்டு!

கடந்த வாரம் பர்மா நகரில் பயங்கரக் குண்டு வெடிப்பு ஒன்று நிகழ்ந்தது. அதனால் எழுந்த ஓசை ஆசியாக் கண்டத்தை மாத்திரம் அல்ல முழு உலகத்தையுமே அதிர வைத்து விட்டது.

பயங்கரக் குண்டு வெடிப்பினால் பர்மியத் தலைநகர் ரங்கூன் ஞாயிற்றுக்கிழமை அதிர்ந்தது. இந்தக் குண்டு வெடிப்பினால் நான்கு தென் கொரிய அமைச்சர்கள் உட்பட குறைந்த பட்சம் 19 பேர் துடிதுடித்து மாண்டார்கள். தென் கொரிய ஜனாதிபதி சுன் டு ஹுவான் தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கொண்டார்.

மாண்டவர்களில் 16 பேர் தென் கொரிய நாட்டவர்கள். மூவர் பர்மியர்கள். ரங்கூனில் உள்ள தியாகிகள் கல்லறை ஒன்றிலேயே இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

படுகொலை செய்யப்பட்ட பர்மிய தேசிய வீரரான ஜெனரல் அயுங் சானின் கல்லறையில் நடைபெற இருந்த வைபவம் ஒன்றின் போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

தேசிய வீரரின் கல்லறைக்கு மலர் வளையம் சாத்தி மரியாதை செய்வதற்காக தென் கொரிய ஜனாதிபதி திறந்த மோட்டார் வாகனம் ஒன்றில் பவனி வந்து கொண்டிருந்தார். அப்போது குண்டு வெடிப்பு அப்பகுதியை அதிர வைத்தது.

இச்சம்பவத்தில் பல தென் கொரிய, பர்மியப் பாதுகாப்புப் படையினர் படுகாயமுற்றார்கள். உடனடியாகவே அவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த போது அங்கு சுமார் 100 பேர் வரை இருந்தார்கள் என்று நம்பப்படுகின்றது.

குண்டு வெடிப்பு நடைபெற்றதும் தென் கொரிய ஜனாதிபதி பவனி நிறுத்தப்பட்டது.

அவர் தனது சுற்றுப் பயணத்தை இடைநடுவில் நிறுத்திக் கொண்டு தென் கொரியத் தலைநகர் சியோலுக்குத் திரும்பினார்.

தென் கொரியாவின் வெளியுறவு அமைச்சர் லீ யும் சுக், பிரதிப் பிரதமர் சூ சுக் ஜுன், வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் கிம் டொங் வீ, மூலவளத் துறை அமைச்சர் சூ சாங் சுல் ஆகியோரே மாண்ட அமைச்சர்களாவர்.

கடந்த ஒரு மாத காலத்தில் தென் கொரியாவுக்கு ஏற்பட்ட இரண்டாவது அனர்த்தம் இதுவாகும்.

கடந்த செப்டம்பர் முதலாம் திகதி 269 பேருடன் சென்று கொண்டிருந்த தென் கொரிய ஜம்போ ஜெட் விமானம் ஒன்று ரஷ்யாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டது என்பது நினைவிருக்கலாம்.

குண்டு வெடிப்பினால் மாண்டவர்களில் ஜனாதிபதியின் பிரதம செயலாளர் ஹம் பியோங் சுன், ஜனாதிபதியின் பிரதம பொருளாதாரச் செயலாளர் கிம் ஜே - இக், பர்மாவில் உள்ள கொரியத் தூதுவர் லீ கே சுல் ஆகியோரும் அடங்குவார்கள்.

தென் கொரிய ஆயுதப் படையின் தலைவர் ஜெனரல் லீ கி பேக் உட்பட சுமார் 16 பேர் படுகாயமுற்றனர்.

1979 டிசம்பரில் தென் கொரியாவில் இராணுவப் புரட்சிச் சதி ஒன்று நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி பார்க் சுங் ஹீ படுகொலை செய்யப்பட்டார். அதனையடுத்தே ஜனாதிபதி சுன் 1980இல் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார். அவரையும் ஒழித்துக் கட்டுவதற்குத் தற்போது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது:

பர்மாவின் குண்டு வெடிப்புச் சம்பவம் வட கொரிய கம்யூனிஸ்ட்டுகளின் சதி வேலையே என்று குற்றம் சாட்டினார்.

இச்சம்பவத்தை அடுத்து கொரிய குடாநாட்டுப் பிரதேசத்தில் பதற்றம் உருவாகி இருக்கிறது. தென் கொரியாவின் ஆயுதப் படையும், பொலீஸ் படையும் கூடுதல் உஷார் நிலையில் வைக்கப்பட்டன.

இவ்வாறான காட்டு மிராண் இவ்வாறான காட்டு மிராண்களின் இறுதி முடிவு சுய அழிவாகவே இருக்கும் என்று அவர் சொன்னார்.

தென் கொரிய ஜனாதிபதியைக் படுகொலை செய்வதற்கான முயற்சி ஒன்று கனடாவிலும் மேற்கொள்ளப்பட்டது என்ற தகவல் தற்போது வெளியாகி இருக்கிறது.

ஜனாதிபதி சுன் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் கனடாவில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே இதற்கான சதித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

கனேடியப் பொலீஸார் இச் சதித் திட்டம் பற்றி உரிய நேரத்தில் மோப்பம் பிடித்து விட்டார்கள்.

கம்யூனிஸ்ட் வட கொரியாவுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் என்று கூறப்படும் கனேடியர்கள் பலரையும் கொரிய நாட்டவர்கள் பலரையும் அவர்கள் கைது செய்திருந்தார்கள்.

பூலோக சஞ்சாரம்

கதாசி

இந்தச் சதித் திட்டத்தையும் வட கொரியாவே தயாரித்திருந்தது என்று தென் கொரிய ஜனாதிபதி குற்றம் சாட்டினார்.

பர்மா குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து சியோலிலும், ஏனைய தென் கொரிய நகரங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலங்களை நடத்தினார்கள். வட கொரியா ஜனாதிபதி கிம் இல் சுங்கின் கொடும்பாவியை தீ வைத்துக் கொளுத்தினார்கள்.

வட கொரியா மீது பதிலடி கொடுக்க வேண்டும் என்று சில ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி இருக்கிறார்கள்.

இதனையடுத்து தென் கொரியாவின் சுமார் 6,00,000 இராணுவ வீரர்களும் விசேஷ உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

பழிக்குப் பழி தீர்க்கும் நடவடிக்கையில் இறங்க வேண்டாம் என்று தென் கொரிய அரசை அமெரிக்காவின் "வாஷிங்டன் போஸ்ட்" எச்சரித்திருக்கிறது.

இந்த நடவடிக்கை பாரதூரமான விளைவுகளுக்கே வழி வகுத்து விடும் என்றும் அது கூறியிருக்கின்றது.

● இந்தியப் படை உஷார் நிலையில்

இந்தியப் படைகள் கூடுதல் உஷார் நிலையில் இருக்க வேண்டும் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் உத்தரவிட்டிருக்கிறார். இதனால் பாகிஸ்தானில் பெரும் கவலையும், பதற்றமும் ஏற்பட்டிருக்கிறது.

எதிர்வரும் மாதங்களில் இந்திய ஆயுதப் படையினர் கூடுதல் உஷார் நிலையில் இருக்க வேண்டும் என்றே பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமன் கேட்டிருந்தார்.

அத்துடன் அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார்.

இந்தியாவின் அண்டை நாடுகளில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து இந்தியாவினால் மௌனமாக இருக்க முடியாது என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுவே பாகிஸ்தானின் கவலைக்கும் பதற்றத்திற்கும் காரணமாகும். இது பற்றி பாகிஸ்தானிய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தார்கள்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் வெங்கட்ராமனும், ஏனைய இந்தியத் தலைவர்களும் அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்த அறிக்கைகள் பாகிஸ்தானுக்கு எதிராகவே விடப்பட்டிருக்கின்றன. இவை பதற்றத்தை அதிகரிக்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சீராவதிலும் குந்தகமாகவே அமையும்.

பல கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்களை இந்தியா குவித்து வருகிறது.

அதே வேளையில் பாகிஸ்தானின் ஆயுதக் கொள்வனவுக்கு இந்தியத் தலைவர்கள் ஆட்சேபம் தெரிவிக்கிறார்கள்.

— இப்படி பாகிஸ்தானிய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் ரஷ்யப் படைகள் ஆக்கிரமிப்பு நடத்தி இருக்கின்றன என்றும் —

எனவேதான் பாகிஸ்தான் தனது பாதுகாப்புத் தேவையையொட்டி பாவனைக்கு உதவாத இராணுவத் தளவாட உதிரிப் பாகங்களை ஈடு செய்து வருகிறது என்றும் பாகிஸ்தான் கூறி வருகின்றது.

இதே வேளையில் வெளிநாட்டு அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்குப் பாகிஸ்தானில் சுமூக நிலைமை ஏற்பட வேண்டும் என்பதில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஷியா-உல்-ஹக் குறியாக இருக்கிறார்.

சுன் டு ஹுவான்

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்டிருக்கும் கட்சிகளுடனும், பேச்சு வார்த்தைகளை நடத்துவது என்று ஜனாதிபதி திட்டமிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி இந்த அரசியல் கட்சிகளை நான்கு வருடங்களுக்கு முன்னர் தடை செய்திருந்தார்.

நாட்டில் சிவிலியன் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான தனது அரசியல் செயல் திட்டங்களுக்கு இந்தக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்தே அவர் அந்தக் கட்சிகளைத் தடை செய்திருந்தார்.

ஜம்இய்யத்து உலமா கட்சியினர் ஜனாதிபதி ஷியா-உல்-ஹக்குடன் பேச்சு வார்த்தை நடத்தினர். அதன் பின்னரே மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

ஏனைய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பொதுவான இணக்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஜனாதிபதி ஷியா-உல்-ஹக் முயன்று வருகிறார் என்றும் —

இதற்கான தனது பதிலை அவர் அடுத்த மாதம் வெளியிடுவார் என்றும் மேற்படி கட்சியின் தலைவர்கள் சொன்னார்கள்.

ஜனாதிபதி ஷியா-உல்-ஹக் 1979 அக்டோபர் மாதம் சகல அரசியல் கட்சிகளுக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கும் தடை விதித்தார்.

இது ஒரு புறம் இருக்க பாகிஸ்தானின் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடக்காத எவர் வேண்டுமானாலும் நாட்டை விட்டுத் தாராளமாக வெளியேறலாம் என்று இராணுவ ஆட்சியாளர் ஷியா-உல்-ஹக் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு இணங்க நடக்கத் தீர்மானிப்பவர்கள் அந்தக் கோட்பாடுகளின் வரையறைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். கோட்பாடுகளுக்கு இணங்கி நடக்க விரும்பாதவர்கள் வேறு இடங்களில் தங்கள் சொர்க்கத்தைத் தேடிக் கொள்ளலாம் என்று அவர் சொன்னார்.

எழுத்தாளர்கள் மாநாடு ஒன்றில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

இந்தியாவும் பாகிஸ்தானும் உஷார் நிலையில் இருப்பதற்குக் கூடுதல் ஆர்வம் காட்டினால் விளைவு பாதமாகத்தான் இருக்கும்.

ரஷ்யா

70 மைல் தூரம் சென்று தாக்கக்கூடிய நவீன "எஸ். எஸ். — 21" ஏவுகணைகளை சிரியாவுக்கு ரஷ்யா அனுப்புகிறது என்று வாஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

லெபனானின் எதிர்காலம் சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் விரைவில் நடைபெற உள்ளன. சிரியாவுக்கு நவீன ஏவுகணைகளைக் கொடுப்பது மூலம் இப்பேச்சுவார்த்தையில் சிரியாவின் கையை ஓங்க வைக்கலாம் என்று ரஷ்யா கருதுவதாக வாஷிங்டன் போஸ்ட் மேலும் தெரிவித்தது.

சிரியாவில் இருந்து வட இஸ்ரேலில் உள்ள முக்கிய விமானத் தளங்கள், ஹைபா துறைமுகம் ஆகியவற்றை தாக்கக் கூடிய சக்தி உள்ளவையாக இந்த ஏவுகணைகள் இருப்பதால், ரஷ்யாவின் நடவடிக்கை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று [illegible]ம்பப்படுகிறது.

அமெரிக்கா

அமெரிக்காவில் உயர் மட்டப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காகச் சீன வெளியுறவு அமைச்சர் வூ சூகியன் வாஷிங்டன் சென்றார்.

சீன — அமெரிக்க உறவுகளை மேம்படுத்துவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காகவே அவர் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டார்.

மூன்று நாள் அமெரிக்காவில் தங்கி இருந்த சீன வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி றேகனைச் சந்தித்தார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ஸை அவர் மூன்று தடவை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

பிரிட்டன்

தம் மீது கூறப்படும் காதல் விவகாரம் தொடர்பாக, தாம் பதவியை விட்டு விலகப் போவதில்லை என பிரிட்டிஷ் வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் செசில் பார்க்கின்ஸன் தெரிவித்தார்.

அமைச்சர் செசில் பார்க்கின்ஸன் தமது முன்னாள் செயலாளரான சாரா கீஸ்லுடன் காதல் விவகாரம் கொண்டிருந்ததாகவும், அதன் மூலம் அவர் குழந்தை ஒன்றை எதிர்பார்த்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

பார்க்கின்ஸன் 26 வருடங்களுக்கு முன் திருமணம் செய்தவர் 52 வயதான அவர் மூன்று பெண் பிள்ளைகளின் தந்தை.

36 வயதான சாரா கீஸ்லை திருமணம் செய்து கொள்வதாக பார்க்கின்ஸன் உறுதி அளித்திருந்ததாக கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

பார்க்கின்ஸன் அண்மைக் காலம் வரை, பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கரட் தாட்சரின் கன்சர்வேட்டிவ் கட்சியின் அவைத் தலைவராக இருந்தார். இவரது விவகாரம் திருமதி தாட்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

“இந்த விவகாரம் அதிருப்தியையும் ஆழ்ந்த கவலையையும் உருவாக்கி இருப்பதாக தொலைக் காட்சியில் கூறிய பார்க்கின்ஸன், "தாம் தொடர்ந்து பதவியில் இருக்கப் போவதாக" தெரிவித்தார். (ம)

SWISS ROSES·ORCHIDS
SHEETS • BED SPREADS
TOWELS • PILLOW CASES

House Wives Choice
is Shobhas Sheets
Swiss Roses/Orchids Sheets

ஒற்றைப் படுக்கை	ரூ 97/50
இரட்டைப் படுக்கை	ரூ 129/50
தலையணை உறைகள் (பொருத்தமானவை)	ரூ. 27/50
மற்றும் டவல் செட்ஸ்	ரூ. 129/50
PILLOWS	ரூ 39/50

NO PARKING PROBLEM
S-H-O-B-H-A-S
463. GALLE ROAD-COLOMBO-3
DIAL-81888
ALSO MOSQUITO NETS

ஆபிரிக்க நாட்டு கெரில்லாக்களிடம் அகப்பட்ட இலங்கைநிபுணர்நிலைஎன்ன?

இலங்கையரான சிறில் புண்ணிய சோமா ஆபிரிக்க நாடொன்றில் கெரில்லாக்களிடம் சிக்கிப் பரிதவிக்கிறார். அவரை மீட்பதற்கு உயர் மட்டத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதது உள்ளூரில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

சிறில் புண்ணிய சோமா மொஸாம்பிக்கில் தேயிலைத் தோட்ட அதிகாரி. சுமார் 61 வயது மதிக்கத்தக்க அவர் கடந்த 30 வருட காலமாக மொஸாம்பிக் நாட்டில் பணியாற்றினார்.

கடந்த வருடம் அக்டோபர் 5 ஆம் திகதி அவரை மொஸாம்பிக் தேசிய எதிர்ப்பு இயக்கக் கெரில்லாக்கள் கடத்திச் சென்றார்கள்.

மொஸாம்பிக் ஜனாதிபதி சமொரு மெசலின் அரசைக் கவிழ்த்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள் இந்தக் கெரில்லாக்கள்.

இவர்களினால் கடத்திச் செல்லப்பட்ட புண்ணிய சோமா பற்றி கடந்த ஒருவருட காலமாக எதுவித தகவலும் இல்லை.

ஓய்வு பெற்று தாயகமான இலங்கைக்கு கடந்த ஜனவரி மாதம் திரும்பிவிட வேண்டும் என்று அவரது எதிர்பார்ப்புகள் சிதறின.

தோட்ட பங்களாவில் வசதியான வாழ்க்கை நடத்தி வந்த அவரை கெரில்லாக்கள் காட்டுப் பிரதேசத்திற்குள் கடத்திச் சென்றார்கள்.

கெரில்லாக்கள் இவ்வாறு வேறு சில வெளிநாட்டவர்களையும் கடத்திச் சென்றிருக்கின்றனர். ஆயினும் அவர்களை மூன்று மாத காலத்திற்குள் விடுதலை செய்து விட்டார்கள்.

புண்ணிய சோமாவின் நிலை வேறு விதமாக அமைந்தது. சுதேச மொழியில் அவர் சரளமாகப் பேசுவார். தொலைத் தொடர்புத்துறை, ரேடியோ பழுது பார்த்தல் அவருக்கு பொழுது போக்காகக் கை வந்த கலை.

இவை அவரது விடுதலைக்குப் பாதகமாக அமைந்து விட்டனவா என்ற ஊகம் தற்போது எழுந்திருக்கிறது.

புண்ணிய சோமாவின் இந்தப் படம் சில வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்டது. இன்று நோயாளியாக அவர் கெரில்லாக்களின் பிடியில் சிக்கித் தவிக்கிறார். (ம)

மொஸாம்பிக் மொழியில் பரிச்சயமுள்ள அவர் கெரில்லாக்களின் நடவடிக்கைகளை நன்றாக அறிந்து வைத்திருக்கலாம்.

தொலைத்தொடர்புத் துறை, ரேடியோ பழுது பார்க்கும் திறமை கெரில்லாக்களின் நடவடிக்கைக்கு பேருதவியாக அமையலாம்.

இவரைக் கெரில்லாக்கள் விடுதலை செய்யாது இருப்பதற்கு இவை காரணமாக இருக்கலாமா?

[illegible]சோமாவின் மகன் மொஸாம்பிக் தலைநகர் மாபுட்டோவில் தங்கியிருக்கிறார் அவருக்குக் கடந்த ஏப்ரல் மாதம் கடிதம் ஒன்று வந்தது.

கெரில்லா[illegible]ம் சிக்கியிருந்து தப்பி ஓடிய ஒருவர் மூலம் புண்ணிய சோமா அனுப்பி வைத்த கடிதமே அது.

கடிதத்தில் புண்ணிய சோமா வைக்கப்பட்டிருக்கும் இடம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பின்வரும் விடயங்கள் அதில் கூறப்பட்டிருந்தன.

நான் உயிருடன் திரும்பி வராவிட்டாலும் குடும்பத்தைப் பார்த்துக்கொள்.

மொஸாம்பிக்கில் தொழில் பார்க்கும் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ளாதே.

மகனுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் அவர் இப்படிக் கேட்டிருந்தார்.

புண்ணிய சோமா தற்போது உடல்நலம் கெட்டுப்போய் விட்டார் உடல் மூட்டுகள் சரிவர இயங்குவதில்லை. சுவாசிப்பதிலும் இட்டுமுட்டு. வனாந்தர வாழ்க்கை அவரை வாட்டி விட்டது.

கெரில்லாக்களின் தலைவர் ஏவோ பொர்னான்டெஸ் லிஸ்பனில் தலைமையகத்தைக் கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

அவரைத் தேடிக் கண்டு பிடித்து, புண்ணிய சோமாவை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (ண)

“மந்திரயோகி” வசிய, மாந்திரீக, வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் C433

அன்பர்களே! சூனியம், வசியமருந்திடு, பேய் பிசாசுக் கோளாறுகள், கண்ணூறு, நாவூறு, ஆண் பெண் இரகசிய பாலியல் நோய்கள், தடைப்பட்ட மாதவிடாய்க் கோளாறுகள், தீராத நோய்கள், பிரச்சினைகளை அனுமான் அஞ்சன மை வெளிச்ச மூலமாகவும், மாந்திரீகக் குறி மூலமாகவும் அறிந்து, மருந்து, அக்குப்பங்சர் ஹிப்னாட்டிச, மனோவசிய யோக சிகிச்சை மூலமாகவும், தெய்வத் துணை கொண்டு மாந்திரீக சக்தியினாலும் தீர்த்துக்கொள்ள. குடியை மறக்க எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சையில் ஈடுபட, தொழில் கிடைக்க, வியாபார விருத்தி அடைய, களிப் அதிர்ஷ்டம் கிடைக்க, வழக்கு வெல்ல, வீடு, வளவு, உடலைக் காவல்பண்ண, மட்டக்களப்பு நான்காவது பரம்பரை வைத்தியர், மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும், மாந்திரீகக் கலாநிதி சித்த மருத்துவ பண்டிட் மனோதத்துவ டாக்டர் "மந்திரயோகி" M.B.B.S. (H) S.M.P. (இந்தியா) D.Ac (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண், பெண் (காதலன் - காதலி) வசியம்:— நீங்கள் விரும்பும் பெண் அல்லது ஆணை வசியமாக்கி எல்லோருடைய சம்மதத்துடனும் திருமணம் செய்ய முதல் கடிதத்திலேயே முழு விபரமும், இருவரின் பெயர்களும், தெரிந்தால் தாய் தந்தையர்களின் பெயர்களும், ஏமாற்ற மாட்டேன் சத்தியமாகத் திருமணம் செய்வேன் என்றும், பெண்ணைக் காப்பாற்றும் [illegible] அறிய தொழில், வருமானம் பற்றிய விபரமும் எழுத வேண்டும். நேரில் வர முடியாதவர்களுக்கு [illegible]மருந்து, மந்திரம் செய்து பார்சலில் அனுப்பப்படும். 3 ரூபா 50 சத முத்திரையும் 50 சத முத்திரை[illegible]ட்டிய சுய விலாசமிட்ட கவரும் அனுப்புபவர்களின் விடயங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். [illegible] 10 ரூபா வீதம் மணியோடர் அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும்.

டாக்டர் “மந்திரயோகி”
இந்தியன் வைத்தியசாலை
கல்லடி மட்டக்களப்பு
BATTICALOA

இலங்கை
துறைமுக
அதிகார சபை

மகாராணி எலிஸபெத் இறங்குதுறை
இல: 1, இல: 2. பண்டசாலைகளில்
அகற்றப்படாது இருக்கும் இரும்பு, உருக்குப்
பொருள்கள், மற்றும் குதங்களிலுள்ள
அகற்றப்படாத வாகனங்கள் ஆகியவற்றின்.

ஏல விற்பனை 22-10-1983

துறைமுகத்தின் மகாராணி எலிஸபெத் இறங்குதுறை இல. 1, இல. 2 பண்டசாலைகளில் அகற்றப்படாத இரும்பு, உருக்குப் பொருள்கள், மற்றும் குதங்களில் அகற்றப்படாத வாகனங்கள் ஆகியவற்றை விற்பதற்கான பகிரங்க ஏலவிற்பனை 22.10.1983 காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

பொருள்களை வாங்க விரும்புவோர் 20.10.1983 அன்று அவற்றைப் பார்வையிடலாம். விபரப்பட்டியல் வர்த்தக முகாமையாளர் அலுவலகத்தில் கிடைக்கும்.

ஏலவிற்பனை முடிவுற்றதும் கொள்முதல் செய்யும் பொருள்களுக்கான முழுத் தொகையையும் ரொக்கமாகச் செலுத்தி, விற்பனைத் தினத்தன்று மாலை 4.00 மணியளவில் பொருள்களை அப்புறப்படுத்தி விட வேண்டும் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்ட பின் அவற்றின் நிலை பற்றிய எதுவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விலை மனுக்களில் எதனையாவது அல்லது எல்லாவற்றையும் நிராகரிப்பதற்கும், பிரஸ்தாப பொருள்களில் எவற்றினதும் விற்பனையை நிறுத்தி வைப்ப[illegible] உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களிருப்பின் அப்பொருள்[illegible] விற்பனையை நிறுத்திவைப்பதற்கும் துறைமுக அதிகாரசபைக்கு அதிகாரமுண்டு. வெற்றி பெற்ற விற்பனை முகவராரால், விற்பனைத் தினத்தன்று அகற்றி எடுக்கச் செல்லப்படாத பொருள்கள் மீள விற்கப்படுவதுடன், அவற்றுக்காகச் செலுத்தப்பட்ட பணமும் பறிமுதல் செய்யப்படும்.

இந்த ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புவர்களிடம் நிரந்தர நுழைவு அனுமதிப் பத்திரமோ அல்லது ஆள் அடையாளச் சின்னமோ இல்லாதிருப்பின் துறைமுகத்தில் நடைமுறையில் இருக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அனுசரிக்க வேண்டும். அத்துடன் ஒவ்வொருவரும் தமது தேசிய அடையாள கார்ட்டுக்களையும், விற்பனைத் தினத்தன்று காட்ட வேண்டும்.

வர்த்தக முகாமையாளர்,
இலங்கை துறைமுக அதிகார சபை

திகதி: 11.10.1983

விற்பனைக்கு இருக்கும் பொருள்களின் விவ்ரம்

வாகனங்கள்

08 டாட்டா பஸ்கள்
01 டாட்டா சஸி
01 டொயட்டா கொரல்லா ஸ்டேசன் வாகன்
01 டொயட்டா கொரல்லா செடான் கார்
01 மேர்ஸிடஸ் பென்ஸ் கார்
03 மிட்சுபிஸி லான்சர் கார்
01 பியட் கார்
01 போட் கார்
06 டொயட்டா ஹைஏஸ் வான்
02 மஸ்டா வான்
03 மிட்சுபிஸி டெலிகா வான்
01 நிஸான் வனெட்டா வான்
01 இசுசு எல்ப் வான்
01 போட் ரன்ஸ்வே பவுசர்
01 டட்சன் கார்

இரும்பு உருக்கு

இரும்பு கிரேட்ஸ்
உருக்கு பில்லெட்ஸ்
கம்பிச் சுருள்கள்
உருக்குத் தகடு பொதிகள்
உருக்கு பிலேட் பொதிகள்
பிளேட் இரும்பு பொதிகள்
ரீபின் போல்ஸ் பார் பொதிகள்
ரவுண்ட் அயர்ன் பொதிகள்
ஸ்லோட்டட் ஆங்கிள் அயர்ன் பொதிகள்
டின் பிளேட் பொதிகள்
இரும்பு பொதிகள்
ஒராஸ் பைப்புகள்
அலுமினியத் துண்டுகள்
அலுமினியம் பாளங்கள்
கல்வனைஸ்ட் பைப்
இரும்பு பிலேட்
ஹூப் அயர்ன்
ஆங்கிள் அயர்ன்

JAI-NUL JEWELLERS
நயம், நாணயம், நம்பிக்கை
தரமான 22 கரட் தங்க நகைகளுக்கு எம்மை எப்போதும் நாடுங்கள், உங்களுக்கு சேவை செய்ய,
— நாம் காத்துள்ளோம் —
ஜெய்—நுல்
நகை மாளிகை
இலக்கம் 3, செட்டியார் தெரு சந்தி,
கொழும்பு—11.
தொலைபேசி: 549477

சிந்தாமணி ஆரம்
16—10—1983
CHINTAMANI MAGAZINE SECTION
இல. 723

JAI-NUL JEWELLERS
எண்டிக் சாமான் வகைகளுக்கு
வைர மோதிரங்கள்
மாணிக்க கற்கள்
வைர நெக்லஸ்கள்
எம்மை நாடுங்கள்,
தலைமையகம்
ஆப்தீன் ஜுவலர்ஸ்
இல. 24, ஜனதிபதி மாவத்தை, கொழும்பு-1.
தொலைபேசி: 547431

சாந்தமான தோற்றத்தின் இயல்புதான் பெண்மை

நச்சினார்க்கினியர் வகுத்த விதிப்படி வாழ்வதே மாதருக்கு அழகு

மகளிர், பெண்டிர், அரிவையர், மடந்[illegible], நல்லார், மாதர் என்பன [illegible]பாலாரைக் குறிக்கும் பழந்தமிழ்ச் சொற்களாகும். "மென்மை மகளிர்" என்றும் "பெண்டிர் நலம் வெளவி" என்றும் "செறிவெயிற்றரிவை கூந்தல்" என்றும் "மடந்தையொடு எம்மிடை நட்பு" என்றும் "நல்லாள் கணவன்" என்றும் "மடமாதர்" என்றும் பழந் தமிழ் நூல்களில் இப் பெயர்கள் பயின்று வருதலைக் காணலாம்.

மாண்பு என்பது அவர்தம் நற்குண நற்செய்கைகளால் எய்தக் கூடிய பெருமையாகும். ஏட்டுக் கல்வி அறிவற்ற பல பெண்கள் கூட வாழ்க்கைக் கல்வியில் முன்னேற்றமடைந்திருந்தனர் என்பதைச் சங்க காலம் எடுத்துக்காட்டுகிறது.

பெண்மை நலன்

மகளிர் மாண்புக்குக் கால்கோளாக அமைவது பெண்மை நலமேயாகும். பெண்மை என்பது பெண்களிடத்தில் சிறப்பாக அமைய வேண்டிய பண்பாகும். இப் பண்புடைமையை நோக்கியே இவர்கட்கு இப் பெயர் ஏற்பட்டது.

பெண்மை என்ற பண்புப் பெயர் ஈறு கெட்டுப் பெண் என நின்று அதுவே ஆகுபெயராகி பெண்பாலாரைக் குறிக்கிறது.

பெண்மை என்பதற்குப் பொருள் கூறவந்த நச்சினார்க்கினியர், அட்புலனையதோர் அமைதித் தன்மை என்று உரை விரித்தார். கண்ணாலே காணும் போது தோன்றும் சாந்தமான தோற்றத்தின் இயல்பே பெண்மை என்பது அதன் கருத்தாகும்.

அந்த அமைதித் தன்மையே பெண்களுக்கு முழு அழகைக் கொடுத்து காண்போருள்ளத்தில் தூய விருப்பத்தை உண்டாக்குகிறது. மாதர் என்ற சொல்லுக்கு விருப்பம் என்றும் அழகு என்றும் பொருள் உண்டு.

"மாதர் கொள் மடநோக்கின் மடநல்லாய்" என்ற கலித்தொகைப் பாடலில் மாதர் என்பது காதல் என்ற பொருளில் வருகிறது. பெண் என்ற அடியில் இருந்து பிறந்த பெட்பு என்ற சொல்லும் அன்பு என்ற கருத்தையே விளக்குகிறது.

எனவே அன்பு பொறுமை, இரக்கம், சாந்தம், அழகு ஆகிய குணங்கள் நிறைந்த இடத்திலேயே பெண்மையைக் காண முடியும். இத்தன்மை வாய்ந்த பெண்மையே உலகை வாழ்விக்கும். அதுவே அன்பு வடிவமாய் நின்று அனைத்துயிர்க்கும் அருளை பொழியும்.

ஆளுவதும் பேணுவதும்

ஆளுந் தகைமையுடையது ஆண், பேணுந் தகைமையுடையது பெண். இவற்றை நன்கு விளக்குவன சங்கச் சான்றோர் செய்யுட்களாகும்.

சங்கப் புலவர்கள் ஆண்மையைப் புறப் பொருளிலும் பெண்மையை அகப் பொருளிலும் வைத்துப் பாடினர். அகத்திணை இயல், புறத்திணை இயல் என்று அழகுபட அமைத்துள்ளார் தொல்காப்பியர்.

அன்பின்ஐந்திணை என்பதால் அக வாழ்வுக்கு அன்பு முக்கியமானது என்பது புலப்படுகிறது. இதனால் அன்பு நெறியைக் காணும் பெண்மை அங்கே சிறப்பிக்கப்பட்டது.

நாட்டிலே சென்று பொருள் தேடியும், போர் புரிந்தும் ஆண்மையோடு வீடு திரும்பும் ஆண்மகனுக்கு வீட்டிலே இருந்து இன்முகங் காட்டி இன்சொற் கூறி இன்னடிசில் கொடுத்துப் பேணுபவள் பெண். இதனையே "தற்கொண்டாற் பேணல்" என்று வள்ளுவர் பெருமானும் குறிப்பிடுகிறார்.

நாற் குணங்கள்

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என ஆணின் தலைமையை விளக்கிய தொல்காப்பியனார்

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப"

— எனப் பெண்ணின் தன்மையைக் கூறுகிறார். "முந்துறுத்த" என்பதனாலே பயிர்ப்புக் குணமும் கொள்ளப்படுகிறது என்பர் உரையாசிரியர்.

பெண்மையாகிய அரசு நிகழ்வதற்கு இந்த நான்கு குணங்களும் நான்கு படைகளாகவும் ஐம்புலன்களும் அறிவு கொளுத்தும் நல்லமைச்சராகவும் சிலம்பே முரசாகவும் இரு கண்களும் முறையே வேலும் வாளுமாகவும் அமைகின்றன என்ற கருத்தைப் புகழேந்தியார் –

நாற்குணமும் நாற்படையாய்
ஐம்புலனும் நல்லமைச்சாய்
ஆர்க்கும் சிலம்பே
அணிமுரசாய் — வேற்
படையும்
வாளுமே கண்ணாய்
வதன மதிக் குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு"

என்ற பாட்டால் எடுத்துக் காட்டுகிறார்.

ஆனால் சுப்பிரமணிய பாரதியாரோ இதில் ஒரு புரட்சி செய்கிறார்.

"நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்
ஞானம் நல்லறம்
வீரம் சுதந்திரம்
பேணுநற்குடிப்
பெண்ணின் குணங்களாம்"

பாரதியார், சமுதாயத்தில் காணப்பட்ட சீர்கேடுகளை நோக்கியும் வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த கோழைத்தனம் வாய்ந்த பெண் சமுதாயத்தை நோக்கியும் ஞானம், அறம், வீரம், சுதந்திரம் ஆகியவை இல்லாவிடத்து முன்னைய நாற் குணங்களால் யாது பயன் என்பதையே விளக்கினர்.

எனவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற அத்திவாரத்தையும் அசைய விடாது ஞானம், தர்மம், வீரம், சுதந்திர உணர்ச்சி என்பவற்றை வளர்ப்பவராய் பெண் சமுதாயம் விளங்குவதே வேண்டற்பாலது.

சங்க காலத்துக்கு முன்

எதற்கெடுத்தாலும் சங்க காலம் என்று பேசுவதும் எழுதுவதும் ஒரு தமிழ் மரபாகி விட்டது. ஆனால் அக்காலத்துக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே பெண்மை பெருமை பெற்று விளங்கிற்று.

இருக்கு வேதம் கி. மு. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தோன்றியதென்பர். அக்காலப் பெண்கள் வேதப் பயிற்சி, தவச்சிறப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

— பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி —

துணிவோர்க்கு நிற்பாள் துணை

கல்விக் கரசியெனக்
காசினியோர் போற்றும்
செல்வியின் பாதம்
சேர்வீரே — நல்ல
வல்லமைகள் தந்து
வாழ்வளிக்க வேண்டுமென
என்றும் போற்றீர்
இனி.

இருண்மையில் என்றும்
துவண்டிடுவோன் கீழோனாம்
வாய்மைதனில் வாழ்வான்
மறையாது — தாய்மை
தன்னிலே அன்புத்
தனி அரசு செய்திடுவாள்
அன்னை என இன்றே
அறி.

ஆட்டிப் படைக்கின்ற
அறிவுச் சக்தியினை
தேட்டமாய்க் கொண்டார்க்குத்
தீங்கில்லை — தேட்டமுடன்
பாட்டோடு கூத்தும்
பல்கலையும் நல்வாழ்வும்
ஊட்டுவோள் என்றே
உணர்.

நீதிமான் நெஞ்சை
நிழலென் றமர்ந்திடுவாள்
சாதி உரைப்போரிடத்தில்
சஞ்சரியாள் — பாரினில்
ஆதி இடம்பாகம்
அமர் சக்தி ஞானத்தை
போதிப்பாள் என்றே
புரி.

வேதாவின் நாவின்
வேதங்கள் செய்துமறை
நாத ஒலிபரப்பும்
நாரணியின் — பாதம்
பணிவார்க்கு எல்லாம்
பலிக்கும் அறநெறியின்
துணிவோர்க்கு நிற்பாள்
துணை.

— சோமலிங்கம்

நெறிதவறாத பத்திரிகை

சமூகத்தின் சிரஞ்சீவிக்குரல்

ஆபத்துகளுக்கு அஞ்சாத பேனா மன்னர்கள் வீரம்

இருபதாம் நூற்றாண்டு மக்களாகிய நாமெல்லாம் இரண்டு தவிர்க்க முடியாத பழக்கங்களுக்கு அடிமையாகியிருக்கிறோம்.

ஒன்று காலைக் காப்பி. மற்றது காலைச் செய்திப் பத்திரிகை.

இந்த இரண்டில் ஒன்று தவறிவிட்டாலும் போயிற்று. அன்று முழுவதும் ஏதோ ஒன்றை – முக்கியமான ஒன்றை – பறிகொடுத்துவிட்டது போலவே உணர்கிறோம்.

காலையில் எழுந்ததும் "செய்திப் பத்திரிகை"யைப் படித்த பி[illegible]தான் மற்றக் காரியங்களில் நிம்மதியாக ஈடுபட முடிகிறது. கடந்த இரவு நாம் விட்டுவிட்டு வந்த ஒரு உலகத்தோடு இன்று காலையில் நம்மைத் தொடர்புபடுத்தி நம்மை உலக நடப்புகளுடன் நெருக்கமாக வைகோர்த்துக் கொண்டு வாழ்க்கைப் பயணத்தில் மேல்செல்லவும் உதவுகிறது செய்திப் பத்திரிகை.

பத்திரிகைகள் இல்லாத நாடே இன்று இல்லை. சுதந்திரமாகவோ, அரைகுறை சுதந்திரத்துடனேயோ, அரசாங்கக் கருவியாகவோ, – ஏதோ ஒரு விதத்தில் எல்லா நாட்டிலும் பத்திரிகைகள் இருக்கின்றன.

எல்லா உரிமைகளையும் தன் மீது மட்டுமே சுமத்திக்கொண்டு மக்களை வெறும் "மந்தை"களாக மட்டுமே கருதும் அரசியலமைப்பைக் கொண்ட நாடுகளிலும் பத்திரிகைகள் இருக்கின்றன.

காரணம், நாட்டை ஆளும் இயந்திரத்திற்கும், நாட்டு மக்களுக்குமிடையே தவிர்க்க முடியாத ஒரே பாலமாகப் "பத்திரிகை" அமைந்துவிட்டிருப்பது தான்.

அந்தப் பாலம் சுதந்திரப் பாலமாக அமைந்துள்ள நாடுகளில் பத்திரிகைத்துறை மகத்தான சாதனைகளைக் கண்டிருக்கிறது; மகத்தான "பேனா" மன்னர்கள் தோன்றியிருக்கிறார்கள்; அவர்களுடைய ஒவ்வொரு எழுத்தும் தேசத்தை வழி நடத்துகின்றன.

பதவி ஆசை, பண ஆசை [illegible] ண்டுவிடக்கூடிய இயல்பு படைத்த ஆட்சியாளர்களுக்கு "லகான்" போட்டு, அவர்கள் வழி தவறாது லட்சியம் தவறாது சரியான பாதையில் செல்லப் பத்திரிகைகள் வழிகாட்டுகின்றன.

ஜனநாயகத்துக்கு உரம் ஊட்டியிருக்கிறது; ஆக்கம் நல்கியிருக்கிறது, வளர்த்திருக்கிறது. புகழ் சேர்த்திருக்கிறது.

அது மட்டுமல்ல, நாட்டில் வெளி வராதிருந்த பல அநீதிகளைப் பத்திரிகைகள் அம்பலப்படுத்தியிருக்கின்றன. அரசியல் சதிகளை வெளிப்படுத்தியிருக்கின்றன. வரப்போகும் தீங்கை மோப்பம் பிடித்து எச்சரித்திருக்கின்றன.

பத்திரிகை நிருபரின் "கண்" சமூகத்தின் விழிப்புள்ள ஒரு "ராடர் கண்" பத்திரிகைகளின் தலையங்கம் தேசத்தின் முன் வழி காட்டிச் செல்லும் கைவிளக்கு.

அமெரிக்காவில் ஒவ்வொரு பத்திரிகையும் 100 பக்கங்களுக்கு மேல் இருக்கும். விளையாட்டு, சந்தை நிலவரம், பொழுது போக்கு, அரசியல், ஒவ்வொன்றுக்கும் ஏழெட்டுப் பக்கங்கள் இருக்கும். ஒவ்வொரு ஏழெட்டு பக்கத்தையும் ஒரு தனி ஆசிரியர் குழு தினசரி தயாரித்துக் கொடுக்கும். எல்லாவற்றையும் ஒன்றாக்கி முழுப் பத்திரிகையாகக் கொடுப்பார்கள்.

நாலுவரிச் செய்தி

அப்படிப்பட்ட பத்திரிகை ஒன்றின் 98 ஆம் பக்கத்தில், சிதறிக் கிடந்த நூற்றுக்கணக்கான செய்திகளுக்கிடையே, ஒரு நாலு வரி செய்தி, ஒரு நாள் ஒரு நிருபர் கண்ணில்பட்டது. சாதாரணமாக எவர் கவனத்தையும் கவராத ஒரு இடத்தில் அது இருந்தது.

— பகீரதன் —

நிருபர்கூட அதைத் தற்செயலாகத்தான் கண்டார். ஒரு பெயரைச் சொல்லி, இன்ன ஆசாமியின் மகளின் ஈமச் சடங்கு, நாளை மறுநாள், இன்ன இடத்தில் நடைபெறும் என்று அந்தச் செய்தி சொல்லிற்று.

செய்தி படித்த நிருபருக்குத் தூக்கி வாரிப் போட்டது. அது ஒரு பெரிய புள்ளியின் பெயர். அவர் அமெரிக்கக் காங்கிரஸின் உறுப்பினர். அப்பேர்ப்பட்டவரின் மகளுடைய ஈமச்சடங்கு ஏன் இப்படி ஒரு "மூலை"யில் சத்தமின்றி நடக்கிறது?

இந்தச் சந்தேகம் தோன்றியதும் இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று அவர் முடிவுக்கு வந்தார். உடனே விமானத்தைப் பிடித்து, அந்த காங்கிரஸ் உறுப்பினர் மாநிலத்துக்கு ஓடினர். அவர் வீட்டில் யாருமில்லை. எங்கோ ஒரு குக்கிராமத்தில் ஈமச்சடங்குக்கு எல்லாரும் போயிருப்பதாக வேலைக்காரன் தயங்கித் தயங்கிச் சொன்னன்.

உடனே நிருபர், உள்ளூரில் இந்த உறுப்பினரின் குடும்ப டாக்டரிடம் ஓடினர். டாக்டர் பேட்டியே தர மறுத்தார். பிறகு தாம் இறந்த பெண்ணைப் பார்க்கவில்லை என்றும் இறந்து விட்டதாக சான்றிதழ் மட்டும் கொடுத்ததாக அரைகுறையாகச் செய்தி சொன்னர். நிருபர் உடனே கிராமத்துக்கு ஓடினர். அங்கும் எல்லாம் ஊமை நாடகமாக இருந்தது.

எந்தத் தகவலையும் அறிய முடியவில்லை. இதற்கிடையே நிருபருடைய உயிருக்கே ஒரு ஆபத்து வந்து பயமுறுத்தியது. நிருபர் நகருக்கு வந்து கவர்னரைப் பார்த்தார். அரசாங்க வழக்குத் தொடுநரைப் பார்த்தார். இதனிடையே இந்த விஷயமாக சில பூர்வாங்கச் செய்திகளைத் தம் பத்திரிகையில் வெளியிட்டார்.

ஏராளமான தடங்கல்கள், மிரட்டல்கள் எல்லாம் வந்தன. பொலீஸ் உதவிகூடக் கிடைக்கவில்லை. ஆனால் நிருபர் எப்படியோ சமாளித்து இந்த மரண மர்மம் பற்றி பத்திரிகைகளின் குரலை எழுப்பி, அதை நாடெங்கும் கேட்கும்படி செய்து விட்டார்.

அதன் எதிரொலியாக அரசே முன்வந்து பிணத்தைக் கைப்பற்றக் கட்டளையிட்டது. அவள் கன்னியாக இருந்து கருவுற்றதால், கருக்கலைப்பு செய்யப்பட்டதில் இறந்தாள் என்ற மர்[illegible] வெளிப்பட்[illegible]

ஆசிரியர் தலையங்கம்

நிருபர்களின் பணி அத்தகையது. நிருபர்கள் கொண்டு வரும் செய்திகளுக்கு என்ன முக்கியத்துவம் கொடுப்பது என்பதை நிர்ணயிப்பவர்கள் ஆசிரியர்கள். அந்த முக்கியத்துவமே சமூகத்தில் எதிரொலித்து சமூகத்தின் குரலாக உருவெடுக்கிறது. அதை

(12 ஆம் பக்கம் பார்க்க)

நவீன ரோட்டரி இயந்திரங்கள் பாவனைக்கு வந்த பின் பத்திரிகைத் தொழில் [illegible] ஏற்பட்[illegible] (படம்)

தாய்மார் தேவை!

இலங்கையில்
சர்வ தேசிய எஸ். ஓ. எஸ்.
குழந்தைகளுக்கான கிராமத்திற்கு
தாய்மார் தேவைப்படுகிறார்கள்.

சர்வதேச எஸ். ஓ. எஸ். குழந்தைகளின் கிராமமானது தொண்டு அடிப்படையில் இயங்கும் ஓர் நிறுவனமாகும். இது தற்போது 72 நாடுகளில் இயங்குகிறது. இந்நிறுவனம் இன, சாதி, மத சார்பற்றது.

எஸ். ஓ. எஸ். குழந்தைகளின் கிராமம், அனாதை, ஆதரவற்ற குழந்தைகளுக்கு புதியதொரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. குழந்தைகளுக்கு நிரந்தரமான ஓர் இல்லத்தையும், குடும்ப வாழ்வையும் அளிக்கின்றது.

ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான பௌதிக, மனப்பாதுகாப்பை அளிக்கக்கூடிய வகையில் ஒரு "பெண்", "தாய்" என்னும் ஸ்தானத்திலிருந்து இக்"குடும்பத்திற்கு" தலைமை வகிக்கிறார்.

இலங்கையில் பிலியந்தலை எனும் இடத்தில் முதலாவது எஸ். ஓ. எஸ். குழந்தைகளின் கிராமம் தாபிக்கப்பட்டுள்ளது. இங்கு 120 குழந்தைகளைக் கொண்ட 14 குடும்பங்கள் உள்ளன. தற்போது, நுவரெலியாவில் இதன் இரண்டாவது கிராமம் தாபிக்கப்படுகின்றது.

இல்லறம் நடாத்தவும், குழந்தைகளை பராமரிக்கவும் கூடிய தேர்ச்சி பெற்ற ஆரோக்கியமான பெண்கள் இந்நிறுவனத்திற்கு வேண்டப்படுகின்றனர். மேற்கூறப்பட்ட பெண்கள் 28 — 40 வயதிற்கிடைப்பட்ட, குடும்ப பொறுப்புகள் அற்ற கல்வியறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

"தாய்மாருக்கு" வாழ்வு பூராவும் தேவையான பௌதிக நிதி பாதுகாப்பு நிறுவனத்தினால் வழங்கப்படும். பிலியந்தலையிலும், நுவரெலியாவிலும் விண்ணப்பதாரருடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்.

பத்து நாட்களுக்குள் கீழ் தரப்பட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

தபால் பெட்டி இல. 5, பிலியந்தலை.

அந்தரங்கக் கலைஞர்கள்

காவலூர் எஸ். ஜெகநாதன்

"ஒரு மணமும் தெரியாது [illegible]...... நல்லதைக் கேட்கக் காதில்லை. பார்க்கக் கண் இல்லை...... ஜடங்களாய் உலவுதுகள் தா......"

சுந்தரக் கிழவரை நான் அமைதிப்படுத்தினேன். அமைதியைப் பிடுங்கி எறிந்து அவர் கொக்கரித்தார். வாசல் வரை அவரை விடப் பதிவு. நெடிய தனது உடலை வளைத்துக் கொண்டு கையை வளைமீது தொங்க விட்டு வௌவால் போன்று ஒரு ஆட்டம். பின்னர் அதை நிறுத்தி........

"சுந்தரம் என்டால் ஆரு. ட்றைவர் சுந்தரம். இதுதான் இவங்களுக்குத் தெரியும். பெரிய ட்றைவர். எல்லாரும்தான் ஓட்டுறாங்கள். அதுவா சுந்தரம்...... அது மட்டுமா சுந்தரம்......"

வெறிச் சிரிப்பு ஒன்றை வீசுகிறார். உடம்பு முழுவதும் ஆடுகிறது. அவரது கோபமும், கோலமும் என்னையே மிரள வைத்த போதும் சமாளித்துக் கொண்டு அவரை நிதானப்படுத்த முயற்சிக்கிறேன். "எனக்காவது அமைதியாவது" என்று கேட்பது போல் ஆர்ப்பரிக்கிற கடலாக சுந்தரக் கிழவர்.

அறைக்குள் ஓடுகிறார். நாலைந்து பிரேம் போடாத கன்வஸ்களை எடுத்து வருகிறார். உடைந்து விடுமோ என்று அஞ்சுகிற விதம் நிதானத்திலே......

"பாருங்க தம்பி பாருங்க..."

அவரது கைவண்ணம் ஏற்கனவே பரிச்சயமானதுதான். இருந்தும் ஆசையும், நிலைமையும் கண்களைக் கட்டி இழுக்கின்றன. நிலத்திலே பரவிக் கிடக்கும் படங்களைப் பார்க்கிறேன். அத்தனையும் சுந்தரக் கலைஞரின் அற்புதக் கைவண்ணம் சிருஷ்டித்த ஓவியங்கள். "கடவுள்களின்" படங்கள். கடவுள் சுந்தரக் கலைஞரையே கடவுள் தன்மை பெற்றது போன்ற தோற்றம். பிரமிப்பு.

இப்படி ஒரு கலைஞன் நம் மத்தியிலே...... என் எதிரே அறிமுகமான ஒருவராக...... நெஞ்சு நிமிர்கிறது.

"பார்த்தீங்க இல்லை... எத்தின கோயில்களிலே என்ர படம்...... என்ர படம். இவங்களுக்கு ட்றைவர் சுந்தரம்......"

கோபம் வெடித்துச் சிதறப் படங்களை வாரி எடுத்து அணைத்தார்.

"தம்பி...... இது வெறும் கோடுகள் இல்ல ராகங்கள்...... ராகங்கள்......" என்றபடி பெரும் இசை வெள்ளத்தில் மூழ்கியவரானர்.

சில நிமிடங்கள்தான். கச்சேரி குழம்பியது போல் திடுமென்று



எழுந்து...... "இவங்களுக்குத் தான் காது கூட இல்லையே..." என்று கூறிவிட்டுத் தன்னை விட யாருமில்லை என்பது போல் நெஞ்சு நிமிர்த்தி சுற்று முற்றும் ஒரு ஏளனப் பார்வை விரித்துச் சிரிக்கிறார்.

அமைதியாகத் தானும், தமது கற்பனையுமாய் இருந்த கிழவரை இப்படி உசுப்பிவிட்டதற்கு நானும் ஒருவகையில் உடந்தை. நெஞ்சு சுடுகிறது.

ஊர் புதிது. சந்திக்கப் போகிறவரின் கலை பரிச்சயப்பட்டிருந்தாலும் அவர் புதிது. மூன்று பஸ்ஸும், ரயிலும் மாறி ஓவியர் சுந்தரத்தைக் காண வந்த நான் அவரது ஊரில் இறங்கி......

"சுந்தரம் வீடு" என்று கேட்டதும் —

"ஆரு நம்ம ட்றைவர் சுந்தரமா" என்று ஊர்க் கடைக்காரன் எதிர்க் கேள்வி கேட்டதும் —

"இல்லை...... ஓவியர் சுந்தரம்" என்றேன் நான்.

"அவரேதான்... அவரே தான்...... அதுதான் வீடு......"

"ம......" பெருமூச்சோடு வீட்டுக்கு வந்த நான் ஓவியரோடு அறிமுகம் முடிந்து, வந்த காரியம் முடிந்து, பேசாமல் இருக்க,

"ட்றைவராகவும் வேலை பார்க்கிறீங்களா...... இந்த வயதிலையும்......"

"ம...... அது ஒரு காலம் வயித்துப் பாட்டுக்கு...... இப்ப மகன்தான் எல்லாம்" என்று வயிறு தடவுகிறார். பிறகும் ஒரு உசுப்பல்.

"அது சரி...... ஆரு சொன்னது......"

நடந்ததைச் சொன்னேன். அப்போது தொடங்கியவர் தான்.

"நான் ட்றைவர் சுந்தரம் மட்டுமில்லை...... கலைஞன் சுந்தரமும் கூட...... அதுதான் சுந்தரம். அறிவு கெட்டதுகள். இது கலைக்கு கலை என்டால் என்னென்டு தெரியுமா? காசு தெரியும். அது ஒண்டுதான் தெரியும். தா......"

"உங்கட கலைத் திறமையை ரசிக்கிறவங்க, மதிக்கிறவங்க நிறைய இருக்கிறாங்க. என்னையே எடுத்துக் கொள்ளுங்க... எத்தனையோ மைல்களுக்கு அப்பாலிருந்து உங்களைத் தேடி வரவில்லையா, எதுக்காக உங்க கலை வன்மைக்காக......"

கலைஞன் சுந்தரத்தின் ஓவியத்துக்காகத்தான் நான் தேடி வந்திருக்கின்றேன். புராண நாடகம் ஒன்று அரங்கேற்றப் போகின்றோம். அதற்கான திரை அமைப்புக்கு ஓவியம் வரையத் தகுதி படைத்தவர் சுந்தரமேதான் என்று இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். இரண்டு மூன்று வாரங்கள் தங்கியிருந்தாவது பெற்றுச் செல்வதுதான் எனது திட்டம்.

சுந்தரக் கலைஞரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்.

"நீங்கதான் நாடக ஆசிரியரா?" என்று அவர் ஆர்வத்தோடு கேட்க, நானும் தலை ஆட்டிவிட்டேன்...... சொந்த மகனைப் போல்...... உற்ற நண்பனைப் போல்...... தாயாய் தாரமாய்...... எல்லாமாய் என்னொடு அவர் தன்னைப் பிணைத்துக் கொண்டார்.

"ம...... எவ்வளவு தூரத்திலையிருந்து நீங்க வந்திருக்கிறியள்... பக்கத்திலையிருக்கிறவங்கள்... சொந்த ஊர்க்காரங்கள்......"

"அத விடுங்க......" என்றேன் நான்.

"இல்லைத் தம்பி, இண்டைக்கு நேற்றில்லை. இவ்வளவு காலமும் என்ர மனம் பட்டுப் பட்டுச் சலித்துப் போன புண்தான் இது."

"உங்க பெருமையை இதை வைச்சு மதிப்பிடக் கூடாது. நீங்க பெருங் கலைஞர்... பெருங் கலைஞர்" என் கண்கள் துளிர்க்கின்றன.

இது ஒன்றே போதும் என்பவர் போல் அறைக்குள் ஓடிப் போய் திரையும், தூரிகையுமாகத் திரும்பி வந்தார். கலை ஆவேசம் அவரைப் பிடித்து விட்டது. கலைஞனுக்குப் பாராட்டு எத்துணை உரமாக அமைந்து விடுகிறது.

வரைந்தார்... வரைந்தார்... வரைந்து கொண்டே இருந்தார். நான் மௌனமாக அந்தப் பிரசவத்தைப் பார்த்துப் பிரமித்து இருந்தேன். அவரது விரல்கள் தூரிகையை நேர்த்தியாகப் பிடித்தபடி.........

தட்சணாமூர்த்தியின் தவில் கையாய்...... பத்மநாதனின் நாதஸ்வரக் கையாய்... குமாரசாமியின் வயலின் கையாய்...... உன்னதமான எல்லாமாய்......

நான் மெய்மறந்து இருக்கிறேன்.

முகத்தில் அரும்புகட்டி நின்ற வியர்வையைத் துடைத்தபடி நிமிர்கிறார் சுந்தரக் கலைஞர்.

"அப்பா சாப்பிட வாங்க" முகம் காட்டி அழைக்கின்றான் மகன்.

"சாப்பாடோ...... எனக்கேன் சாப்பாடு...... வயிறு, மனசு எல்லாம் நிறைஞ்சு போச்சுது" என்றபடி பெருமிதத்துடன் தான் வரைந்ததைப் பார்க்கிறார்.

"அப்பா இப்பிடித்தான்...... பைத்தியம்......"

"பைத்தியம்" என்று சாதாரணமாகக் கூறிவிட்டான் மகன். இந்தப் பைத்தியத்தில் உள்ள மகிழ்ச்சி எனக்கல்லவா தெரியும். நாடகம் ஒத்திகை பார்த்து முடிந்ததும் நான் என்னை மறந்து துள்ளிக் குதிப்பது நினைவில் வருகிறது...... அந்த நினைப்பும் கிழவ[illegible] நிதர்சனமும் மனதில் நிறைய........

சிறுகதை

பல நிமிடங்கள் கரைகின்றன மௌனப் பூரிப்பில்......

உடைத்துக் கொண்டு கிழவர் கேட்கிறார்.

"தம்பி...... நாடகம் உங்க சொந்த ஊரிலதானே அரங்கேற்றுறீங்க"

"இல்லை......"

"என்னது... இல்லையா...?"

"இது என்ர நாலாவது நாடகம்...... நாலும் தலைநகரிலை தான்......"

"ஏன் தம்பி சொந்த ஊரிலை"

"அனுபவம்...... தடுத்து விட்டது......"

"ஊரில நீங்க......"

"பாங்கில வேலை செய்யிற கனகலிங்கம்."

"நாடகாசிரியர்?"

"அ[illegible] யாரு கவனிக்கிறாங்க" என் கண்களில் கண்ணீர் நிறைந்தது.......

[illegible] துன்பத்தின் உச்சியில் [illegible]ன்று மண் எறிந்து சாபம் போடுகிறார்.

"மண்டுச் சமுதாயம்... தா... நாசமாய்ப் போக......"

எனக்குப் பயமாக இருக்கிறது.

(ம)

இது ஒன்றே போதும் என்பவர் போல் அறைக்குள் ஓடிப்போய் திரையும், தூரிகையுமாகத் திரும்பி வந்தார். கலை ஆவேசம் அவரைப் பிடித்து விட்டது. கலைஞனுக்குப் பாராட்டு எத்துணை உரமாக அமைந்து விடுகிறது.

மணிக் கவிதை

ஓர் ராத்திரி நிகழ்வுகள்!

கறுப்புச் சேற்றினுள்
விழுந்தடித்த பகல் பொழுது.
இன்னும்
விடியல் குளத்தினுள்
சேற்றைக் கழுவாத தோற்றம்.

பனிப்படைகளின்
ரகசிய ஊடுருவல்கள்.
வானக் கூரையில்
நட்சத்திரப் பொத்தல்கள்.
மேகக் குழந்தைகளின்
ஓட்டப் போட்டிகள்.

பாதி ராத்திரியில்
பசித்த குழந்தையின் அலறல்.
அதை
சில "கிழவனின்"
"லொக்கு... லொக்குகள்."
தொடர்ந்த
வெற்றிலை இடிப்புகள்.

நிசப்தப் போர்வையுள்
அந்தகாரக் கனவுகளுடன்
புணர்ந்த
பூமாதே[illegible]
ஆ[illegible] உறக்கம்!

★ ஆர். எம். நௌஸாத்

பசி ராகம்

ஏழை மரத்தின்
வயிற்று வேர்கள்
உணவுப் பசளை தேடி
புழுவாக அலைகின்றன.
சிறுத்தமேனி
களைத்து —
எலும்பும் தோலுமான
விழிகள்
இரைதேடும் படலம்
காவியம்பாடும்.
உழைத்து சோர்ந்த
உடல்
வறுமை ஓவியத்திற்கு
"மாடலிங்" ஆகும்
பசியின் உபாதையில்
வாய் மொழிந்திடும்
சப்த தாளங்கள்
பசி ராகம் இசைக்கும்.

★ கலா விஸ்வநாதன்

நித்திரை

கவலைகள் வந்தது
கடலைப் போல்
மண்டை கனத்தது
மது கனத்தில்
மறந்து ஒன்றும்
தெரியவில்லை.
கவலைதன் கரைய
மருந்து தேட
தென்பட்டது ஓர்
மாத்திரை அதுதான்
நித்திரை.

★ எம். சி. கலீல்

பாழடைந்த குடிசை!

மாஸ்டர் சிவலிங்கம்

முன் கதைச் சுருக்கம்....

மாணவன் மணியம் பாடசாலையில் நடைபெறவுள்ள கலைவிழா நிகழ்ச்சி ஒத்திகையில் பங்குபற்றி விட்டு இரவு வேளையில் தனது வீட்டுக்கு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருக்கிறான்.

கடற்கரை வீதியால் அவன் திரும்பிக் கொண்டிருந்த போது இலேசாக மழை தூற ஆரம்பிக்கிறது. அதேவேளையில் அவனுடைய சைக்கிள் டயரில் முள்ளொன்று ஏறியதால் காற்றுப் போய்விடுகிறது.

செய்வதறியாது மணியம் திகைத்து நிற்கையில் மழை பலமாகப் பெய்ய ஆரம்பித்து விடுகிறது. கடற்கரை ஓரத்தில் காணப்பட்ட பாழடைந்த குடிசையை அடைகிறான் மணியம். அங்கு அவன் நிற்கையில் கள்ளக் கடத்தல்காரர்கள் சிலர் அங்கு வந்து சேருகிறார்கள். அவர்களிடம் அகப்பட்டு விடுகிறான் மணியம்.

மணியத்தின் ஆற்றலைப் புரிந்து கொண்ட முரடர் தலைவன் அவனைத் தங்கள் கூட்டத்திலே சேர்த்துக் கொள்கிறான். மீன்பிடிகாரன் வேடத்தில் முரடர்களுடன் கடத்தல் பொருள் விற்பனைக்கு மணியமும் அழைத்துச் செல்லப்படுகிறான்.

நடு இரவு வேளையில் முரடர்களின் தீவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது கைத்துப்பாக்கி சகிதம் வந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் மணியத்தின் முன்னால் வந்து நிற்கிறார்.

— 5 —

முற்றிலும் எதிர்பாராத விதத்தில் அந்த இன்ஸ்பெக்டரைக் கண்டதும் மணியத்தின் உடல் அவனை அறியாது இலேசாக நடுங்க ஆரம்பித்து விட்டது.

"டேய் பொடிப் பயலே! யார் நீ? இந்த நேரத்தில் எங்கிருந்து வருகிறாய்? உண்மையைச் சொல்லிவிடு. இல்லாவிட்டால் முதுகுத் தோலை உரித்து விடுவேன்" என்று மிரட்டினார் அந்த இன்ஸ்பெக்டர்.

"நான் யார், என்பதையும், கடத்தல்கார முரடர்களிடம் எப்படி நான் அகப்பட்டுக் கொண்டேன் என்பதையும் இன்ஸ்பெக்டரிடம் கூறினால் எனக்கு விடுதலை கிடைக்கும்" என்று மணியம் எண்ணிக் கொண்டிருந்த போது...!

"அடடே! இன்ஸ்பெக்டரா? இந்த அகால வேளையில் என்ன இந்தப் பக்கம்......?" என்று கேட்டபடி அங்கு வந்து சேர்ந்தான் மீனவன் வேடத்தில் இருந்த முரடர் தலைவன்.

திடீரென அவன் அங்கு வந்து சேர்ந்ததைக் கண்ட மணியம் செய்வதறியாது திகைத்து நின்றான்.

"இந்த அகால வேளையில் நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று அதிகாரத் தொனியில் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இதென்ன கேள்வி இன்ஸ்பெக்டர்......? மீனவர்களான நாங்கள் கடலுக்குச் சென்று மீன்பிடித்து விட்டுத் திரும்புகிறோம், எங்களைப் பார்த்தால் [illegible]ரியவில்லையா?" என்று [illegible]ப் பலமாகச் சிரித்தான் முர[illegible].

"உன்னிலும், உனது [illegible]திலும் எனக்கு நம்பிக்கையில்லை. நீயும், உன் கூட்டத்தினரும் கள்ளக் கடத்தலில் ஈடுபவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது...... அந்தச் சட்ட விரோதச் செயலை விட்டு விடுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் அனைவரும் விரைவில் சிறையில் இருக்க வேண்டி ஏற்படும்" என்று எச்சரித்தார் இன்ஸ்பெக்டர்.

"என்ன இன்ஸ்பெக்டர், என்னென்னவோ பேசுறீங்க......? எங்களுக்கும் அதுக்கும் சம்பந்தமே கிடையாது" என்று அடித்துப் பேசினான் முரடர் தலைவன்.

"சரி, சரி...... கையும் மெய்யுமாக உன்னையும், உன் கூட்டத்தையும் ஒருநாளைக்குப் பிடித்துக் கம்பி எண்ண வைக்கிறேன் பார்" என்று சவால் விட்டு வந்த வழியே திரும்பிச் சென்றார் அந்த இன்ஸ்பெக்டர்.

"இவன் என்ன, இவன் அப்பன் வந்தாலும் நம்மை அசைக்க முடியாது... நீ வாடா மணி" என்று கூறியபடி நடந்தான் முரடர் தலைவன். ஏமாற்றத்துடன் அவனைப் பின்பற்றிச் சென்றான் மணியம்.

அன்று விடியச் சாமம்......! கட்டிலில் புரண்டு புரண்டு படுத்துக் கிடந்த மணியத்துக்கு தூக்கம் வரவேயில்லை.

"இப்போது பொலீஸார் இந்தத் தீவுப் பகுதியில் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். நாம் கடற்கரைக்குச் சென்றால் அவர்களிடம் நமது கதையைக் கூறி தப்பிச் சென்று விடலாம்......"

இவ்வாறு எண்ணியபடி ஓசைப்படாமல் தனது அறையிலிருந்து வெளியேறினான் மணியம்.

எங்கும் பயங்கர அமைதி நிலவிக் கொண்டிருந்தது. எந்த இடத்திலும் மனித நடமாட்டம் தென்படவில்லை.

விரைவாக ஓடி கடற்கரையை அடைந்தான். அங்கும் யாருமே தென்படவில்லை.

கரையில் கிடந்த படகு ஒன்றை மிகவும் சிரமப்பட்டு கடலிலே தள்ளிவிட்டு அதில் [illegible] கொண்டான். அப்போது.........!

ஒரு உருவம் அந்தப் படகை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது.

[தொடரும்]

சிறுவர் சிந்தாமணி

பன்றிக் குட்டியின் தாய்!

கிழக்கு ஜெர்மன் கிராமமொன்றில் ஒரு பன்றிக் குட்டிக்குப் பால் கொடுத்து வளர்க்கிறது அல்சேஷன் நாய் ஒன்று. பன்றிப் பண்ணையிலிருந்து பிரிந்து வந்ததிலிருந்து இந்த பன்றிக் குட்டியும் [illegible] டத்தில் தான் அம்மாவுடன் [illegible]. அதற்கு உதவியாக இருக்கிறார் பண்ணை உரிமையாளரின் மனைவி. (ம—10)

புதுமெருகு பெறும் பாலைவனங்கள்!

ஆப்கானிஸ்தானில் பெரும் பகுதி மலைகளும், பாலைவனங்களும், வரண்ட பகுதிகளும் நிறைந்த பிரதேசம் ஆகும். இதற்கு மாறாக விளங்கும் அதன் வடக்குப் பகுதியில், செழுமையான நிலங்களும், ஏராளமான கனிப் பொருள் வளங்களும் உள்ளன. எனவே, நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள தொழில்களும் விவசாயமும், தேசியப் பொருளாதார நிலையைப் பெருமளவு தீர்மானிக்கின்றன.

பால்க் என்பது, ஆப்கானிஸ்தானின் மிகப் பெரிய வடக்கு மாகாணம் ஆகும். "மஜார் — இ — ஷரீப்" என்னும் அதன் நிர்வாகக் கேந்திரத்தின், நாட்டின் அடிப்படைப் பொருளாதாரத் திட்ட [illegible] [illegible].

இங்கு ஆண்டு தோறும் 1,05,000 டன் [illegible] உற்பத்தி செய்யக் கூடிய [illegible] ஆலை உள்ளது. [illegible] உற்பத்தியாகும் [illegible] விவசாயத் தொழிலின் தேவைகளுக்கும் போக, ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த ஆலை, மேன் பெரும் லாபம் தருகிறது. அதனருகே ஓர் அனல் மின்சார நிலையம் உள்ளது. அது மலிவான விலையில் மின்சாரம் அளிக்கிறது. இவையிரண்டும் எரிவாயுவைப் பயன் படுத்துகின்றன.

(ம)

ராஜ்யம் இல்லாத ராஜாக்கள் படும்பாடு!

கடந்த 1947 ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் திகதிவரை தாங்கள் கொண்டதே கோலம், இட்டதே சட்டம் என்ற கொள்கையுடன் இந்தியாவை துண்டுகளாக்கி ஆண்டு வந்த மகாராஜாக்கள் ஏராளம்.

இந்தியாவில் சுதந்திரத்தின் சின்னமாய் மூவர்ணக் கொடி பறக்கத் தொடங்கிய போது இவர்கள் வாழ்வில் கருமை படர்ந்து விடும் என்று கருதப்பட்டது.

ஆனால் இந்தியா சுதந்திர நாடாக மாறினாலும், விட்ட குறை தொட்ட குறையாகப் பழைய மகாராஜாக்களுக்கும், அவர்களின் குடும்பத்திற்கும் ஏராளமாகப் பணம் வழங்கப்பட்டு வந்தது.

அரசு தந்த பல லட்ச ரூபாய் மானியத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர் ராஜ்யம் இல்லா இந்த ராஜாக்கள். இந்த மகிழ்ச்சி 1971 வரைதான் நீடித்தது.

காரணம் பழைய மகாராஜாக்களுக்கு அளித்து வரப்பட்ட மானியம் 1971 முதல் வழங்கப்பட மாட்டாதென்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது.

ராஜ வாழ்வு நடத்தும் வசுந்தரா ராஜி — கஜ்சிங்

இந்த அறிவிப்பு வெளியாகி 12 ஆண்டுகள் கழிந்து விட்ட இன்று, பண்டைய மகாராஜாக்களின் இன்றைய நிலையைச் சற்று எடுத்துக் கூறலே இக் கட்டுரை.

மன்னர் மானியம் நிறுத்தப்பட்டதுடன் பண்டைய மகாராஜாக்கள் தமக்கெனத் தனி வருவாயைத் தேடிக் கொள்ள வேண்டியது அவசியமாயிற்று.

அந்த அவசியத்தைப் பூர்த்தி செய்து கொள்ள அவர்களுக்கு இரண்டே வழிகள்தான் இருந்தன. ஒன்று வியாபாரம், மற்றொன்று அரசியல், பொது வாழ்க்கை.

காஷ்மீர், ஜெய்ப்பூர், உதயப்பூர், ஜோத்பூர், மைசூர் மற்றும் குவாலியர் மகாராஜா குடும்பத்தினர் ஹோட்டல் தொழிலில் ஈடுபடத் தொடங்கினர்.

பரந்து விரிந்த அவர்களுடைய மாளிகைகள் அறைகளாக மாற்றப்பட்டு ஹோட்டல் நடத்துவதற்கு பெருமளவில் உதவியாக இருந்தன.

வேறு சிலர் வைரம் மற்றும் விலை உயர்ந்த கற்கள் விற்பனையில் இறங்கினர். தங்கள் வசம் முடங்கிக் கிடந்த விலையுயர்ந்த கற்களை இலகுவில் விற்பதற்கு இந்த வியாபாரம் வழிசெய்தது.

வேறு சிலரோ தங்கள் மாளிகையின் ஒரு பகுதியை அருங்காட்சி அகமாக (மியூசியம்) மாற்றி தங்கள் மாளிகையில் இருந்த பண்டைக் காலப் பொருட்களை மக்கள் நாள்தோறும் வந்து பார்த்துச் செல்லும் வகையில் மாற்றினர்.

ஆனால், என்ன காரணத்தாலோ பணம் கொடுத்து வட்டி வாங்கும் தொழில் முன்னாள் மகாராஜா குடும்பங்களுக்கு ஒத்துவரவில்லை. அரசியலைப் பொறுத்தவரையில் இன்று ஓரளவு வெற்றியுடன் திகழ்கிறார் திக் விஜய்சிங் என்னும் முன்னாள் இளவரசர்.

இவர் தற்போதைய மத்திய அமைச்சரவையில் துணை மந்திரியாகப் பணிபுரிகிறார். அடுத்து குறிப்பிடத்தக்கவர் ராஜி சிந்தியா எனப்படும் ராஜ்யசபை எம். பி.

இழந்ததை எண்ணி வருந்தாது. எதிர்காலத்தை வளமுடன் அமைத்துக் கொண்ட இவர்களைப் போல் எல்லா மகாராஜாக்களுக்கும் மனப் பக்குவம் இல்லை.

பதவியும், சுகமும் பறி போயிற்றே என்ற ஏக்கத்தில் இறந்த மகாராஜாக்களும் உண்டு.

அண்மையில் ஜெய் சால்மர் மகாராஜா மூளைக்கட்டி நோய் காரணமாக தன் 50 ஆவது வயதில் இறந்து விட்டார்.

மன்னர் மானியம் ஒழிக்கப்பட்ட பிறகு சில காலம் அரசியலில் ஈடுபட்டார். ஆனால் அந்த ஈடுபாட்டில் தீவிரம் காட்டவில்லை. தன் பழைய வாழ்க்கையை எண்ணி எண்ணி இவர் ஏக்கத்தால் இறந்து போனார்.

ஜோதியின் அடக்கமான தோற்றம்.

இறக்கும் வரை ஜெய் சால்மரை விட்டு இவர் வேறு எங்கேயும் சென்றதில்லை என்கிறார் இவருடைய நெருங்கிய உறவினர் ஒருவர். இவருடைய கதை இப்படி இருக்கக் கெட்டாலும் "மேன் மக்கள் மேன் மக்களே" என்று நிரூபிக்கும் வகையில் நடந்து கொண்ட ராஜாக்களும் உண்டு.

கடந்த ஆண்டு ராஜஸ்தான் மகாராஜா தன் பிறந்த நாளைக் கொண்டாடினார். ராஜஸ்தானின் மேட்டுக் குடிகள் அனைவரும் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டனர்.

விழா இடத்திற்கு மகாராஜா வந்தபோது பண்டைய காலப் பாணியில் ஆண்கள் அனைவரும் எழுந்து நின்று மகாராஜாவிற்கு வணக்கம் செலுத்தினராம். பெண்கள் மகாராஜாவின் பாத கமலங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

ஆனால் இந்த ராஜ மரியாதைகள் அதிக நேரம் நீடிக்கவில்லை. பிறந்த நாள் விழாவின் உச்சக் கட்டமாக உடலைச் சூடேற்றி வெட வெட வைக்கும் பானங்கள் வழங்கப்பட்ட போது அனைவரும் சமம் என்ற சூழ்நிலை திடீரென வந்து தொடங்கிவிடும்.

ஆண்களும், பெண்களும் அரசருக்கு இணையாக விஸ்கிகளை விழுங்கத் தொடங்கினர். அந்த விழாவின் போது பெண்கள் புகை பிடிக்கவில்லை.

அவர்களும் புகை பிடித்து இருந்தால் விழாவில் கலந்து கொண்டவர்களைச் சிகரெட் புகை தூக்கிக் கொண்டு போயிருக்கும் என்கிறார் முன்னாள் இளவரசர் ஒருவர்.

இந்தியாவிற்கு சுதந்திரம் வந்து விட்டால் எனக்கு என்ன? நான் என்றைக்குமே மகாராஜா தான் என்ற மனப்பான்மையுடன் நடந்து கொண்ட முன்னாள் மன்னர்களும் உளர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ராஜேந்திர இளவரசர் உள்ளூர் சொத்து தகராறு ஒன்றில் அநாவசியமாகத் தலையிட்டார். அவரைக் கைது செய்ய பொலிஸ் சென்றது. ஆனால் தன் தோட்டத்து பங்களாவில் ஒளிந்து கொண்ட இளவரசர், தன் வசம் எஞ்சியிருந்த குதிரைகளையும், யானைகளையும் ஏன் மனைவியின் வளர்ப்பு பிராணியான ஒரு சிங்கத்தையும் அவிழ்த்து விட்டு தோட்டத்துப் பங்களாவில் புகுந்து கொண்டார்.

மூன்று நாள் போராட்டத்திற்குப் பின்புதான் பொலிஸாரால் தோட்டத்து பங்களாவிற்குள் நுழைய முடிந்தது. ஆனால் பொலிஸார் பங்களாவிற்குள் நுழைந்ததும் இளவரசரைக் கைது செய்ய முடியவில்லை.

ஏனெனில் பொலிஸார் பங்களாவிற்குள் நுழைவதற்கு முன்பே, தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுவிட்டார் இளவரசர். ஊருக்கு ராஜாவாக இருந்த அவர் எப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

பம்பரம் எங்கள் வாழ்வு

— செ. குணரத்தினம் —

நான் செய்த பாவமோ நீ செய்த பாவமோ
நாமொன்று சேர்ந்து விட்டோம் — தந்தை
தாய் செய்த பாவமோ யார் செய்த பாவமோ
தாய்தந்தையாகி விட்டோம்!

ஊரென்ன செய்யலாம் உறவென்ன செய்யலாம்
ஊழ்வினைப் பயனிதென்றால் — அன்பே
நானென்ன செய்யலாம் நீயென்ன செய்யலாம்
நாம் வெறும் பொம்மையென்றால்!

நீயென்னை நம்பினாய் நானுன்னை நம்பினேன்
நம்மக்கள் நமை நம்பினர் — இன்று
நாமெல்லாம் தில்லையில் ஆடிடும் தேவனை
நம்பியே வாழுகின்றோம்!

உயரலாம் தாழலாம் உலகமே அழியலாம்
உள்ளத்தின் திடம் போவதா! — அன்பே
பயமிலைக் கேளடி படைத்தவன் கையிலே
பம்பரம் எங்கள் வாழ்வு!

உடல் பசி தீருமுன் குடல்பசி ஓயுமுன்
ஓடிடும் எங்கள் ஆவி — வாழ்வு
திடமில்லை என்றாலும் மனமென்ன கேட்குதா
தேடுதே மாய வாழ்வை!

ஆழ்கடல் மீதிலே ஆடிடும் தோணிபோல்
ஆடிடும் எங்கள் வாழ்வு! — ஒரு
நாளிலே மாறலாம் நம்முயிர் ஓடலாம்
நாடெல்லாம் சேர்ந்து அழலாம்!

மூச்சோடிப் போனபின் பேச்சோடிப் போய்விடும்!
மூட்டுவார் தீயை ஓர்நாள் — இந்த
மூச்சுள்ள மட்டிலும் மோட்சமும், நரகமும்
முன்னாலே நின்று சுழலும்!

அவரவர் தலையிலே அவரவர் விதியினை
ஆண்டவன் எழுதிவைத்தான் — அன்பே
எவரிதை மாற்றுவார் எவரிதை ஓட்டுவார்
இதுதானே மனித வாழ்வு!

சோதிட சிந்தாமணி

— சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி —

16 — 10 — 1983 தொடக்கம் 22 — 10 — 1983 வரையுள்ள பலாபலன்கள்.

மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்.

மேஷம்:- ஆரோக்கியம், கௌரவம் நன்றாகத் தோன்றினாலும் மனநிலை சரியாக இருக்காது. செலவுகள் அதிகம் ஏற்படும். கடன் தொல்லை தொடராது. கொடுக்கல் வாங்கல் திருப்தியாக நடைபெறும். எதிர்பார்த்த காரியங்கள் சில தாமதிக்கப்படும். குழந்தையின் பொருட்டு சிறு கவலை ஏற்பட்டு அகலும்.

ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் கால்கள். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் கால்கள்.

ரிஷபம்:- வாழ்க்கையில் ஏற்பட்ட கஷ்டம் படிப்படியாக நீங்கி, முன்னேற்றம் காணப்படும். அரசாங்க ஆதரவு ஓரளவு நன்மை தரும். பண நிலைமை திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட தொல்லை நீங்கி, மன அமைதி நிலவும். பலருடைய ஆதரவில் பெருமையடையும் வாய்ப்புண்டு.

மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் கால்கள்,

மிதுனம்:-எதிர்காலம் முன்பை விட மிகவும் முன்னேற்றமுடையதாக சிறந்து விளங்கும். பண வசதி அவ்வளவு திருப்தியாக இராது. பிறருக்கு உதவி செய்ய முற்பட்டு வீண் விரயம் ஏற்படும். எதிலும் கவனமாய் இருப்பது நல்லது. வீடு, நிலம் போன்றவற்றால் வருமானம் ஏற்படும். வாகனத்தால் செலவு அதிகரிக்கும்.

கடகம்

புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயில்யம்.

கடகம்:- வாழ்க்கை சற்று நிம்மதியாக நடக்கும். கடன் கட்டுக்கடங்கியிருக்கும். பணப் புழக்கம் நன்றாக இருக்கும். ஒரு சுபகாரிய நிமித்தம் சிறிது செலவு தலை தூக்கி தீரும். ஆனால் கொடுக்கல் வாங்கல் சீராக நடைபெறும். சிலர் உல்லாசப் பிரயாணம், புண்ணிய [illegible]

சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால்.

சிங்கம்:- மனச் சஞ்சலம், சோர்வு முதலியன காணப்படும். தேகாரோக்கியம் நன்றாக இராது. தூரப் போக்குவரத்து அனுகூலமுடையதாக இருக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். ஆனால் அதற்கேற்ற செலவினங்கள் அதிகரிக்கும். பெரிய மனிதர்களின் கோபத்துக்கு அல்லது மேலதிகாரியின் சினத்துக்கு ஆளாக நேரிடும்.

கன்னி

உத்தரம் 2, 3, 4 ஆம் கால்கள். அத்தம். சித்திரை 1ஆம், 2ஆம் கால்கள்.

கன்னி:- தொழில் முன்னேற்றம் நன்கு நடைபெறும். எதிர்காலம் மேன்மையுடன் காணப்படும். மனநிலை சிறிது கலவரமாக இருந்தாலும் இறுதியில் நிம்மதி பெறுவர். புதுத் தொழில் முயற்சியொன்று உருவாகும். பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். சகோதரங்களிடையே பகைமை ஏற்பட இடமுண்டு. வாய்த் தர்க்கங்களைக் குறைப்பது நல்லது.

துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள். சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்.

துலாம்:- தேகாரோக்கியம், கௌரவம் நன்றாக இருக்கும். பெரிய மனிதர்கள், மேலதிகாரி போன்றோரின் ஆதரவு கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த மனஸ்தாபம் நீங்கும். கோர்ட் வழக்குகள் வெற்றி தரும். தாய் வழியால் எதிர்பாராத வருமானம் வந்து சேரும். சகோதரங்களுக்கிடையே சிறு பிணக்குகள் ஏற்பட இடமுண்டு.

விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால் அனுஷம், கேட்டை.

விருச்சிகம்:- குடும்பத்தில் நிம்மதியான சூழ்நிலை ஏற்படும். முயற்சிகள் யாவும் இலாபகரமாக முடியும். தேகாரோக்கியம் அபிவிருத்தியடையும். சிறு பிரயாணங்கள் செய்ய நேரிடும். மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கும் செய்தி ஒன்று கிடைக்கும். வாகன சுகம் உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி. கலைஞர் — [illegible]

தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால்.

தனுசு:- தொழில், வியாபாரம் போன்றவற்றில் முன்னேற்றம் காணப்படும். கொடுக்கல் வாங்கலில் திருப்தி நிலவும். கௌரவம், தேகாரோக்கியம் நன்றாக இருக்கும். மனைவி வழியில் திடீர்ச் செலவு ஒன்று ஏற்படும். வீடு, நிலம் போன்றவற்றால் மன நிம்மதி குறைவு. மாணவர்களுக்குப் பிரச்சினையான வாரம் இது.

மகரம்

உத்திராடம் 2, 3, 4ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம் 2ஆம் கால்கள்.

மகரம்:- இவ்வாரம் பெரும்பாலும் அனுகூலமான பலனை எதிர்பார்க்கலாம். கௌரவம், நம்பிக்கை, செல்வாக்கு சிறந்து விளங்கும். தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்பட்டாலும் சமாளித்துக் கொள்ளலாம். பெரியோர் ஆதரவு அரசாங்க உதவி போன்றவை இலகுவில் கிடைக்கும். எதிர்பார்த்த பிரயாணம் கைகூடும்.

கும்பம்

அவிட்டம் 3, 4ஆம் கால்கள், பூரட்டாதி, சதயம் 1, 2, 3ஆம் கால்கள்.

கும்பம்:- வாழ்க்கையில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் உயர்ச்சிக்கு இடமுண்டு. சுப காரிய நிமித்தம் சிறு பிரயாணங்கள் செய்ய நேரிடும். போதிய பண வசதி இருக்கும். செலவுகள் அநாவசியமாக ஏற்பட்டுச் சமாளிக்கப்படும். நண்பர்கள் சிலர் பகைவர்களாக மாறச் சந்தர்ப்பம் ஏற்படும். ஜாக்கிரதையாக நடந்து கொள்வது நல்லது.

மீனம்

பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி.

மீனம்:- வாழ்க்கையில் பின் தங்கியிருந்த சில விஷயங்கள் துரிதமாக நிறைவேறும். கௌரவம் நன்கு பிரகாசிக்கும். தேகாரோக்கியம் நிறைந்து காணப்படும். கடன் தொல்லை தராது. கொடுக்கல், வாங்கலில் அனுகூலமான சூழ்நிலை அமையும். காணாமல் போன பொருட்கள் சில திரும்பி வந்து சேரும். கோர்ட் விவகாரங்கள் வெற்றி [illegible]

மலைநாட்டு நவ போஷாக்கூட்டும் பசும் பால்...
අඹේවෙල හයිලන්ඩ්
සම්පූර්ණ යොදය සහිත
කිරිපිටි
AMBEWELA HIGHLAND Full Cream Milk Powder
அம்பேவெல ஹைலெண்ட் முழு ஆடைப் பால்மா
400 GRAMS
400 கிராம் ரூ. 20/=
250 கிராம் ரூ. 13/75=
அம்பேவெல ஹைறலெண்ட் பால் மா
முழுக் குடும்பத்துக்கும் போஷாக்கூட்டும் இந்தப் பசும்பாலை வழங்குங்கள்
TAL

மலைநாட்டுப் பண்ணைகளில் உள்ள உறுதியான, ஆரோக்கியமான பசுக்கள் தரும் போஷாக்கூட்டும் பசும்பால், அம்பேவெல தொழிற்சாலையில், ஒரு சில மணி நேரத்தில், ''அமி - உலர்'' முறையில் பால் மா ஆக்கப்படுகிறது. முழு ஆடைப் பசுமை கொண்ட அம்பேவெல ஹைலெண்ட் பால் மா, மஞ்சள் நிறப் பக்கெட்டில் அடைத்து சில தினங்களிலேயே உங்களுக்குக் கிடைக்கிறது. இந்தப் போஷாக்கூட்டும் மலைநாட்டுப் பாலின் பசுமைக்குரிய மர்மம் இதுவே.

அன்று இருந்த பொலிவு சிவாஜிக்கு இன்றும் வந்து விட்டது. திட்டத் திட்ட வைரம் சுடர் விடுவது போல் இங்கு அவருடன் ஸ்ரீதேவி தோன்றும் கட்டம் "சுமங்கலி" படத்தில். (ம- 16)

கராத்தே மணி சாமியார் வேடம்

பரட்டைத் தலை, மூக்கில் வளையம், முகத்தில் தாடி, மீசை, அழுக்கடைந்த ஆடை — சந்நியாசி கோலத்தில் சாமியார் வேடம் பூண்டு நடிக்கிறார், கராத்தே மணி.

எங்கு அக்கிரமம் நடந்தாலும் தட்டிக் கேட்பார். தவறுகளைச் சுட்டிக்காட்டி, தேவையானால் அடித்து திருத்தும் அந்த அதிசய சாமியாரை "அவள் ஒரு மாதிரி" படத்தில் காணலாம்.

விஜி, அம்பிகா, ராஜ சுலோசனா, ஏ. சகுந்தலா, சுரேஷ், எஸ். வி. சேகர், செந்தில் மற்றும் பலர் நடிக்கும் இந்த படத்தின் கதை – வசனத்தை எழுதி கலைஞானம் – பனசை மணி இருவரும் இயக்குகிறார்கள். (ம—10)

பானுப்பிரியா அழகே, அழகு!

பானுப்பிரியாவின் காமிரா தோற்றத்தையும் கண்களையும் பாராட்டி டைரக்டர் விசு சொன்னார்:

சமீபத்தில் வந்த கதாநாயகிகளுள் இவருக்கு நல்ல உடலமைப்பு உள்ளது. தக்க கதா பாத்திரத்தில் நடிக்க வைத்தால் சிறந்த நடிகையாக வர வாய்ப்பு இருக்கிறது. (ம-10)

ஆண்டவன் கொடுத்த தேகம் எல்லாருக்கும் ஒரே மாதிரியானதுதான். ஆனால் அதனை வேண்டிய மாதிரி எல்லாம் இயக்கும் வல்லமை எத்தனைவருக்கு வாய்க்கிறதோ அதில்தான் தங்கியிருக்கிறது வெற்றி. சிலுக்கின் கவர்ச்சியான தேகம் இங்கு பிரபுவின் நெருக்கத்தில் கிளர்ச்சி பெறுகிறது. படம்: சூரக் கோட்டை சிங்கக் குட்டி. (ம- 10)

நட்சத்திரங்களுக்கு பணத்துடன் வரும் கேடு!

சினிமா நட்சத்திரங்களுக்கு லட்சம் லட்சமாகப் பொருள் சேருகிறது. ஆனால் அத்துடன் கேடும் வந்து சேருகிறது.

இந்தியில் பிரபல நட்சத்திரங்களான ரேகா மற்றும் ராஜேஷ் கன்னா மீது வருமான வரித்துறை பம்பாய் பெருநகர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளது. வருமான வரி மற்றும் சொத்து வரிகளை ஏமாற்றியதாக இருவர் மீதும் இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

வருமான வரியை பொறுத்தவரையில் ரேகா மீது இரண்டு வழக்குகளும், சொத்து வரியை ஏமாற்றியதாக 2 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு உள்ளன. தனக்கு வந்த ஒரு லட்சத்து 35 ரூபாய் வருமானத்தை கடனாக வாங்கிய பணம் என ரேகா கணக்கு காட்டினாலும் அதை நம்ப முடியாது என வருமான வரித்துறை இந்த வழக்கில் கூறியுள்ளது.

தனக்குக் கடன் கொடுத்தவர்கள் பெயரில் வங்கிகளில் ரேகா பணம் செலுத்தி இருந்த போதிலும் அந்த பணத்தை அவர்கள் எடுக்காமல் இருக்க அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் ரேகா பணம் கொடுத்ததாகவும் வருமான வரித்துறை குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் ஐந்தரை லட்சம் ரூபாய்க்கு பம்பாயில் உள்ள ஒரு நகைக் கடையில் ரேகா வைரங்களை வாங்கி உள்ளார். ஆனால் அவற்றை தனது வருமானக் கணக்கிலோ சொத்துக் கணக்கிலோ அவர் காட்டவில்லை எனவும் ரேகா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவைகளைத் தவிர பல்வேறு படங்களில் இருந்து தனக்குக் கிடைத்த ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய்க்கு ரேகா வரி கட்ட வேண்டி உள்ளது என வருமான வரித்துறை கூறுகிறது. ஆனால் என்ன காரணத்தாலோ இந்த 40 லட்சம் ரூபாய்க்கான வரி ஏய்ப்பு வழக்கு தொடரப் படவில்லை.

ராஜேஷ் கன்னா 1976ல் 3 லட்சம் செலவில் ஒரு மினி தியேட்டர் கட்டியுள்ளார் என்றும், இந்த தியேட்டரின் இன்னொரு பங்குதாரரான சோம்புமுகர்ஜி என்பவர் 100 ரூபாய் மட்டுமே முதலீடு செய்துள்ளார் என்றும் வருமான வரித்துறை ராஜேஷ் கன்னா மீது குற்றம் சாட்டி உள்ளது. மொத்தத்தில் வருமான வரியை ஏமாற்றியதாக ஆறு வழக்குகளும், சொத்து வரியை ஏமாற்றியதாக 7 வழக்குகளும் ராஜேஷ் கன்னாவின் மீது தொடரப்பட்டு உள்ளன. இன்னும் எத்தனை நட்சத்திரங்களுக்குத்தான் இது போன்ற தொல்லைகள் இருக்கின்றனவோ? (ம-10)

சரிதா – ஊர்வசி தியாகராஜனின் ஜோடிகள்

வி. ஆர். ஆர். பிலிம்ஸ் என்னும் நிறுவனம் தியாகராஜன் கதாநாயகனாக நடிக்க "கொம்பேறி மூக்கன்" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது.

தியாகராஜன் ஜோடிகளாக சரிதா – ஊர்வசி நடிக்கிறார்கள். ஜெய்சங்கர் முக்கிய வேடத்தில் நடிக்க, பத்மினி, ஜெயமாலினி, காந்திமதி, செந்தாமரை, செந்தில், ஜனாஷா ஷெரீப் நடிக்கிறார்கள்.

கதாநாயகனாக நடிக்கும் தியாகராஜன் எழுதிய கதைக்கு ஏ. எல். நாராயணன் திரைக்கதை வசனம் எழுதுகிறார். ஒளிப்பதிவு கணேச பாண்டியன்.

இளையராஜா இசை அமைக்க, ஏ. ஜகந்நாதன் டைரக்ட் செய்கிறார். படப்பிடிப்பு இந்த மாதம் தொடங்குகிறது. பெரும் பகுதி காட்சிகள் கோவை, சேலம் மாவட்டங்களில் உள்ள பல இடங்களில் படமாகும். (ம-10)

அம்பிகாவுக்கு என்றும் [illegible] மனம். அவரைச் சிவச்சந்திரன் இப்படி மிரட்டலாமா?. "வெள்ளை ரோஜா" படத்தில் வருகிறது இந்தக் காட்சி. (ம- 10)

அரிவையரின் கண்கள் சில சந்தர்ப்பங்களில் வாளை விடக் கூர்மையானவை என்று கூறுவது உண்மை தானே? இந்தி நடிகை தனுஜாவின் பார்வையே அதற்குச் சான்று. (ம—10)

கவுண்டமணிக்கு கிடைத்த பரிசு

"நிலா நிலா ஓடிவா" படத்தின் ஆரம்பக் காட்சி கோவை சிவாலயா தியேட்டரில் துவங்கியது. அந்தத் தியேட்டர் வாசலில் கவுண்டமணி பிளாக்கில் டிக்கெட் விற்பது போல காட்சியைப் படமெடுத்தார்கள்.

வேடிக்கை என்னவென்றால் தியேட்டரில் ஓடுவதோ "பயணங்கள் முடிவதில்லை" படம். கவுண்டமணி நடித்த படத்துக்கு அவரே பிளாக்கில் டிக்கெட் விற்பது போல நடித்ததும், ரசிகர்கள் ஆரவாரம் செய்து வேடிக்கை பார்த்தார்களாம்!

விளைவு? காட்சி எடுத்து முடிந்ததும் கவுண்டமணியின் உடலின் மீது ஏகப்பட்ட நகக் கீறல்கள். "ரசிகர்கள் தந்த பரிசு" என்று கீறலைக் காட்டி மகிழ்ந்தார் கவுண்டமணி. (ம—10)

சக நடிகர் வாழ்வுக்கு ஜெய்சங்கர் பேருதவி!

நடிகர் ஜெய்சங்கர் காலத்துடன் அனுசரித்து நடக்கக் கூடிய திறமைசாலி. காலத்துக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்டு தமது சினிமா மார்க்கெட்டைப் பேணும் கெட்டிக்காரர். அத்துடன் புதிய "மார்க்கெட்" ஒன்றும் அவருக்கு உண்டு. அதுதான் "ரியல் எஸ்டேட் மார்க்கெட்". ஆம்! நிலம், வீடு ஆகியவற்றை வாங்கி விற்கும் தொழில் அவருக்கு ஒரு "சைட் பிஸ்னஸ்". அதன் மூலம் தமது சக நடிகர்கள் வாழ்வுக்கும் அவர் பேருதவி புரிகிறார்.

நடிகர் குள்ளமணி சின்னச் சின்ன வேடங்களில் நடித்தே 18 ஆயிரம் ரூபா சேர்த்தார். அந்தப் பணத்தைக் கொண்டு போய் ஜெய்சங்கரிடம் கொடுத்தார். அவர் குள்ளமணியின் சொந்த ஊரில் (மன்னார்குடி சமீபம்) இரண்டரை ஏக்கர் நஞ்சை நிலம் வாங்கிக்கொடுத்தார். ஜாம் ஜாமென குள்ளமணியின் பெற்றோர் விவசாயம் நடத்துகிறார்களாம்.

கே. ஆர். விஜயாவும், ரஜனிகாந்தும் நிலம் வாங்கிப் போடுவது ஆச்சரியமில்லை, குள்ளமணி வாங்கியிருப்பது ஆச்சரியம்தான்.

அதற்குத் துணை நிற்பவர் ஜெய்சங்கர் அல்லவா? (ம- 10)

மாட்டை அடக்கி வைப்பதானால் கடிவாளம் அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறார் போலும் மேனகா. இங்கு ராஜீவை அவள் கைக்குள் போட முயலுவது "கடிவாளம்" படத்திற்காக. (ம—10)

ஜேசுதாஸ் மாறவே இல்லை

சமீபத்தில் பின்னணிப் பாடகர் ஜேசுதாஸ் மலையாள இசை அமைப்பாளர் தட்சிணாமூர்த்தியின் பிறந்த நாள் விழாவுக்குச் சென்றார். குறிப்பிட்ட நேரத்தில் விழாவுக்குச் செல்லாமல் சற்று தாமதமாகச் சென்றிருக்கிறார் ஜேசுதாஸ்.

அதைக் கண்ட பெரியவர் தட்சிணாமூர்த்தி வருத்தத்துடன் கூறினார். "நீ இப்ப பெரிய பாடகனாச்சே, உன்னால் நேரத்துக்கு வர முடியாதல்லவா!" அதைக் கேட்ட ஜேசுதாஸ் கண்கலங்கினார். பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிறிய பர்ஸ் எடுத்தார்.

அதில் மெலிந்து வறுமையில் வாடும் ஒரு சிறுவனின் பழைய போட்டோ இருந்தது. அதை இசை அமைப்பாளரிடம் காட்டி "சாமி! இந்தப் போட்டோவில் இருக்கிற அன்றைய ஏழையான ஜேசுதாஸ் என்றும் அவன் பழைய வாழ்க்கையை மறக்க மாட்டான்" என்று அழுத குரலில் கூறினார் ஜேசுதாஸ். (ம- 10)

மோகன்—நளினி ஜோடிக்கு மார்க்கெட் சூடு பிடிக்கிறது!

எஸ். என். எஸ். திருமாலின் அஷ்டலட்சுமி பிக்சர் "சரணாலயம்" என்ற படத்தைத் தயாரிக்கிறது.

மோகன் – நளினி நடித்து வரும் இந்தப் படத்தின் கதை திரைக்கதை வசனம் டைரக்ஷன்: ஆர். சுந்தரராஜன்.

இதை அடுத்து அஷ்டலட்சுமி பிக்சர்ஸ் ஏராளமான பொருட்செலவில் 2 புதுப் படங்களை தயாரிக்கிறது. இரு படங்களிலும் மோகன் – நளினி நடிக்கிறார்கள்.

ஒரு படத்தின் கதை திரைக் கதை வசனம் டைரக்ஷன்: ஆர். சுந்தரராஜன். இன்னொரு படத்தின் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார், மணிவண்ணன்.

ஆர். சுந்தரராஜன் டைரக்ட் செய்யும் படத்தை வருகிற தைப் பொங்கல் திருநாளில் திரையிட திட்டமிட்டு உள்ளனர். இரு படங்களுக்கும் எம். எஸ். விசுவநாதன் இசை அமைக்க, பேபி ஒளிப்பதிவு செய்கிறார். (ம-10)

முக்கிய வேடத்தில் ஜூடோ ரத்தினம்

கே. ஆர். கே. ஆர்ட் பிலிம்சின் "நாணயம் இல்லாத நாணயம்" படப்பிடிப்பு வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் "ஸ்டண்ட்" மாஸ்டர் ஜூடோ ரத்தினம் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார்.

விசுவின் சித்தப்பாவாக வேடம் ஏற்று நடிக்கிறார், ஜூடோ ரத்தினம்.

எஸ். வி. சேகர், ராஜேஷ், சிவசந்திரன், இந்து, சத்யகலா, எம். என். ராஜம், பி. ஆர். வரலட்சுமி, ராஜலட்சுமி, புதுமுகம் யமுனா ஆகியோருடன் விசுவும் நடிக்கிறார்.

கதை வசனம் டைரக்ஷன்: விசு. இசை: விஜயஆனந்த். என். பாலகிருஷ்ணன் ஒளிப்பதிவைக் கவனிக்க, கே. ஆர். கண்ணன் தயாரிக்கிறார். பிரகாஷ் படப்பிடிப்பு நிலையத்தில் படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. (ம—10)

தந்தையை விட மாறுபட்டவர்

நடிகர் திலகம் சிவாஜி செட்டுக்கு வந்தால் அவருக்கு படப்பிடிப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் செட்டிலேயே தான் இருப்பார்.

ஆனால் அவரது மகன் பிரபு இதற்கு நேர்மாறு. படப்பிடிப்பு இல்லாத நேரங்களில் மேக்கப் ரூமுக்கு ஓடிப்போய் ஆர்வத்துடன் விடியோ பார்க்கிறார் சக நடிகைகளுடன்! (ம-10)

இன்றைய நடிகைகளுக்கு எது எது எல்லாம் தேவை!

ஒரு பிரபல நடிகைக்கு நடித்துக் கொண்டிருக்கும் போது "ஸ்கர்ட்" தேவைப்பட்டதாம். நடிகையின் தாயார் தயாரிப்பாளரின் செலவில் அதை வாங்கி வரச் சொன்னாராம்.

புரொடக்ஷன் சம்பந்தப் பட்ட ஒருவர் ஓடிப் போய் அதை வாங்கி வந்து நடிகையின் அம்மாவிடம் கொடுத்தாராம்.

அதை மேலும் [illegible] புரட்டிப் பார்த்து விட்டு, "நான் வாங்கி வரச் சொன்னது இந்த கம்பெனி அல்ல. வேறு பிராண்டு வாங்கி வாருங்கள்" என்றவாறே திருப்பிக் கொடுத்து விட்டு கோபித்துக் கொண்டாராம் அம்மா.

"இதையெல்லாம் நான் தெரிந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும். தம்பி!" என்று தயாரிப்பாளர் தலையில் அடித்துக் கொண்டாராம். (ம-10)

'வளர்த்த கடா' துரித வளர்ச்சி

மேகலை பிலிம்சின் "வளர்த்த கடா" வேகமாக வளருகிறது. "கராத்தே" நிபுணர் ஆர். வி. டி. மணி, சுரேஷ், சங்கிலி முருகன், பூர்ணம் விசுவநாதன், [illegible], ராக்கெட் ராமநாதன், [illegible] நடிக்கிறார்கள்.

சங்கர் – கணேஷ் இசை அமைக்க, லோகேஷ் ஒளிப்பதிவு செய்கிறார். கதை திரைக்கதை வசனம் கருமாரி கந்தசாமி, டைரக்ஷன்: கந்தசாமி—சிவகுமார். (ம—10)



உஷ்... இது ரகசியம்

"சிலுக்குக்கு போட்டியாக வந்த நடிகையே வருக! வருக!" என்று சமீபத்தில் ஒரு ஆட்டக்காரியை தேடிப் போனார்கள் பல பட அதிபர்கள். இப்போது தேடிப்போன வேகத்திலேயே திரும்பி, குலுக்கு... குலுக்கு என்று சிலுக்கிடமே "கால்ஷீட்டு" கேட்டு ஓடுகிறார்களாம். தேடிப்போன நடிகையின் உடல் படத்துக்குப் படம் உப்பிக் கொண்டிருப்பதே காரணமாம்!

★

ஸ்ரீதேவிக்கு இந்திப் படங்களில் "சான்ஸ்" தேடிக் கொடுப்பதில் முனைந்து செயல்படுகிறாராம் இந்தி நடிகர் ஜிதேந்திரா. இங்கே எந்த நடிகை ஆனால் என்ன? இங்கிருந்து அங்கு சென்றால் அங்குள்ள ஒரு பிரபல நடிகரின் தயவுதான் வேண்டும் போலும்!

★

ஏவி. எம். ஸ்டுடியோவுக்குள் நுழையும் போது ஒரு கவர்ச்சி நடிகை வெறும் லங்கோட் மட்டும் அணிந்து நடந்து வந்து கொண்டிருந்தார். அருகில் அவரது அம்மா. இப்படிப் பட்ட உடையில் இருக்கும் போது நடிகைகள் நாற்காலியை விட்டு எழுந்திருக்கக் கூட மாட்டார்கள். ஆனால் இவரோ கொஞ்சம் கூட கூச்சம் இன்றி டப்பிங் தியேட்டரில் இருந்த ஒரு பிரபல டைரக்டரைப் பார்க்கும் ஆர்வத்தில் அவ்வாறு நடந்து வந்தது வியப்பாக இருந்தது. யார் அந்த நடிகை? [illegible] பாணியில் சொல்லப் போனால், அவர் ஒரு நதியின் பெயரைக் கொண்டவர். புரியவில்லை என்றால் ஆந்திராவில் இருந்து வரும் அரிசியை நினைத்துக் கொள்ளுங்கள். (ம-10)

'நேரம் காலம் நல்லா இருக்கு'

மோகன் புரொடக்சன்ஸ் "நேரம் காலம் நல்லா இருக்கு" என்ற பெயரில் படம் தயாரிக்கிறது. இதில் பிரபு கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகி மற்ற நட்சத்திர தேர்வு நடந்து கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தின் கதை வசனம் டைரக்ஷன்: கங்கை அமரன். இசை: இளையராஜா.

"நேரம் காலம் நல்லா இருக்கு" படத் தொடக்க விழா பாடல் ஒலிப்பதிவுடன் பிரசாத் படப்பிடிப்பு நிலையத்தில் நடந்துள்ளது.

மோகன் புரொடக்சன்ஸ் அளிக்க அபிராமி என்டர்பிரைசஸ் "எங்க ராஜா" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறது. பிரபு – ஊர்வசி ஜோடிகளுடன் நம்பியார், அனுராதா மற்றும் பலர் நடிக்கிறார்கள். இதன் கதை வசனம் ஏ. எல். நாராயணன் எழுத, இளையராஜா இசை அமைக்க, என். கே. சேகர் ஒளிப்பதிவு செய்கிறார். (ம-10)

அலைமோதும் கூந்தலைக் கோதிவிட்டுக் குன்றும் ஜாடை காட்டிடும் அஞ்சலிநாயுடு ஓட்டப் பந்தயத்துக்குத் தயாராகிருரோ? (ம- 10)

விஜிக்கு என்ன துடி இடையா இருக்கிறது, ஒடிந்து விடுமே என்று விஜயகாந்த் கவலைப்படுவதற்கு "சாட்சி" படத்தில் வரும் காதல் காட்சி. (ம- 10)

"கைராசிக்காரன்"

பிரபுவுக்கு ராதா ஜோடி!

எஸ். கே. எஸ். பிலிம்ஸ் பிரபு – ராதா ஜோடியாக நடிக்க "கைராசிக்காரன்" என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள்.

இந்தப் படத்தின் தொடக்க விழா பிரசாத் ஒலிப்பதிவு கூடத்தில் நடந்தது. மலேசிய வாசுதேவன் குழுவினர் பாடிய பாடல் இளையராஜா இசையில் ஒலிப்பதிவானது.

பட அதிபர் அருப்புக்கோட்டை எஸ். எஸ். கருப்பசாமி குத்து விளக்கேற்றி விழாவை தொடங்கி வைத்தார், எம். என். நம்பியார், சிலுக்கு சுமிதா, தீபா மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ரா. சி. ரங்கராஜன் எழுதிய கதைக்கு செல்வகுமார் திரைக்கதை வசனம் எழுதுகிறார். ஒளிப்பதிவு டி. டி. பிரசாத், தயாரிப்பு டைரக்ஷன் எஸ்- எஸ். கே. சண்முகம் — எஸ். எஸ்- கே. சங்கரலிங்கம் (ம—10)

தமிழ்ப்பட உலகில்

தம்பிகளின் சீசன்!

தங்கைகள் நடிக்கும் சீசன் ஓய்ந்து போய் நட்சத்திரங்களின் தம்பிகள் நடிக்கும் சீசன் இது, ஜெயசித்ராவின் தம்பி, ஜெயப்பிரதாவின் தம்பி, ஊர்வசியின் தம்பி, லதாவின் தம்பி இப்படி வரிசையாக நடிகைகளின் தம்பிகள் நடிப்பது போல நடிகர்களுள் ராஜேஷின் தம்பியும் படத்தில் நடிக்கப் போகிறார் கலைஞானத்தின் "அவள் ஒரு மாதிரி" படத்தில் நடிக்கும் இவர் பெயர் ரூபன்.

அக்காவும் தங்கையும் நடிகைகளாக இருந்தால் ஒரு வசதி, தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து மார்க்கெட்டைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ராதாவுக்கும் அம்பிகாவுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம், ஒருவர் கதாநாயகியாக நடிக்கும் படத்துவக்க விழாவின் போது அவர் ஊரில் இல்லையென்றால் மற்றொருவர் போக வேண்டும் என்பது. "பக்கத்து வீட்டு ரோஜா" படத்தில் ராதா கதாநாயகி, ஆனால், அப்படத் துவக்க விழாவிற்கு அம்பிகா வந்தார். அம்பிகா கதாநாயகியாக நடிக்கும் "அவள் ஒரு மாதிரி" படத் துவக்க விழாவிற்கு அவர் ஊரில் இல்லாததால் ராதா வந்திருந்தார். இது எப்படி? (ம—10)

'மனைவி சொல்லே மந்திரம்' கதாநாயகி மாற்றம்

எவரெஸ்ட் பிலிம்ஸ் "மனைவி சொல்லே மந்திரம்" படத்தின் கதாநாயகி ரேவதி மாற்றப்பட்டார். அவருக்குப் பதிலாக இளவரசி ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார். பாண்டியனும், இளவரசியும் ஜோடியாக நடிக்கிறார்கள்.

நளினி, ராஜசுலோசனா, யுகலட்சுமி, மோகன், வினு சக்ரவர்த்தி, வெ. ஆ. மூர்த்தி, எஸ். எஸ். சந்திரன், டி. கே. எஸ். சந்திரன், செந்தில் கிருஷ்ணன் மற்றும் பலர் நடிக்கும் இதன் கதை வசனத்தை கலைமணி எழுதுகிறார்.

என். கே. விஸ்வநாதன் கேமராவை கையாள, இளையராஜா இசை அமைக்க ராம நாராயணன் இயக்கி வருகிறார். (ம—10)

சுந்தரத்தின் 'மூடு மந்திரம்'

"தாம்பத்தியம் ஒரு சங்கீதம்" என்ற படத்தைத் தயாரித்த ஆர். ஆர். பிலிம்ஸ் அடுத்து புதுப்படம் தயாரிக்கிறது. இதற்கு "மூடு மந்திரம்" என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது. ஜெய்சங்கர், கே. ஆர். விஜயா ஆகியோர் நடிக்கிறார்கள். கதாநாயகன், கதாநாயகி மற்ற நடிகர்கள் – நடிகைகள் தேர்வு நடக்கிறது.

கதை வசனம் வியட்நாம் வீடு சுந்தரம் எழுத, பி. என். சுந்தரம் ஒளிப்பதிவு செய்கிறார்- இசை: எம். எஸ். விசுவநாதன்

ராகு டைரக்ட் செய்யும் "மூடு மந்திரம்" படத் தொடக்க விழா இந்த மாதம் ஏவி. எம். ஒலிப்பதிவு கூடத்தில் பாடல் ஒலிப்பதிவுடன் நடைபெறும். (ம-10)

"தினந்தோறும் தீபாவளி" கொண்டாட விருப்பமா?

"கண் வடியும் பூக்கள்" என்ற படத்தின் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்து தயாரித்து திரையிட்டவர் வி. கார்த்திகேயன்.

இதை அடுத்து வி. கார்த்திகேயன் கதை திரைக்கதை வசனம் டைரக்ஷன் பொறுப்பு ஏற்று தயாரிக்கும் புதுப் படத்தின் பெயர் "தினந்தோறும் தீபாவளி"

எஸ். வி. சேகர், விஜி, எம். என். நம்பியார், தங்கவேலு, மனோரமா, நடிக்கிறார்கள். சங்கர் – கணேஷ் இசை அமைக்க, வாலி பாடல்கள் எழுத, பெஞ்சமின் ஒலிப்பதிவு செய்கிறார்.

"தினந்தோறும் தீபாவளி" படத் தொடக்க விழா ஏவி. எம். ஒலிப்பதிவு கூடத்தில் பாடல் ஒலிப்பதிவுடன் நடந்தது.

முழு படப்பிடிப்பும் இயற்கை அன்னை தாலாட்டும் எழில் சூழ்ந்த இடங்களில் நடைபெறும். (ம-10)

மனதில் எழுந்த தாபம் எவ்வளவு தூரத்துக்குத்தான் அநுராதாவை இப்படி வாட்டி எடுத்து விட்டது. முகத்தில் வாட்டம் சேர உடலில் ஜொலிப்பும் கூடுகிறதே! அது எப்படி?, "தீர்ப்பு என் கையில்" படத்தில் இவ்வாறு தோன்றுகிறார் அவர். (ம- 10)

புகைப்படக்காரர் அலற அலற முத்தம்!

புகைப்படக்காரர்கள் புதுமுக நடிகைகளுக்குத் தொல்லை கொடுப்பது வழக்கம். ஆனால் புகைப்படக்காரர் ஒருவர் அலற, அலற குட்டி நடன நடிகைகள் முத்தம் கொடுத்தனர்.

"சுராங்கனி" படத்தில் சிலுக்குடன் பல நடனப் பெண்கள் நடித்துக் கொண்டிருந்தார்கள், அத்தனைபேருக்கும் கறுப்பு மேக்கப். அப் படத்திற்குப் புகைப்படம் எடுக்கும் நேஷனல் செல்லையா சலவை செய்யப்பட்ட வெள்ளை உடையில் மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்தில் அவருடைய சட்டையெல்லாம் கறுப்பாகி அலற ஆரம்பித்து விட்டார், எல்லாம் அந்த நடனப் பெண்கள் செய்த வேலைதான். அவரைக் கட்டி அணைத்து, கையில் உள்ள கறுப்பை அவரது சட்டையில் பூசிவிட்டார்கள்.

"பாருங்க சார், நேற்றைக்கும் இப்படித்தான் அச்சு, வீட்டுக்குப் போனால், என் பெண்சாதிக்கு என்ன சார் பதில் சொல்றது" என்று அவர் குறைபட்டுக் கொண்டிருக்கும் போதே ஒரு பெண் அவர், முதுகில் உதட்டு முத்திரையைப் பதித்து விட்டார், பாவம், படப்பிடிப்பாளர் இந்தக் காலத்துக் குட்டி நடிகைகளின் வேகத்துக்கு ஈடுகொடுக்க அவரால் முடியவில்லை. (ம- 10)

ஜெய்பிரதாவின் தம்பிக்கு நாயகியாக 'புதுமுக அழகி

கிரிஜா தேவராஜ் மூவிசார் "பெத்தமனம் கல்லு" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள், நடிகை ஜெயப்பிரதாவின் தம்பி ராஜ்பாபு கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடி புதுமுகம் பி. வி. லட்சுமி.

அனுராதா, ஜெயவாணி, காந்திமதி, சங்கிலி முருகன், கல்லாப்பெட்டி சிங்காரம். ஜாஸ் மோகன் மற்றும் பலரும் நடிக்கும் இதன் படப்பிடிப்பு சாந்தோம் பகுதியில் நடந்தது.

ராஜ்பாபு, ஜெயலட்சுமி இருவரும் கனவுலகில் ஆடிப்பாடி மகிழும் காட்சியை சி. ஆர். தேவராஜ் டைரக்ஷனில் ஒளிப்பதிவாளர் கே. என். சகாய் படமாக்கினர், எஸ். எஸ். ராஜமாணிக்கத்தின் கதைக்கு இயக்குநர் சி. ஆர். தேவராஜ் திரைக்கதை அமைத்து வசனம் எழுதுகிறார், செல்வரத்தினம் இசை அமைக்கிறார் (ம-10)

ராதாவின் மிடுக்கான தோற்றம் அவர் எதற்கும் அஞ்சாதவர் என்று பறைசாற்றுகிறது அல்லவா? ஆனால் அவர் துடுக்கெல்லாம் தொப்பிக்குள் அடங்கி விட்டதே. "முத்து எங்கள் சொத்து" படத்தில் இவ்வாறு தோன்றுகிறார் அவர். (ம- 10)

கவர்ச்சியான குரல் ரேகாவுக்கு

இந்திப் படவுலகின் கவர்ச்சிக் கன்னி (?)யும், பிரச்சினைக்குரிய நடிகையுமான ரேகா "அகர்கம் நாகோதா" என்ற இந்திப் படத்தில் ஒரு டூயட் பாடலை அவரே பாடுகிறாராம். ரேகாவின் உடலைப் போலவே குரலும் கவர்ச்சிகரமாக உள்ளதாம். (ம- 10)

"சட்டத்துக்கு ஒரு சவால்" பின் "ஊருக்கு உபதேசம்"

"சட்டத்துக்கு ஒரு சவால்" என்ற படத்தைத் தயாரித்த பட நிறுவனம் வாசன் பிரதர்ஸ். இந்த நிறுவனம் அடுத்து தயாரிக்கும் புதுப் படத்துக்கு "ஊருக்கு உபதேசம்" என்று பெயர் சூட்டப்பட்டு உள்ளது.

எஸ். வி. சேகர் – ஊர்வசி ஜோடியுடன், பானுப்ரியா, சுபாகர் நடிக்கிறார்கள். மிக முக்கிய வேடத்தில் நடிக்கிறார். டெல்லி கணேஷ் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

கதை திரைக்கதை விசு எழுத, ரங்கா வசனம் எழுதுகிறார். விஜயானந்த் இசை அமைக்க, பாபு ஒளிப்பதிவு செய்கிறார். டைரக்ஷன்: எஸ். பி. முத்துராமன் (ம-10)

'பிள்ளையார் சுழி'

"பிள்ளையார் சுழி" என்ற பெயரில் புது நிறுவனம் ஸ்ரீஷ பிலிம்ஸ் படம் தயாரிக்கிறது.

ஏ. வின்சென்ட் ஒளிப்பதிவை கவனிக்க, கங்கை அமரன், வைரமுத்து பாடல்கள் எழுத, இளையராஜா இசை அமைக்கிறார். ஆர். பாலகிருஷ்ணன் கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்ய, என். வெங்கடேஷ் தயாரிக்கிறார். (ம-10)

கோடம்பாக்கம் டயரி

சென்னைக்கு "டாடா" காட்டிவிட்டு பெங்களூருக்கே [illegible] போகப்போகிறார், லட்சுமி அதற்காக அங்கு வீடு வாங்கிவிட்டார். கன்னடத்தில் இன்றைய மார்க்கெட் லட்சுமிக்குதானாம்; அதுவும் தவிர சொந்தப் படத் தயாரிப்பில் தீவிரமாக இறங்கியுள்ளார். அவர் தயாரிக்கும் நான்காவது படம் வேகமாக வளர்ந்து வருகிறது. ஜோடி அனந்தநாக்.

★

பாக்யராஜை படம் எடுத்துக்கொடுக்க கேட்கும் தயாரிப்பாளர்கள், கதை விவரம் அவரிடம் கேட்பதோடு சரி; நட்சத்திரங்கள் தேர்வு, டெக்னீஷியன்கள், லொகேஷன் ஆகிய எல்லா விஷயத்தையும் பாக்யராஜிடமே விட்டு விடுகிறார்கள்.

ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்த வெண்ணிற ஆடை நிர்மலா சில மாதங்களுக்கு முன்பு "இன்சால் வென்சி" கொடுத்துவிட்டார், சொந்தப் படம் எடுத்ததில் அவருக்கு ஏற்பட்ட கடன். அவர் ரகசியத் திருமணம் செய்து கொண்டு கோட்டூர்புரத்தில் குடியேறி விட்டதாக சினிமா வட்டாரத்தில் கிசுகிசு அடிபடுகிறது. படத்தில் நடிக்கும் வாய்ப்புக்களையும் வேண்டாம் என்கிறாராம் நிர்மலா, எல்லாம் திருமணத்தால் நடந்த திருப்பம்!

★

முதன் முதலாக ராதா ஒரு மலையாளப் படத்தில் நடிக்கிறார், டைரக்டர் ஜோஷி. இப் படத்தில் ஒரு விசேஷம் ஐந்து கதாநாயகர்கள் இவருக்கு ஜோடியாக நடிக்கிறார்கள், மற்றொரு விசேஷம் மலையாளம் பேசத் தெரிந்தவர் என்பதால் சொந்தக் குரலிலேயே பேசி நடிக்கிறார்.

★

மதுரையில் கேள்விப்பட்ட கிசுகிசு: நடிகர் விஜயகாந்துக்கும் பூர்ணிமாவுக்கும் விரைவில் டும்டும் கொட்ட விருக்கிறதாம்! இது சம்பந்தமாக விஜயகாந்த் தன் பெற்றோரை மதுரையில் சந்தித்து அனுமதியும் வாங்கி விட்டாராம்.

★

விஜயகாந்தும், சந்திரசேகரும் "சிவப்பு மல்லி" படத்தில் சேர்ந்து நடித்தனர். அந்தப் படத்துக்கு பின்பு பல படங்களில் இருவரும் சேர்ந்து நடிக்க சம்மதிக்க வில்லை. இப்போது "தீர்ப்பு என் கையில்" படத்தில் இருவரும் சேர்ந்து நடிக்கிறார்கள். சேர்ந்து நடிப்பதில்லை என்ற பிடிவாதம் இப்போது நீங்கியது ஏன்"? ஒருவரை ஒருவர் நம்பி வாழ்வது என்ற முடிவுக்கு வந்தனரோ!

★

கராத்தே நிபுணர் ஆர். வி. டி. மணியிடம் கராத்தே பயிற்சி பெற்றவர் பிரபு. இவர் போல மணியிடம் பயிற்சி பெற சுரேஷ் துடித்துக்கொண்டிருக்கிறார். (ம—10)

டி. எம். எஸ். பாடிய பாடல்

வேகமாக வளர்ந்து வரும் "மாணவி என் காதலி" படத்துக்காக, "சிங்கத் தமிழா புறப்படு சங்கத் தமிழை வளர்த்திடு எங்கும் தமிழை முழங்கிடு எதையும் அன்பால் வென்றிடு..." என்று டி. எம். சவுந்தரராஜன் பாட, எம். எஸ். விசுவநாதன் இசையில் பாடல் ஒன்று ஏவி. எம். ஒலிப்பதிவு கூடத்தில் பதிவானது. இந்த பாடல் எழுதியவர், கடலூர் புருஷோத்தமன்

வி. கோபாலகிருஷ்ணன் கே. கே. சவுந்தர், புஷ்பலதா, காந்திமதி, ரீஜா, ஸ்ரீலேகா, புது நடிகர்கள் சஞ்சீவிராஜன், ரோகித் மற்றும் பலர் நடிக்கிறார்கள். ஒளிப்பதிவு: வில்வம் நடராஜ். தயாரிப்பு வி. விஜய கோபால். (ம-10)

பலரசத் திரட்டு

ஆடம்பர ஹோட்டலில் ஆடு வளர்த்த "ஷேக்!"

பணம் இருந்தால், என்ன எல்லாமோ செய்யலாம். அந்த அரபு நாட்டு ஷேக் ஆடம்பர ஹோட்டலில் ஆடு வளர்த்திருக்கிறார்.

நீங்கள் ஒரு நாளைக்கு 30 லட்சம் ரூபா சம்பாதிப்பவராக இருந்தால் எப்படி இருப்பீர்கள்?

கற்பனை செய்ய முடியவில்லை என்கிறீர்களா? ஆனால், ஒரு நாள் வருமானம் 30 லட்சம் ரூபா என்றால் நிச்சயம் சிலர் "அரைப் பைத்தியமாக" மாறுவது உண்டு.

முகம்மது அல் பாஸி என்ற 28 வயதுடைய அராபிய ஷேக் அப்படிப்பட்டவர்தான். இவர் லண்டனில் உள்ள பெவர்லி ஹில் என்னுமிடத்தில் வசிக்கிறார். சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர். இவர் வசிக்கும் பெவர்லி மாளிகை லண்டனில் பெயர் பெற்ற ஒன்றாகிவிட்டது, ஏன் தெரியுமா, ஷேக் அதில் செய்துள்ள அலங்கோலங்களினால்தான் இந்த மாளிகையின் விலை பல லட்சம் பெறும்.

வீட்டிற்கு ஒரு அழுத்தமான பச்சை வர்ணத்தை அடித்து உள்ளார். (மேல் நாட்டில் லேசான வர்ணங்களே பெரும்பாலும் உபயோகிக்கப்படும்). மேலும் இந்த மாளிகைத் தோட்டத்தில் உள்ள விலை உயர்ந்த கிரேக்க சிற்பங்களுக்கு எல்லாம் தன்னிஷ்டப்படி வர்ணம் கொடுத்து உள்ளார், அந்த நிர்வாண சிற்பங்கள், முன்பு கலையழகோடு திகழ்ந்தவை, தற்போது ஆபாசக் கோலங்களாகக் காட்சி அளிக்கின்றன. அவற்றின் வாய்க்கு சிவப்பு நிறம் கொடுத்துள்ளார். மேலும் சில இயற்கையான விஷயங்களில் ஆபாசமாக வர்ணம் அடித்துள்ளார்.

வீட்டின் உள்ளே தொலைக்காட்சி அறையில் நாற்காலிகள் எதுவும் போடாமல் ஒரே ஒரு படுக்கையைப் போட்டு உள்ளார், இதன் விலை ரூ. 6 லட்சம்.

மேலும் உலகெங்கும் இருந்து வாங்கிய அழகிய கலைப் பொருட்கள் அலங்காரமாக வைக்கப்படாமல் கண்டபடி மாளிகை எங்கும் வைக்கப்பட்டு உள்ளன, இவருடைய அண்டை அயலார் இவரின் இந்தப் போக்கினால் பாதிக்கப்பட்டு பேசுவது கூட கிடையாதாம்.

இவர் பணத்தைச் செலவழிக்கும் முறைகளும் சற்று விசித்திரமானதுதான். ஒரு முறை ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த போது இரண்டு அறையை வாடகைக்கு எடுத்திருந்தாராம், எதற்காக தெரியுமா? இவருடைய 100 விதமான காலணிகளையும் வைத்துக்கொள்ளத்தான்.

ஒரு முறை ஒரே நாளில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொம்மைகளைத் தன் குழந்தைகளுக்கு அன்பளிப்பாக வாங்கினாராம். இவருக்கு மொத்தம் நான்கு குழந்தைகள்.

மற்றொரு முறை ஒரு ஆட்டு மந்தையினை இவருக்குச் சொந்தமான மிருகக்காட்சிசாலைக்கு வாங்கிக் கொண்டாராம். பின்பு, ஆடுகளைத் தற்காலிகமாகத் தங்க வைக்க திருட்டுத்தனமாக லண்டனில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அடைத்து வைத்தாராம். ஆடுகள் எல்லாம் விடுபட்டு இரவில் ஹோட்டலுக்குள் நுழைந்து விட்டன. தர்மசங்கடமான நிலை. ஷேக்குக்கு அல்ல, ஹோட்டல் நிர்வாகத்தினருக்குத்தான்! இந்த ஆட்டு மந்தை, போனால் கிடைக்காது என்று ஒருவர் கூறியதாலேயே மந்தையை விலைக்கு வாங்கினாராம்.

இந்த ஷேக் சவுதி அரேபிய மன்னரின் உறவுக்காரராம். இவருக்கு உணவு உண்பது பிடித்தமான ஒரு விஷயமாகும். ஒரு முறை மாமிசம் அடைத்த ரொட்டி வகையான "ஹாம்பர்"களில் எட்டு துண்டுகள் ஒரே மூச்சில் விழுங்கினாராம்.

பாவம் இந்த விசித்திர ஷேக்கிடம் மிகவும் கஷ்டப்பட்டு விட்ட ஷேக்கின் மனைவி "டேனு" தற்போது விவாகரத்து செய்ய யோசனை செய்கிறாராம். இவர் பெல்ஜியத்தை சேர்ந்தவர், 15 வயதில் ஷேக்கை மணந்து கொண்டாராம்.

ஷேக்கின் சொத்தின் மதிப்பு சுமார் 600 கோடி ரூபா ஆகும். ஒரு நாளைக்குச் சாதாரணமாக ஒரு லட்சம் ரூபாவரை செலவு செய்கிறார். இவர் மனைவி என்ன கூறுகிறார் தெரியுமா:

"ஷேக்கின் பணம் மகிழ்ச்சியைத் தவிர அனைத்தையும் வாங்குகிறது. எனக்கு வாழ்வு, கெட்ட கனவு போல காட்சி அளிக்கிறது" என்கிறார்.

பணம் இல்லாமல் மகிழ்ச்சி இல்லாதவர்கள் ஒருபுறம் இருக்க, பணம் இருப்பதால் மகிழ்ச்சியில்லை என்பவர்களும் உள்ளனர். இதுதான் வாழ்வின் விசித்திரம் போலும்! (ம-10)

நலகிழ் உபசரிப்பு

சர்க்கஸ் கம்பெனியில் பார்விளையாட்டு ஆடிக் கொண்டிருந்த "கெவின் ரெனலிட்" என்பவர் ஒரு ஹோட்டலில் வேலைக்காக மனுபோட்டார். ஏற்கனவே சர்க்கஸில் இவர் பார் விளையாடிக் கொண்டிருந்ததைக் கேள்விப் பட்ட ஹோட்டல் உரிமையாளர், ஹோட்டலுக்கு வருபவர்களுக்கும் பார் ஆடியபடியே பரிமாறும்படி கூறி வசதி செய்து கொடுத்தாராம். எப்படியோ? வேலைக்கு வேலை புதுமைக்குப் புதுமை! ஆனால் தலையில் உணவு வகைகள் விழுந்தால் கேட்பார் இல்லை. (ம-10)

தந்தை:- இந்த எ. எல். பரீட்சை நன்கு எழுதியிருக்கிறியாடா...

மகன்:- நன்றாத்தாம்பா எழுதியிருக்கேன், இனி பேப்பர் திருத்திறவங்கட கெட்டித் தனம் எப்படி எப்படியோ...

வாத நோய்க்கு அரிசி சிகிச்சை

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனையில் வாத நோய்க்கு "நவரக்கிழி" என்ற புதுவிதமான சிகிச்சையை அளிக்கிறார்கள்.

வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் எண்ணெய் தடவி "நவர அரிசி" என்னும் ஒருவித அரிசியை சிறு மூட்டையாகக் கட்டி சூடு காட்டி நோயாளி தாங்கும் அளவில் "மசாஜ்" பண்ணினால், 14 நாட்களில் வாத நோய் குணமாகி விடுமாம். (ம-10)

இரட்டை வேடதாரியின் 61 ஆண்டுகால அரசாட்சி!

ஒன்றுக்கு மேல் குழந்தை மட்டுமல்ல; மனைவியும் வேண்டாம் என்று இன்று கூறப்படுகிறது. ஆனால், அண்மையில் இறந்த ஆபிரிக்க நாட்டு மன்னர் ஒருவருக்கு 100 மனைவிகள், 600 குழந்தைகள்.

தென் ஆபிரிக்காவிற்கும், மொஸாம்பிக் நாட்டிற்கும் இடையிலுள்ள சின்னஞ் சிறு நாட்டின் பெயர் சுவாசிலாந்து. இந்த நாட்டின் தலைவராக சோபுசா என்பவர் இருந்தார். ஆபிரிக்க நாடுகளின் வரலாற்றிலேயே மிக அதிகமான ஆண்டுகள் மன்னராக வாழ்ந்தவர் இவர்தான். ஏறத்தாழ 61 ஆண்டுகள் சுவாசிலாந்தை ஆண்டவர் சோபுசா.

இவர் ஒரு இரட்டை வேடதாரி. தன் நாட்டில் இருக்கும் போது ஆதி வாசிகள் அணிகின்ற உடையை அணிவார். வெளி நாடுகளுக்கு செல்லும் போது மேல்நாட்டுப் பாணியில் உடை உடுத்துவார். 61 ஆண்டுகள் மன்னராக வாழ்ந்தாலும் இவர் வசித்தது ஒரு குடிசையில் தான். ஆனால், இவருக்கு 100 மனைவிகள், 600 குழந்தைகள், 100 மனைவிகளோடு ஒரே குடிசையில் வாழ்க்கை நடத்தி 600 குழந்தைகளை எப்படி பெற்றெடுத்தார் என்பது புரியாத புதிர்.

நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்த இவர் தமக்கு உண்மையாக உழைத்த அதிகாரிகளை அழைத்து நாட்டை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தார். பின்பு டாக்டரைத் தவிர, மற்றவர் அனைவரையும் வெளியேறுமாறு கூறினர்.

அவர்கள் வெளியேறியதும் டாக்டரை நோக்கி நான் போய் வருகிறேன் என்றார். எங்கே போகப் போகிறீர்கள் என்று கேட்டார் டாக்டர். அவருக்கு பதில் கூறுவது போல் இலேசாக புன் முறுவல் செய்தவாறே இறந்து போனாராம்.

இவர் குல வழக்கப்படி மன்னர்களை புதைப்பதற்கு என உள்ள சுடுகாட்டிற்கு இவர் உடல் பசுத் தோலால் போர்த்தப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. இதற்காக, இவர் இறந்ததும் சில பசுக்கள் கொல்லப்பட்டு தோலுரிக்கப்பட்டன. கைகளில் ஈட்டி, கேடயத்தோடு கல்லறையில் இறக்கப்பட்டார். இவர் கல்லறைக்கு வெளியே ஒரு காட்டு எருது கட்டப்பட்டதாம். உண்ண உணவும், குடிக்க நீரும் இன்றி இந்த காட்டு எருது சாகும்வரை சுவாசிலாந்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதாம்! (ம-10)

மன்னர் சொபுசாவின் இரு தோற்றங்கள்

மோர் குடித்த அழகி ஒரு மந்திரவாதியா?

உள்ளங்கையில் மோரை ஊற்றி வாயினால் உறிஞ்சிக் குடித்தார் ஒரு அழகி. அந்தக் காட்சியைக் கண்ட ஆஸ்திரேலியப் பெண்கள் சிலர் அந்த அழகியை ஒரு மந்திரவாதி என்று [illegible] வர்.

அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வெளி நாட்டுப் பிரதிநிதிகள் சிலர் வந்திருந்தனர். அவர்களில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் சிலருக்கு "வழிகாட்டி" (கைட்)யாக இருந்தார் சியாமளா என்னும் தமிழ்ப் பெண்.

அழகி சியாமளா அந்தப் பிரதிநிதிகளுக்குப் பல்வேறு முக்கிய இடங்களைக் காண்பித்தார். தமிழ்நாட்டு உணவு வகைகளை வழங்கினர்.

வடை, பாயாசத்துடன் அந்தப் பிரதிநிதிகளுக்கு அளித்த "விருந்து" குறித்து சியாமளா இப்படி விவரிக்கிறார்:—

"நாம் கையால் உணவு அருந்துவதைக் காண அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்.

எவ்வாறு இப்படி உங்களால் சாப்பிட முடிகிறது? விரல் இடுக்குகளின் வழியாக உணவு கீழே விழுந்து விடாதா? என்று மாறி மாறிக் கேட்டுத் துளைத்து எங்களுக்கும் கற்றுத் தாருங்கள் என்று என் வீட்டிற்கே வந்து சுமாராகக் கற்றுக் கொண்டார்கள்.

ஆனால் நான் மோரைக் கையில் விட்டுக் கொண்டு உறிஞ்சிக் குடித்ததும் அவர்கள் என்னை ஒரு மந்திரவாதி என்றே நினைத்து விட்டனர்.

நெற்றியில் நாம் இடும் பொட்டு அவர்களுக்கு இன்னுமொரு ஆச்சரியம் அதிசயம்! எப்படி விரலாலேயே சரியான வட்டமாய் இட்டுக் கொள்கிறீர்கள்? குங்குமம் போன்ற பவுடர்கள் கூட குனிந்தால் கூட கீழே விழாமல் எப்படி இருக்கிறது? கீழே குனியாமலேயே நடப்பீர்களா என்று சரமாரியாய் கேள்வி கேட்க, நான் உடனே கீழே விழுந்த கைக்குட்டையை எடுக்கக் குனிய, அவர்கள் எனக்கு முன்னால் கீழே உட்கார்ந்து கொண்டு என் நெற்றியிலிருந்து குங்குமம் கீழே விழுகிறதா என்று ஆராய, ஒரே கலாட்டா!" — இப்படி சியாமளா கூறினர். (ம- 10)

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பொலீஸ்காரர்கள் சினிமா ஸ்டண்ட் வீரர்கள் போல் சாகசச் செயல்கள் புரிவதில் விருப்பமானவர்கள்.

ஒவ்வொரு பொலீஸ் அன்று விழாவின் போதும் இதுமாதிரி சாகசங்களை மக்களுக்காகச் செய்து காண்பிக்கின்றனர்.

ஆனால் எவ்வளவு தான் முன் அனுபவமும் பழக்கமும் இருந்த போதிலும் கடைசியில் தரையில் இருப்பவர் பல்லைக் கடித்துக் கண்ணை இறுக மூடிக் கொண்டு வாராம். என்ன தான் பழக்கமானாலும் பயம் இருக்கத்தானே செய்யும்? (ம-10)

தெய்வ வாசகத்தை விளம்பரத்தில் புகுத்தி மதப் பற்று மிக்க மக்களின் மனதைப் புண்படுத்தலாமா?

"என்னை விரும்புபவர்கள் என்னைப் பின் தொடருகிறார்கள்" என்ற இயேசுவின் வாசகத்தை பெண்கள் அணியும் ஜீன்ஸ்களில் பொறித்து விளம்பரப்படுத்த இத்தாலி நாட்டு வர்த்தகர்கள் முயல்கிறார்கள். இந்த முடிவு நல்ல முடிவு தான். இருப்பினும் கர்த்தரின் வாசகத்தை கேலி செய்வது போல் இது போன்ற விளம்பரங்களை வெளியிடலாமா என்று கேட்கிறார்கள், சுவிசேச சமயிகள். (ம-10)

மதுக் கடையில் குறள் உபதேசம்!

மதுவின் தீமையைப் பற்றி தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஆனால், தமிழ் நாட்டிலோ மதுக் கடைகளிலேயே திருக்குறள் உபதேசம் செய்யப்படுகிறது. அதுவும் நல்ல குறள்.

புதுக்கோட்டை சாராயக் கடை ஒன்றில் "போடுக கள் சாராய பிராந்தி, போட்டபின் ஆடுக அதற்குத் தக" என்று புதுக் குறளை எழுதி வைத்துள்ளனர். சாராய விளம்பரத்திற்காக குறளின் சுருதியைக் குறைக்கலாமா? — இவ்வாறு அவ்வூர் மக்கள் கொதித்தெழுந்திருக்கிறார்கள்.

மதுக் கடைகளால் தமிழ்நாட்டின் அழகே குன்றி விட்டது. இந்நிலையில் மதுக் கடைகளால் ஏற்படும் தொல்லைகளைப் போக்க சில ஆலோசனைகளும் தெரிவிக்கப்படுகின்றன.

சாராயக் கடைகளை பகல் முழுவதும் திறந்து வைத்து [illegible] வீதிகளிலும் பொது இடங்களிலும் மக்கள் அதிகமாக நடமாட [illegible]. எனவே, மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் இரவு 8 மணி முதல் மறுநாள் காலை ஆறு மணி வரை மட்டுமே, சாராயக் கடைகளைத் திறந்து வைத்தால் என்ன?

— இப்படித் தமிழகத்தின் பிரபல தொண்டர் இயக்கம் ஒன்று வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (ம-10)

விண்கலன்களால் ஏற்படும் லாபம்!

கணிசமான செலவுகள் ஏற்படினும், விண்கலன்களைப் பயன்படுத்துவதால் ஒவ்வோராண்டும் தேசியப் பொருளாதாரத்திற்கு மிகுந்த ஆதாயமுண்டாகிறது.

உதாரணமாக, "மீட்டியார்" என்னும் விண்கலம், பருவநிலை பற்றிய பல்வேறு முன்னறிவிப்புகளைத் தருவதால், ஒவ்வோராண்டும் 50 — 70 கோடி ரூபிள் மிச்சம் பிடிக்க முடிகிறது.

விண்வெளியிலிருந்து பூமியைப் புகைப்படம் எடுப்பதால், ஆண்டுதோறும் 5 கோடி ரூபிள் மீதமாகிறது. கப்பல்களின் பயணத்திற்கு உதவும் தகவல் போக்குவரத்து துணைக் கோள்களைப் [illegible]படுத்துவதால், ஆண்டு[illegible] சுமார் 4 கோடி ரூபிள் கூடுதல் லாபம் கிட்டுகிறது.

தேசியப் பொருளாதாரத்திற்காகப் பணியாற்றும் 700 நிறுவனங்கள், விண்வெளி ஆராய்ச்சியின் விளைவுகளைப் பயன்படுத்துகின்றன.

பூமிக்கு அருகே விண்கலன்கள் சுற்றும் போது, எடையற்ற நிலையில் மிகவும் மதிப்பு வாய்ந்த செமி - கண்டக்டர் மற்றும் உலோகப் பொருள்களை உற்பத்தி செய்ய முடிகிறது. "விண்வெளி மருந்தியல்" சாதனைகளையும் பெற முடிகிறது: இவை மிகவும் ஆதாயமுள்ளவை. (ம)

மாமனார்:- மாப்பிள்ளே...! இன்னிக்கு உங்க பிறந்த நாள். ஏது வேணுமானாலும் கூசாமல் கேளுங்க...

மருமகன்:- எங்க அம்மா வீட்டுக்கு நான் ஒரு தரம் போய் வாறதுக்கு உங்க மகளுக்கிட்ட உத்தரவு வாங்கித் தந்தாப் போதும்...

சிநேகிதி:- வாழ்க்கை ஒரே டல்லா இருக்குதடி...

மற்றவள்:- நீ உன் கணவரோட சண்டை போட்டுக்கிறதே இல்லை, அதுதான்டி அப்பிடி... கணவனோட அடிக்கடி சண்டை போட்டுக்கணும், அப்பதான் வாழ்க்கையில் இன்பம் இருக்கும், [illegible] இருக்கலாம்...

மனதைக் கவரும் பேச்சுதான் மங்கையருக்கு அழகு தரும்

பேச்சு இன்றைய உலகின் மூச்சாகச் சமூக வாழ்க்கையை இயக்குகின்றது. மக்கள் கூடும் இடங்கள் தோறும் பேச்சும் சொற்பொழிவும் இல்லாமல் இல்லை.

அறிவிருந்தும் வேண்டிய போது அதனை விளக்கி பேசுந் திறமையற்றோர் இன்றைய உலகில் ஆற்றல் அற்றவராகவே கருதப்படுகின்றனர். பேச்சிலும் மனதைக் கவரும் தன்மையுடைய பேச்சே மற்றையோரின் மனதைப் பெரிதும் கவர்ந்ததாகிறது.

சிறந்த பேச்சு ஓர் உயர்ந்த கலையாகும். கலைகள் யாவும் உள்ளத்தில் உதிக்கும் உணர்ச்சியால் பரிணமிப்பன. நமது பேச்சு கலையாக மிளிர்வதற்கு அப்பேச்சு உணர்ச்சியால் உந்தப்படுதல் வேண்டும்.

குறிப்பாக பெண்கள் வீட்டிலே பேசும் போதும் சரி, வீதிகளில் பேசும் போதிலும் சரி, அவர்களது பேச்சு மிகவும் அமைதியாக இருக்க வேண்டும்.

எந்நேரமும் ஒரே "வள வள" வென பேசிக் கொண்டிருக்கும் பெண்களை "வாயாடி" என்றே பலரும் அழைப்பர். அது மட்டுமல்ல, அதிக பேச்சினால் அசம்பாவிதங்கள் விளைவதும் உண்டு.

எனவே பேச்சில் வல்லவராகத் திகழும் பெண்மணிகள் தமது பேச்சினை பயனுள்ளதாக்க வேண்டும். வீண் பேச்சுக்களைப் பேசி வம்பு இழுப்பதை தவிர்த்து அழகிய பேச்சுக்களை பேசி அனைவருடனும் அன்புடன் பழக முற்படுவதே சிறப்பாகும்.

"பல்லக் கேறுவதும் நாவாலே, பல் உடைவதும் நாவாலே!" என்பார்கள். சிறந்த பேச்சுக்கலையால்தான் ஒருவரின் புகழ் ஓங்குகிறது என்று கூடச் சொல்லலாம்.

இன்சொல் பேசுபவர்களுடன்தான் துள்ளித் திரியும் சின்னஞ் சிறார்கள் அன்பாக இருப்பார்கள். சுடும் சொற்களை உதிர்ப்பவர்களின் அருகில் செல்வதற்கும் அவர்கள் அச்சமுறுவர்.

எனவே நாம் ஒவ்வொருவரும் உதிர்க்கும் ஒவ்வொரு சொல்லும் இன் சொற்களாகவே இருக்க வேண்டும். எமது வாய் வன் சொற்களை உதிர்ப்பதால் வரும் விளைவுகள் வழி தப்பாது என்பதையும் நாம் உணர வேண்டும். (ஐ)

— ரஷீட் நூருல் அயின் —

அன்புமிக்க மனையாள் கணவனின் உயிர் நாடி

ஆதி மனிதன் ஆதாமை இறைவன் படைத்தார். படைப்பிற்கெல்லாம் சிறந்த படைப்பான மனிதனை கடவுள் தன் சாயலில் படைத்தார். மனிதனுக்கு சம்பத்துக்களையும் அளித்தார். ஆனால் அவன் உற்சாகமற்று இருந்தான்.

கடவுள் அவனை அயர்ந்து நித்திரையில் ஆழ்த்தி விட்டு அவன் விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்து பெண்ணைப் படைத்தார்.

தூக்கத்திலிருந்து எழுந்த ஆதாம், அவளை "ஏவாள்" என்று அழைத்து, அவளுடன் மிக மிக மகிழ்ச்சியுடன் இருந்தான்.

கடவுள் மனிதனிடமிருந்தே, அவனுக்கோர் துணையைக் கொடுத்தார்.

இதிலிருந்து இறைவன் நமக்கு உணர்த்துவதென்ன? மனைவி என்பவள் கணவனைச் சார்ந்த ஓர் உறுப்பு. அவளால் தனித்திருக்கவோ, இயங்கவோ இயலாது. எனவே கணவனே முதன்மையானவன்.

மனிதனை ஆதாம் என்று அழைத்த இறைவன், அம்மனிதனைக் கொண்டே, அவளை ஏவாள் என்று அழைக்கச் செய்தார். மனிதனுக்குரிய முதல் உரிமையை. அதிகாரத்தை இறைவன் அவனுக்கு அளித்தார்.

இதனால் கணவன், மனைவியை அடிமைபோல் நடத்த வேண்டும் என்று அர்த்தம் அல்ல. அவ்வாறு அவளை அவன் அடிமையாக்க வேண்டும் என்று இறைவன் எண்ணி இருந்தால், மனிதனின் கால் எலும்பிலிருந்து அவளை உருவாக்கி இருக்கலாம்.

ஆனால் விலா எலும்பில் இருந்து அல்லவா அவளை உருவாக்கினார். இதிலிருந்து இறைவன் நமக்கு உணர்த்துவது: "மனிதனே, உன்னிடமிருந்து உனக்காக எடுக்கப்பட்ட உன் உறுப்பாகிய உன்னுடைய மனையாள் உனக்கு ஒரு பக்க பலமாக, உன் வாழ்வுடன் இணைந்த ஒரு உறுப்பாக இருக்கக் கடவாள்"

சிவபெருமான் தன் இடப் பாதியை உமையவளுக்கு அளித்தது, "உடம்பில் இடப்பக்கமே இதயம் இருக்கிறது. எனவே அவள் அவனின் உயிர் நாடி" என்பதை நமக்கு சொல்லும் புராணங்களிலிருந்து நாம் அறிகிறோம்.

— தேவப்பிரியா —

எனவே மனைவி [illegible] வின் அன்பு தனக்கு [illegible] சொந்தம்" என்று, [illegible] தில் ஆச்சரியமில்லை. அவ் [illegible] வின் அன்பையும், ஆதரவையும் பெற எதையும், எந்தத் தியாகத்தையும் செய்ய அவள் முற்படுவாள்.

கணவனின் அன்பைப் பெற மனைவி முயற்சிப்பதிலும் [illegible] காக அவள் தன்னை அழகுபடுத்திக் கொள்வதும் [illegible] காலத்திலிருந்தே வந்துள்ளது.

அழகுக் கலையில் [illegible] ஒப்பனைக் கலையாகக் கருதப்படுகிறது. முதல் 6 கலைகளும், அலங்கார (ஒப்பனை) அழகு, அலங்காரங்கள் இவற்றைக் குறிப்பதாகும்.

ஒப்பனைக் கலை

ஆய கலையில் முதற் கலை, ஒப்பனைக் கலை. முகத்தில் ஒளியையும் மேனி அழகையும் அதிகரிக்கும் முறைக்கும் பெயரே ஒப்பனைக் கலை.

வெயிலில் அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் முகம் கருத்துப் பாதிக்கப்பட்டிருந்தால் வெண்ணைய் [illegible] பிளீச் செய்ய தேவைப்படுகிறது. இதனால் இறந்த தோலை நீக்கும் அப்பகுதிகளில் வெளுப்பாகும்.

வேக்ஸிங் என்பது முகம் மற்றும் கை, கால்களிலிருக்கும் தேவையற்ற முடிகளை அகற்றுவது.

நல்லதொரு க்ரீமை கொண்டு முகத்திற்கு [illegible] நேர்த்தியான முறையில் அதிர்ச்சியின்றி தேய்த்து மசாஜ் செய்வது.

முகத்திற்கு நீராவி பிடித்து அதனால் மயிர்க்கால் துவாரங்களை விரிவடையச் செய்து, அவற்றிலிருந்து அழுக்குகளை நீக்குவது.

புருவங்களை சீராக்குதல், சிறிய நெற்றி உள்ளவர்களுக்கு நெற்றியை பெரியதாகத் தோன்றும்படி அமைத்தல், [illegible] எல்லாம் செய்வதற்கு நீண்ட கால அனுபவமும், திறமையும் தேவை.

ஒப்பனை எனப்படுவது, அழகு சாதனங்களைக் கொண்டு முகம், உடல் அழகை அதிகரிப்பதாகும். (ஐ)

கூந்தல் அலங்காரம்



பெண்மணிகள் பொன் மாலைப் பொழுதினை இன்முகத்துடன் கழிக்கச் செல்லும் போது மிகவும் சுலபமாக, விரைவாக அமைக்கக் கூடிய கண்கவர் கொண்டை அலங்காரம் ஒன்றை சோதரிகளுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

1. முதலில் கூந்தலை நன்றாக சிக்கலின்றி சீவுங்கள். பின்பு உங்கள் முகத்துக்கு ஏற்றவாறு முன்னால் வாரிவிட்டு அதன் பிறகு குதிரை வால் கொண்டையிட்டுக் கொள்ளுங்கள்.

2. பின்னர் ஐந்து பகுதிகளாகக் கூந்தலைப் பிரித்து முதல் பகுதியை பின்பக்கமாக ரோல் செய்து பின் பண்ணுங்கள்.

3. ஏனைய 4 பகுதிகளையும் ரோல் செய்து காதுகளின் பக்கத்திலும் கழுத்துக்கருகிலும் வைத்துப் பின் பண்ணுங்கள்.

4. அந்த ரோல்கள் வெவ்வேறாக தெரிவதற்கு "ஹெயார் நெட்" ஒன்றைப் போடுங்கள். நொடியில் கொண்டை அலங்காரம் தயாராகிவிடும்.

(ஐ-11)

கண்கள் காட்டும் குணங்கள்

பெண்களுக்கு அழகு தருவதில் கண்களின் அமைப்புக்கு பெரும் பங்குண்டு.

மான்விழி, மீன்விழி, வேல்விழி போன்ற அமைப்புக் கண்கள், செந்நிறக் கண்கள், உருண்டை விழி, மேல் நோக்கு கீழ் நோக்குப் பார்வை பெற்ற கண்கள், மாறுபட்ட உருவ அமைப்புக் கண்கள் எனப் பல அமைப்புக்கள் உண்டு.

சாமுத்திரிகா லட்சணப்படி ஒவ்வொரு அமைப்புக்கேற்ப பெண்களின் குணங்கள், தன்மைகள், எண்ணங்கள், நன்மை, தீமைகள், நல் அதிர்ஷ்டங்கள், வாழ்க்கை முறைகள் ஏற்படுகின்றனவாம்.

மான்விழி

மானைப் போன்ற, மருண்ட பார்வைக் கண்களைப் பெற்ற பெண்கள், கவர்ச்சியாகவும், கள்ளம் கபடமின்றி பேசும் தன்மையும், கணவருக்குப் பணிவிடை புரிந்து அன்பும், அரவணைப்பும் தந்து, பெரியோர்களை மதித்து நடக்கும் நற்பண்பும், நல்லறிவும் பெற்ற நல்லவர்களாக நல் அதிர்ஷ்டம் நிறைந்தவர்களாக இருப்பார்கள்.

மீனைப் போன்ற கண்களைப் பெற்றவர்கள் குறுகுறுப்பான குளிர்ந்த பார்வை பெற்று எதிலும் அச்சத்துடன் ஒதுங்கி இருந்து கணவருக்கு நல்ல துணைவியாக பணி புரிந்து [illegible] சிக்கித் தொல்லாமல் மகிழ்வு பெற்று நிறைய படிக்க வேண்டும் என்ற உணர்வும் பெற்று நல்ல உள்ளம் உடையவர்களாக இருப்பார்கள்.

வேல் விழி

வேலைப் போன்ற அமைப்புக் கண்களைப் பெற்ற பெண்கள், மற்றவர்களைக் கவரும் தன்மையும் எதற்கும் அஞ்சாத நெஞ்சமும் நேருக்கு நேர் பார்க்கும் தைரியமும், நன்மை, தீமைகளைச் சந்தித்து சமாளித்துக் குடும்பம் நடத்தும் திறமையும், கணவருக்குப் பாதுகாப்பாகவும் இருந்து, நேர்மையான உள்ளம் நிறைந்த வாழ்க்கை அமைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

செங் கண்

செந்நிறக் கண்கள் அமைப்பைப் பெற்ற பெண்கள் பார்வையில் மறைமுகமும் கலகலப்பில்லாத தனித் தன்மையும் அளவு இல்லாத சிந்தனையால் அரக்கத்தனமாகவும் எதையும் செய்யும் திறமையும் மற்றவர்களைப் பணிய வைக்கும் பண்பும், தன்னம்பிக்கையும் பிறருக்கென வாழாதவர்களாகவும் அகம்பாவமும், கோபமும் நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

உருண்டைக் கண்

உருண்டை விழி அமைப்புக் கண்களைப்பெற்ற பெண்கள் கள்ளம் கபடு இல்லாது கலகலப்பாகப் பேசிப் பழகும் தன்மையும் எளிதில் மனமார்ந்ததை அடைபவர்களாகவும் பிறரிடம் பச்சாதாபப்படும் உணர்வும் பெற்று வெகுளித் தன்மை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

இதனால் சில சமயங்களில் தீமைகளில் சிக்கித் தவிப்பார்கள்.

பொதுவாக இவர்கள் நல்ல வாழ்க்கை அமைந்து மகிழ்ச்சியடைவார்கள்.

மாறுபட்ட கண்கள்

கண்கள் ஒன்றுக்கொன்று, மாறுபட்ட உருவ அமைப்பைப் பெற்ற பெண்கள், அதி கவர்ச்சியாகவும் பிறருக்கு உள்ளக் கிளர்ச்சியைத் தருபவர்களாகவும் கலையில் நிறைந்து கண்டவர் மகிழும் உணர்வைத் தருபவர்களாகவும் தன்னலம் பேணி எதையும் அநுபவிக்கும் தன்மையும் விருப்பமும் உடையவர்களாகவும், எவரிடமும் இனிமையாகப் பேசுபவர்களாகவும் வாழ்க்கையில் உயர்ந்தும் தாழ்ந்தும் நிலை இல்லாத தன்மையும் புகழ்ச்சியில் விருப்பமும் பெற்று புகழுடன் வாழக் கூடியவர்கள்.

சிறிய கண்கள்

கண்கள் அமைப்பில் சிறு கண்கள் மேல் நோக்கு கீழ் நோக்குப் பார்வைக் கண்கள் அமைப்பைப் பெற்ற பெண்கள் வாழ்க்கையில் நன்மை தீமை, இன்பம், துன்பம், இவர் யோகம், தன்னைத்தானே வெறுத்தல், எதிர்பாராத நல்ல கெட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டு வாழ்க்கையில் பல மாற்றங்களைச் சந்திக்கும் தன்மை பெற்று வாழக் கூடியவர்களாக இருப்பார்கள். (ஐ)

மாதர் மஞ்சரி

தயாரிப்பு: சுந்தரி

அரிவையருக்கு சில ஆலோசனைகள்

★ வெயில் அதிகமாக இருக்கும் போது, வெளியில் போனால் ஒரு துண்டு வெங்காயத்தை பையில் போட்டுக் கொள்ளுங்கள். மயக்கமோ, தலை சுற்றலோ வந்தால் வெங்காயத்தை நசுக்கி நன்றாக முகருங்கள். அதனுடைய கார நெடி உங்களுடைய தலை சுற்றலை சரிப்படுத்திவிடும்.

★ வெள்ளிப்பாத்திரங்களை நாட்பட்ட பெட்டியிலோ, பீரோவிலோ வைத்திருந்தால் அவை கறுப்பாகிவிடும். ஆனால் பாத்திரங்களுடன் கற்பூரத்தை வைத்தால் பாத்திரம் நிறம் மாறாது.

★ காதில் அணியும் தோடுகள், மூக்குத்தி கொலுசு ஆகியவைகளின் திருகாணி லூசாக இருந்து அடிக்கடி கழன்று வந்தால் பூண்டு சாற்றில் தொட்டுத் திருகினால் இறுக்கமாக பிடித்துக் கொள்ளும்.

★ தயிரை இரண்டு, மூன்று நாட்களுக்கு கெடாமல் வைத்திருக்க தயிருள் தேங்காயை பல்லு பல்லாக சீவிப் போடுங்கள். தயிர் புளிக்கவும் செய்யாது. நாற்றமும் அடிக்காது.

★ கோதுமை மாவில் கொஞ்சம் வேர்க் கடலை மாவைக் கலந்து பூரியோ, சப்பாத்தியோ செய்து சாப்பிட்டால் உடலுக்கு மிகவும் நல்லது. உடல் வலிமை அதிகமாகும். உழைப்பாளருக்கு களைப்பு ஏற்படாது.

★ சத்துக்குறைவு காரணமாக உடல் மெலிந்திருக்கிறீர்களா? இரவு படுக்கப் போகுமுன் பொட்டுக் கடலையும் சிறிது சர்க்கரையும் கலந்து தினசரி சாப்பிடுங்கள். உடல் பலம் ஏற்படும்.

★ முருங்கைக்கீரை இளம் தளிராக (இளம் பூவும் இருக்கலாம்) பாசிப்பருப்புடன் சேர்த்து நெய்யில் தாளித்து கறி செய்து உட்கொண்டால் தாய்ப்பால் சுரக்கும்.

★ ஒரு ஜாடியில் அரிசியை விட்டு அதில் ஒரு வெல்லக் கட்டியைப் போட்டு மூடி வைத்து விட்டால் மூன்று மாதங்கள் ஆனாலும் கெடாது.

★ சில குழந்தைகள் சில சமயம் பாலைக் கக்கிவிடும். இப்படி அடிக்கடி நேர்ந்தால் மூன்றே மூன்று சொட்டு இஞ்சிசாற்றுடன் தேனைக் கலந்து கொடுங்கள். கக்குவது நின்றுவிடும்.

— ஸௌஸ்பிகா தாஜுத்தீன்

வாழைநாரில் விளக்குத்திரி

வாழைத் தண்டை நறுக்கும் போது அதிலிருந்து வரும் நாரை தூர எறிந்து விடாதீர்கள். அதை அப்படியே எடுத்து வெய்யிலில் காய வைத்த பின் அதிலுள்ள சிக்கை எடுத்து, திரித்து பின்பு குத்து விளக்கில் போட்டு ஏற்றினால் அதிக எண்ணெய் குடிக்காது. அதே சமயம் நின்று பிரகாசமாய் எரியும். (ஐ)

பாதங்களைப் பேணுங்கள்

— ஜமுனாராணி சிதம்பரப்பிள்ளை —

பாதாதி கேசம் ஒரு பெண் அழகாக இருந்தாலும் அவளுடைய பாதங்கள் அழகாக இல்லாவிடில் பாதி அழகு குறைந்துவிடும்.

ஆம் அழகு என்று கூறும் போது அவயங்கள் அனைத்தும் பேணப்பட்டாலே, பூரண அழகைப் பெறமுடியும். அதிகமான கவனிப்பு இல்லாவிடினும் நிச்சயம் பாதுகாப்பு - பேணல் அவசியம் தேவை.

மங்கையர் அநேகர் பாதங்களைப் பொருட்படுத்துவதில்லை. பாதங்களை அலட்சியப்படுத்துதல் நன்மையல்ல.

நவ நாகரீக மங்கையர் சரம் அணிவது பாதங்களிற்கு அழகைக் கொடுக்கின்றது. எனினும் நாள்தோறும் பாதங்களைப் பேணுவது தனிக் கவர்ச்சியைத் தரும். நாளாவட்டத்தில் பளபளப்பான கவர்ச்சியுடன் அழகாக அமைந்து விடுவதும் உண்டு. முயற்சி திருவினையாக்கும்- சிரமம் பாராது பயிற்சிகள் செய்யின் அழகு தேடி வரும்.

வீட்டிலிருந்து வெளியில் எங்கு செல்வதானாலும் செருப்பு அணியாமல் செல்லாதீர்கள். அப்படி அணிந்து சென்றும் வந்த பின்னர் கால்களை நன்கு கழுவுதல் வேண்டும்.

சிலருக்கு சில வகை பாதணிகள் ஒத்து வருவதில்லை. அப்படியானவற்றால் காயங்கள், புண்கள் வருவதற்கு இடமுண்டு. ஆகையால் தத்தமக்கு ஒத்துவரும் பாதணிகளையே நடைமுறையில் பாவித்தல் வேண்டும்.

தினமும் தேங்காய் எண்ணெய் தேய்த்து வந்தாலும் பளபளப்பு ஏற்படும். அத்தோடு வெடிப்பு ஏற்படுவதற்கும் இது சிறந்ததாகும் அல்லது தினம் காலையில் சுமார் 15 நிமிடங்கள் இளஞ் சூடான வெந்நீரில் காலைத் தோய்த்து நனைய வைக்க வேண்டும். பின்னர் கீழ் கண்ட கலவையை வெடிப்புப் பகுதியில் போடுங்கள்.

ஒரு தேக்கரண்டி கிளிசரின், ஒரு தேக்கரண்டி பன்னீர், இரண்டு தேக்கரண்டி அளவு எலுமிச்சம்சாறு மூன்றையும் கலந்து தேய்க்க வேண்டும்.

கால் சருமம் வரண்டு செதில் செதிலாக இருந்தால் விட்டமின் ஏ மாத்திரைகளை சாப்பிடுதல் நன்று. [illegible] உணவு வகைகளை உண்ண வேண்டும்.

நமக்குக் கால் என்றாலே அலட்சியம். அந்த அலட்சியத்தைக் களைந்து பாவையராகிய நாம் பாதங்களைப் பேணல் வேண்டும். (ஐ)

Thultex

துல்ரெக்ஸ் வழங்கும் விசேஷ சலுகை
மொத்த விற்பனைவிலையில் துல்ரெக்ஸ் துணிகள்.

உங்கள் அபிமான துல்ரெக்ஸ் துணிகள் குறிப்பிட்ட காலத்திற்கு மொத்த விற்பனை விலையிலேயே கிடைக்கிறது.

துணிகளின் வகைகளோ! வெள்ளை, வர்ணம், கவர்ச்சியான சாயமிட்டு அச்சிட்ட பப்லின்கள், சன்போரைஸ்ட் சேட்டிங்குகள், கேம்பிறிக், பொலிநோசிக்/ அச்சிட்ட பருத்தி உடைத்துணிகள், பொலியெஸ்டர் சேட்டிங்குகள், சூட்டிங்குகள், ட்ரில் துணிகள், தளபாட விரிப்புக்கள், படுக்கை விரிப்புக்கள், ஏற்றுமதி மிகுதிகள் எனப் பல்வேறு வகைப்படும்.

கிடைக்குமிடங்கள்
துல்ரெக்ஸ் காட்சியறைகள்
294 காலிவீதி, கொழும்பு 4. அண்டர்சன் தொடர்மாடிகள்,
நாரஹென்பிட்டி, துல்கிரிய ஆலே, துல்கிரிய, வறக்காப்பொல

அமோக வேண்டு கோளுக் கிணங்க ஒக்டோபர் 31 ந்திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது

HTL TT 1524

சிந்தாமணி
චින්තාමණි
தின வெளியீடு "தினபதி"
ஞாயிறு வெளியீடு சிந்தாமணி
CHINTAMANI

ராஜ்யம் இல்....

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி பொலீஸ் கையில் சிக்க விரும்புவார்?

[illegible] இளவரசர் கதை இவ்வாறிருக்க, ஜோத்பூர் இளவரசனின் கதை இதற்கு ஒருபடி மேலானது. திடீரென்று ஒரு நாள் தன் கையில் வாளுடன் புறப்பட்டான் ஜோத்பூர் இளவரசன்.

நன்றாகக் குடித்திருந்த அவன் ஜோத்பூரில் உள்ள சில சொத்துகள் தனக்கே சொந்தம் என்றும், அதை மீட்கப் போவதாகவும் கூறி, போருக்குப் புறப்படுவது போல் புறப்பட்டுச் சென்றான்.

அவனை எவரும் தடுக்கவில்லை. ஆனால் மறுநாள் காலையில் அவன் எடுத்துச் சென்ற வாளால் வெட்டப்பட்டு இறந்து கிடந்தான் அவன். அது கொலையா, தற்கொலையா என்பது தெரியவில்லை.

நான் என்றைக்கும் மகாராணிதான். இன்று கூட குவாலியர் தெருக்களில் என்னால் தனியாக நடந்து செல்ல முடியாது. காரணம், என்னை வேடிக்கை பார்க்கவும், எனக்கு மரியாதை செய்யவும் மக்கள் கூட்டம் சேர்ந்து விடுகிறது என்கிறார் குவாலியர் இளவரசி வசுந்தரா ராஜே.

மொத்தத்தில் அன்றைய மகாராஜாக்களுள் பிழைக்கத் தெரிந்தவர்கள் இன்றும் ராஜாக்கள் போலவே வாழ்கிறார்கள். கைவசம் இருந்த பணத்தை பல வியாபாரங்களில் முதலீடு செய்ததையே இதற்குக் காரணம்.

பரோடா, குவாலியர் ராஜாக்கள் இன்று துணி தயாரிப்பில் முன்னணியில் திகழ்கிறார்கள்.

ஆனால் கையில் உள்ள வெள்ளையாம் பணத்தை இழந்தவர்கள் இன்று "ரேஸ்" என்ற வருவாய்க்காக அலைந்து கொண்டு இருக்கிறார்கள்.

(ம- 10)

மன்மத லீலையில் மூழ்கி மீண்டு வந்த இளவரசர்!

[illegible] சுற்றி ஏறத்தாழ 50 பத்திரிகை நிருபர்கள் பதுங்கியிருக்கிறார்கள். உள்ளே எப்படியாவது நுழைந்து விட வேண்டும் என்பது அவர்கள் திட்டம். அப்படி உள்ளே என்ன நடக்கிறது?

அவர்களுக்கு ரகசியமாய் ஒரு செய்தி கிடைத்திருந்தது. உள்ளே மாளிகையினுள் இங்கிலாந்து இளவரசர் ஆண்ட்ரு நடிகை கூ ஸ்டார்க்கை இழுத்து வந்து குதூகலக் களியாட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறாராம்!

அந்த நிருபர்களில் எலிஸபெத் சாலமன் என்ற அமெரிக்கப் பெண் நிருபர் இல்லாடி, [illegible] உள்ளே நுழைந்து நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கே சென்று விட்டார்!

உள்ளே ஒரு நீச்சல் குளம். அதைச் சுற்றி பலர் உட்கார்ந்திருக்கிறார்கள். இளவரசரும் இருக்கிறார். சடாரென்று பாய்ந்து கூ ஸ்டார்க்கைப் பிடித்து இழுத்து அவளது நீச்சல் உடையை நவீன துச்சாதனன் ஸ்டைலில் கிழித்து எறிந்து விடுகிறார்! பின்பு இன்னொரு பெண்ணிடம் சென்று அவள் நீச்சல் உடையையும் பறிமுதல் செய்து தூக்கி எறிகிறார்!

அந்தப் பெண்கள் சும்மா இருப்பார்களா? நாலைந்து பேராய்ச் சேர்ந்து இளவரசரின் அரை நிஜாரை அவிழ்த்துத் தூக்கி எறிகிறார்கள்! விரைவில் அங்கிருந்த எல்லோருமே பிறந்த கோலத்தில் ஜாலியாய்க் கைகோர்த்துக் கொண்டு சுற்றுகிறார்கள்!

இளவரசருக்குத் தான் இப்படி போர்த்டே சூட்டில் இருப்பது பற்றி அலாதி மகிழ்ச்சி; தன் உடற்கட்டில், அமைப்பில் கர்வம். துளிக்கூட வெட்கம் இல்லாமல் நீச்சல் குளத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறார். திடீரென்று "பிகினி" ஆடையோடு இருக்கும் பெண்ணைத் துரத்துகிறார்.

இந்தத் துரத்தும் வேளையில் இளவரசர் இளவரசர் இல்லை... மன்னர்! அவளைத் துரத்திப் பிடித்து உயிருள்ள லாப்ஸ்டரை (ஒரு வகை மீன்) அந்தப் பெண்ணின் நீச்சல் உடையின் மேல், மார்பகத்தை மறைத்துக் கொண்டிருக்கும் பகுதியில் செருகுகிறார்!

அவள் வெட்கத்துடன் அலற சுற்றியிருந்த பெண்கள் களீர் என்று நகைக்க, இளவரசருக்கு தேவாம்ருதம்... ஜீவாம்ருதம்.

இப்படி ஜலக்கிரீடைகள் முடிந்த பிறகு ஒரு வழியாய் இளவரசர் வெளியே கிளம்புகிறார் நீ எப்படி? தலையை நன்றும் மறைக்கும் ஒரு தொப்பி, சர்க்கஸ் கோமாளிகள் உபயோகிக்கும் பெரிய செயற்கை மூக்கு— இவற்றை அணிந்து கொண்டு! எதற்கு?

தன்னைப் படமெடுக்கும் போட்டோ கிராபர்களை ஏமாற்ற! ஆனால் நடக்குமா? கூட இருந்து அத்தனையையும் பார்த்த எலிஸபெத் சாலமன இருக்கிறாரே... அவரால் தான் இத்தனையும் வெளிவந்தது!

22 வயதாகும் ஆண்ட்ரு இங்கிலாந்து கடற்படையில் ஒரு ஹெலிகொப்டர் பைலட். போக்லாந்து போரில் ஈடுபட்டவர்.

அதனால் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தே ஆக வேண்டிய சூழ்நிலையிலிருந்து இங்கிலாந்து திரும்பியவருக்கு உல்லாசமும் கேளிக்கையும் தேவைப்பட்டிருக்கின்றன. அவ்வளவு தான்; கூ ஸ்டார்க்கை இழுத்துக் கொண்டு பிரின்ஸ் அண்ட் மிஸ்டர் ரேம்பிரிட்ஜ் என்ற பெயரில் இளவரசி மார்க்கரெட்டின் உல்லாச ஓய்வு மாளிகை இருக்கும் மஸ்டிக்கிற்குப் புறப்பட்டு விட்டார்!

இது ரகசியம் என்று ஆண்ட்ரு நினைத்துக் கொண்டிருக்க பத்திரிகை நிருபர்களுக்கு எப்படியோ விஷயம் தெரிந்து அந்த மாளிகையைச் சூழ்ந்து கொண்டு விட்டார்கள்!

இளவரசரின் இந்தத் திருவிளையாடல் அம்பலமாகி கூ ஸ்டார்க்கின் நிர்வாணப் படம் ஒன்று அவுஸ்திரேலியப் பத்திரிகை ஒன்றில் வெளி வந்து விட்டது! அங்கு காமன்வெல்த் விளையாட்டுகளுக்காகச் சென்றிருந்த அரசி எலிஸபெத்தின் பார்வையில் அது பட, அரசியாருக்குக் கடுங்கோபம்.

ஆண்ட்ருவை உடனே அரண்மனைக்குத் திரும்பும்படி உத்தரவிட்டிருக்கிறார். ஆனால் பின்பு அப்படி எதும் அரசி ஆணையிடவில்லை என்று அரண்மனை வட்டாரம் அதை மறுத்தது! ஆமாம்... இங்கிலாந்து இளவரசரையே வளைத்துப் பிடித்த இந்த கூ ஸ்டார்க் யார்?

ஹாலிவூட்டில் சினிமா தயாரிப்பாளர் வில்பர் என்பவரின் மகள் கூ ஸ்டார்க். 25 வயதாகும். இவர் பல படங்களில் நடித்திருப்பவர். எல்லாமே "ஒரு மாதிரியான" படங்கள் தான்.

எமிலி என்ற படத்தில் செக்ஸுக்காக ஏங்கும் ஒரு பெண்ணாய் அபாரமாய் நடித்திருக்கிறார்! அதில் ஒரு காட்சி — ஷவரின் அடியில் நனைந்தபடி இன்னொரு பெண்ணின் அந்தரங்க இடங்களை ஆர்வத்துடன் வருடுவது, இன்னொரு காட்சி - காதலன் ஒருவனை நிர்வாணமாய்த் தழுவுவது!

படங்களில் மட்டுமல்லாமல் நிஜ வாழ்விலும் கூ ஸ்டார்க் ஒரு மாதிரிதானாம்! ராபர்ட் வின்சர் என்னும் விளம்பரக் கம்பெனி அதிபர் ஒருவருடன் நாலாண்டுக் காலம் வெறியோடு கூடிய காதல் லீலைகள் நடத்தியிருக்கிறார்!

அந்த கோமஸ்வரனின் மனைவி பாவம், கணவருக்கு இவள் மேல் இருந்த மோகத்தைப் பார்த்து விட்டு அவருடனே இவளைச் சேர்த்து வைத்து விட்டு ஒதுங்கிக் கொண்டு விட்டாராம்!

கூ அவரை அநேகமாய் மணந்து கொண்டு விட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் திருமணமாவதற்கு முதல் நாள் அவரிடமிருந்து பெற்ற 22,000 டாலர்களுடன் எங்கோ நைஸாய் நழுவி விட்டார்! அதோடு வாராவாரம் எங்கிருந்து கொண்டோ அவரைப் பணம் கேட்டுத் தொந்தரவு செய்வாராம்!

அதன் பிறகு கிரேக்கக் கப்பல் கம்பெனி கோமஸ்வரரின் மகன் அலக்ஸாண்டர் ஆண்ட்ரெடிஸ் (இவர் கிறிஸ்டினா ஒனாசிஸின் முன்னாள் கணவர்) என்பவருடன் ஒராண்டுக் காலம் உறவு! பின்னர் இளவரசர் ஆண்ட்ருவுடன் காதல்! அந்தக் காதலும் தற்போது முறிந்து விட்டது. (ம—10)

இளவரசர் ஆண்ட்ரு (இடமிருந்து இரண்டாவது) போக்லாந்து போர் முனையிலிருந்து திரும்பிய பின் தமது நண்பர்களுடன் காணப்படுகிறார். (ம)

கட்டான உடல் அமைப்பு கொண்ட நடிகை கூ ஸ்டார்க் இளவரசர் ஆண்ட்ருவைவிட மூன்று வயது மூத்தவர். அதனால் தான் காதல் பாடம் கற்றுத் தருவதில் இவர் கைதேர்ந்தவராக முடிந்தது. (ம)

சாந்தமான....

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்புடை ஒழுக்கம், தூயகாதல் வாழ்வு உடையோராய் விளங்கினர்.

அக்காலப் பெண்களுக்கு வேதம் ஓதுவதற்கும் ஞான நூல்களைக் கற்பதற்கு எதுவித தடையுமிருந்ததில்லை. உபநயனம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாய் இருந்தது.

கார்க்கி, மைத்திரேஜி, போன்ற மாதர்கள் உபநிடதத்தில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றனர். மைத்திரேஜி யாக்ஞவல்கியரின் இரு மனைவியரில் ஒருத்தி. அமர நிலையடைவதற்கு பிரம்மஞான அறிவே முக்கியமென்பதை உணர்ந்து அதனைத் தனது கணவரிடமே உபதேசம் பெற்றவர்.

கார்க்கி என்ற பெண்மணியே யாக்ஞவல்கியருக்கு விவாத உணர்வையூட்டினர். பல வினாக்களை வினவி, அம்முனிவர் தரும் விடைகளின் மூலம் பெருமை பெற வைத்தவர் அவரே. வேத காலத்திலேயும் இத்தகைய நங்கையர் வாழ்ந்தனர் என்பது உவகைக்குரியதே.

இடைக்காலம்

வழி வழியாகப் பெருமை பெற்று வந்த இப் பெண்மைக்கு இடைக்காலம் சிறிது மாசு கற்பிக்கத் தொடங்கியது. தமிழ் நாட்டிற் புகுந்த சமண பௌத்த நாகரிகங்கள் பெண்மையின் சிறப்பைச் சிறிது குறைத்தன. இதனல் பாரத நாடு பல அல்லல்களுக்குட்பட்டது.

பெண்மையைப் போற்றுத நாட்டில் இன்ப வாழ்வுக்கு இடமேது. அப்படிப் போற்றுத நாகரிகம் தமிழனுடையது அன்று. இதனை உணர்ந்தே சைவ நாயன்மார்களாகிய திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் தமது திருமுறைகளில் பெண்மையைப் போற்றினர்.

"அப்பனீ அம்மை நீ
ஐயனும் நீ
அன்புடைய மாமனும்
மாமியும் நீ
ஒப்புடைய மாதரும்
ஒண்பொருளும் நீ"

எனப் பாடி பெண்மைக்கு ஆண்மையுடன் சமரசமூட்டுகிறார் அப்பர் "ஒப்புடைய மாதர்" என்பது இங்கே சிந்திக்கற்குரியது.

"பங்கயச் செல்வி
பாண்டிமா தேவி
பணி செய்து
நாடோறும் பரவ"

என்று தமது தேவாரத்தில் அமைத்துப் பாடியுள்ளார் சம்பந்தர்.

இதைத் தொடர்ந்து காவியங்களிலும் இதிகாசங்களிலும் பெண்மை போற்றப்பட்டதெனினும் பிற்காலத் தமிழகம் அதனை உணரத் தயங்கியது.

நூல்களிலே பெண்ணின் பெருமையைப் படித்தார்கள் எனினும் அவ்வறிவு இரத்தத்தோடு கலந்து வாழ்க்கைக்குப் பயனளிக்கவில்லை. இக்குறைபாட்டைச் சுப்பிரமணிய பாரதியார் உணர்ந்தார். ஆவேசப்பட்டார். அவருள்ளங் குமுறியது

"பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா வீரஞ் சேர்ப்பது தாய் முலைப் பாலடா" என்று கர்ச்சனை செய்தார். தமிழகத்தைப் பாட்டால் தட்டி எழுப்பினர்.

அவருடைய பாட்டும் காந்தி அடிகளுடைய பேச்சும், எழுத்தும் ஒன்று சேர்ந்தே இந்த நூற்றாண்டில் புதுமைப் பெண்களை உருவாக்கின என்றால் அது மிகையாகாது. (ம)

நெறிதவறாத பத்திரிகை....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல்லமையாகவும், உரிய ஆய்வுடனும், தலையங்கப் பகுதியில் வெளிப்படுத்துபவர் ஆசிரியர்.

ஜனநாயகம் என்ற மாளிகையை நான்கு பெரும் சுற்றூண்கள் தாங்கி நிற்கின்றன. சுதந்திரமான நாடாளுமன்றம், சுதந்திரமான நீதித்துறை, சுதந்திரத்தை நேசிக்கும் மக்கள், சுதந்திரமான பத்திரிகைகள்.

நேர்மையான, உண்மைக்கே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட பேனு வீரர்களின் தன்னலமற்ற பணிதான் பத்திரிகைத்துறைக்கு அளவற்ற சக்தியைத் தந்திருக்கிறது.

கொடிய "நாபாம்" குண்டு [illegible], தன்னலமற்ற [illegible], யுத்த களங்களிலும் புகுந்து செய்திகளைச் சேகரிக்கும் நிருபர்கள் அளித்த பலம் அது.

அஞ்சாநெஞ்சத்துடன் அரசின் இரும்புக் குகைக்குள் நுழைந்து உண்மையை வெளிக்கொணர்ந்து, மக்கள் முன்வைக்கும் பத்திரிகையாளர்கள் அளித்த பலம் அது.

அந்த [illegible] நிரம்பிய உலகு.

அமெரிக்காவில் அந்தத் திரர்கள், எடுத்துக் கொள்ளும் பிரதிக்ஞை வாசகமும், அப்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறையும், அவர்களுடைய பணியின் சிறப்பை நன்கு விளக்குகின்றன.

பத்திரிகையாளர் சங்கம்

"டெல்டா ஸிக்மாச்ஸி" என்பது ஒரு உயர்மட்ட பத்திரிகையாளர் சங்கம். அதில் அங்கத்தினராவதோ ஒரு பத்திரிகையாளரின் பெரும் பேருகக் கருதப்படுகிறது.

அதில் அங்கத்தினராகச் சேர்த்து கொள்ளும் நிகழ்ச்சி இவ்வாறு ஆரம்பமாகிறது;

ஒரு பெரிய மண்டபத்தில் எல்லாரும் கூடுகிறார்கள். விளக்குகள் அணைக்கப்படுகின்றன. ஒரு மெழுகுவர்த்தி மட்டும் மேசை மீது எரிகிறது. டெல்டா ஸிக்மாச்ஸியின் மாவட்ட அலுவலர், அங்கத்தினராகப் போகிறவரின் கையைப் பிடித்து அந்த மெழுகுவர்த்தியைச் சுற்றிக் காட்டிவிட்டுப் பக்கத்தில் உள்ள ஒரு இருண்ட அறைக்கு அவரை அழைத்துச் செல்வார்.

அங்கே கீழ்க்கண்ட சபதத்தை எடுத்துக் கொள்ளும்படி செய்வார்.

"பத்திரிகைத் தொழில் என்பது மகோன்னதமானது. மக்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு மக்களை ஏமாற்றி சர்வாதிகாரமாகப் போகாதபடி பார்த்துக் கொள்வேன் என்று ஆண்டவன் மேல் ஆணையாக உறுதி கூறுகிறேன். சுதந்திரம் என்ற விளக்கு அணைந்து சர்வாதிகார இருள் கவ்வும் பொழுது இழந்த சுதந்திரத்தை மீட்பது தான் என் முதல் பணி. இந்தப் பணியில் எந்தவிதமான இன்னல்கள் ஏற்பட்டாலும் அதைச் சகித்துக் கொள்வேன். இது சத்தியம்."

— இந்தச் சபதம் தான் "பத்திரிகை" என்ற சொல்லுக்கு உரிய ஒவ்வொரு நாளேட்டின் லட்சிய வாசகமாக இருக்க முடியும்.

அரசியல்வாதிகள் [illegible]கள்; போவார்கள்; மா[illegible] வருவார்கள் போவார்கள்; வீரர்களைகள் வருவார்கள்; வீழ்வார்கள்.

ஆனால் பத்திரிகைகள் என்றும் இருக்கும். அவற்றின் குரலும் என்றும் ஒலிக்கும். அது சத்தியத்தின் குரல்; தருமத்தின் குரல்; நீதியின் குரல் அது சிரஞ்சீவிக்குரல். (ம)

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர்: சுவாதினர் ராஜூம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு 12. (இலங்கை) தபால் பெட்டி 1613. வெளியீட்டு திகதி 16 அக்டோபர் 1983.
[illegible] 5, Gunasena Mawata, Colombo 12, P. O. Box 1613;

இலாபத்தின் ஏணி!
GTE
yellow pages

கே. வாடிக்கையாளர் வீட்டிற்கும், உங்கள் கடை அல்லது சுத்தோருக்கும் இடைப்பட்ட குறுகிய பாதை எது?
ப. தொலைபேசித்தொடர்பு, அதுவே உங்கள் இலாபத்தின் ஏணி, எனவே ஒருவிளம்பரத்தை வழங்கி யெலோ பேஜெஸின் வளத்தைப்பெறுங்கள்!

யெலோ பேஜெஸ் என்பது ஒரு தையற்காரரை, ஒரு இரும்புக் கடையை, ஒரு பியானோ கருவி கூட்டுபவரை, அல்லது அரத்தாள் முதல் விலங்குப்பண்ணைவரை மக்களுக்குத் தேவைப்படும் எந்தச் சேவையையும், மக்களுக்குக் காட்டும் வாடிக்கையாளர் வழிகாட்டி, வகுப்பு வாரிப்படுத்திய தொலைபேசிவழிகாட்டி.

எனவே யெலோ பேஜெஸின் ஒரு விளம்பரம் வாடிக்கையாளர் ஒருவர் உங்களைக் கண்டு பிடிக்க, ஒரு தொலைபேசி அழைப்போடு உங்கள் விற்பனையைப் பெருக்க,வழி செய்கிறது.

உங்கள் மகோன்னத விற்பனையாளன்

யெலோ பேஜெஸ் உங்கள் மகோன்னத விற்பனையாளன் என்பதற்குப்,பல காரணங்களுண்டு அவற்றில் சில இதோ!

★ உங்கள் விற்பனைப் பண்டத்தை ஏற்கனவே தேடும் மக்களோடு உங்கள் யெலோ பேஜெஸ் விளம்பரம் நேரடியாகப் பேசுகிறது.
★ உங்கள் விளம்பரம் வருடத்தின் 365 நாளும், நா[illegible] 24 மணி நேரமும் உங்கள் பண்டத்தை விற்ப[illegible] வாடிக்கையாளர் வீட்டிலேயே காத்திருக்கிறது.
★ 90% தொலைபேசிப்பாவனையாளர் கருத்துப்படி, அறிமுகப்படுத்தப்பட்ட நாடுகளில் முதற்தரமான வாடிக்கையாளர் வழிகாட்டியென்ற தகுதியைப் பெற்றுள்ளது.

யெலோ பேஜெஸ் ஜீரீச இலங்கை தொலைபேசி வழிகாட்டிக் கூட்டுத்தாபனம் அமெரிக்க ஜீரீச தொலைபேசி வழிகாட்டிக் கூட்டுத்தாபனத்தின் ஒரு அங்கமாகும்.

உலகெங்கும் 20 நாடுகளில் 6 மொழிகளில் 900 வழிகாட்டிகளைப் பிரசுரிக்கும் இந்நிறுவனம் 1984 ம் ஆண்டின் இறுதிக்காலாண்டுப் பகுதியில் இலங்கையில் தன் முதலாவது வெளியீட்டை வெளியிடும்.

யெலோ பேஜெஸ் சரித்திரத்தின் சக்தி மிகு வாடிக்கையாளர் வழிகாட்டி. இப்போது இலங்கையிலும் கிடைக்கிறது! பொன்னான வாய்ப்பை மண்ணாக்கலாமா?

மேலதிக விபரங்களுக்கு,
தொடர்பு கொள்ளுங்கள்,
ஜீரீச இலங்கை தொலைபேசி
வழிகாட்டி (தனியார்)
நிறுவனம்.
த.பெ.2028 கொழும்பு.
தொலைபேசி 546101.

GTE
yellow pages

யெலோ பேஜெஸ்.
விளம்பரம் விரயமாவதில்லை!

HTL GTE